# திருக்குறளும் பரிமேலழகரும்

TNSDA
04829

## புலவர் குழந்தை

# திருக்குறளும் பரிமேலழகரும்

2வது உலகத்தமிழ்க் கருத்தரங்கு மாநாடு
கலைக்காட்சிக் குழு
சென்னை

புலவர் குழந்தை

இளங்கோ புத்தகசாலை
புத்தகவியாபாரிகள்.. ஈரோடு

முதற் பதிப்பு: 1952
இரண்டாம் பதிப்பு: 1964
உரிமை ஆசிரியர்க்கே

894.8111
இழந்

4829
5 JUN 1975

## புலவர் குழந்தையின் பிறநூல்கள்

1. இராவண காவியம்
2. திருக்குறள் குழந்தையுரை
3. திருக்குறளும் பரிமேலழகரும்
4. தொல்காப்பியர்காலத் தமிழர்
5. யாப்பதிகாரம்
6. இன்னூல்
7. நெருஞ்சிப்பழம் (செய்யுள்)
8. நீதிக்களஞ்சியம் உரை
9. திருநணாச்சிலேடைவெண்பா
10. தமிழ்வாழ்க (நாடகம்)
11. தமிழெழுத்துச் சீர்திருத்தம்
12. கொங்குநாடும் தமிழும்
13. கொங்குக் குலமணிகள்
14. தீரன் சின்னமலே
15. அருந்தமிழ் விருந்து
16. அருந்தமிழ் அமிழ்து
17. பூவாமுல்லே
18. உலகப் பெரியோன் கென்னடி
19. அரசியலரங்கம்

**விலே ரூ. 2-50**

ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னே-1.

# முன்னுரை

எனது குறளுரை வெளிவந்து மூன்றாண்டுக ளாகின்றன. ஆனால், இன்னும் சில தமிழ் இளை ஞர்கள் 'திருக்குறளுக்கு எளிய உரை வேண்டும். உண்மை யுரைவேண்டும்' என்று அடிக்கடி செய்தித்தாள்களில் எழுதிவருகின்றனர். இது எதைக் காட்டுகிறது? இன்னும் தமிழ் மக்கள் எனது உரையைச் சரியாகப் புரிந்து கொள்ள வில்லை என்பதை யன்றோ காட்டுகிறது? புரிந்து கொண்டிருந்தால் அவ்வாறு எதற்காக எழுது கின்றனர்? தமிழ்மக்கள் அவ்வாறு புரிந்து கொள்ளாமைக்குக் காரணம், பரிமேலழகர் உரை முழுவதையும் கருத்துடன் படித்து, அவர் வலிந்து புகுத்தியுள்ள மாறுபட்ட அயற் கருத்துக் களைச் சரியாகத் தெரிந்து கொள்ளாமையே யாகும்.

தமிழ்மக்களின் இக்குறைபாட்டை நீக்கவே, '**திருக்குறளும் பரிமேலழகரும்**' என்னும் இந் நூலை எழுதலானேன். இதைப் படித்தாவது தமிழ் மக்கள் உண்மை யுணர்வார்களாக.

பவானி
6-5-52

**புலவர் குழந்தை**

---

## இரண்டாம் பதிப்பு

ஆனால், இந்நூல் வெளிவந்த பின் அக்குறை பாடு நீங்கிவிட்ட தென்பது, **திருக்குறள் குழந்தை யுரை—ஐந்தாம் பதிப்பு** வெளிவர இருப்பதே தக்க சான்றாகும்.

பவானி
25—2—64

அன்புள்ள,
**குழந்தை**

# பொருளடக்கம்


## 1. திருக்குறள்

1. குறளார்வம் ... 1
2. தமிழர் வீழ்ச்சி ... 3
3. தமிழர் எழுச்சி ... 6
4. குறளின் பெருமை ... 7
5. குறள் வாழ்வு ... 8

## 2. பரிமேலழகர் உரை

1. உரையாசிரியர் ... 11
2. பரிமேலழகர் ... 12
3. திருவள்ளுவமாலை ... 15

## 3. ஐயமகற்றல்

1. வள்ளுவர் காலநிலை ... 20
2. வடபுலத்தார் ... 21
3. நூல்செய்த முறை ... 27
4. நூன் மரபு ... 28
5. சொற்பொருள் விளக்கம் ... 30

## 4. உரைப்பாயிர விளக்கம்

1. பாயிரம் ... 33
2. உரைப்பாயிரம் ... 34

## 5. ஆரியக் கொள்கை

1. வருணாச்சிரம தருமம் ... 63
2. சாதி வேற்றுமை ... 73

3. வேள்வி ... 77

4. துறக்கம், நரகம் ... 82

5. புராணக் கதை ... 85

6. பெண்ணடிமை ... 92

7. பச்சை யாரியம் ... 97

6. சமயக் கருத்து

1. வினை ... 104

2. பிறப்பு ... 108

3. வீடு ... 122

4. ஆராய்ச்சி ... 127

5. கடவுள் ... 137

6. ஊழ் ... 139

7. மாறுபட்ட உரை ... 144


## குறள் அகரவரிசை


அடக்கமம 83
அந்தணரென் 154
அருளில்லார் 125
அருட்செல் 76
அவிசொரிந் 49
அளவின்கண் 116
அறத்தாறிது 105
அறம்பொருளின் 97
அறனிழுக் 79
ஆபயன் 155
ஆராவியற் 126
ஆற்றினி 156
இகலின் 158
இயற்றலும் 80
இரத்தலி 48
இரந்துமு 48, 107,
இருந்தோம் 70
இருமைவ 122
இருள்சேர் 104
இலனென் 113
இல்வாழ்வா 64
இணைத்துணைத் 78
ஈன்றபொ 94
உரனென்னு 123
உற்றநோய் 153
ஊர்ரொல் 86

எப்பொருள் 51
எழுபிறப்பு 109
எழுமையெ 110
எள்ளாமை 148
ஏந்தியகொ 90
ஐந்தவித் 86
ஒருமைக்கண் 119
ஒருமைச் 120
ஒருமையுள் 111
ஒழுக்கத்து 63
ஒழுக்க 55
ஒழுக்க கு 70
ஓர்ந்துகண் 51
கருவியும் 159
கேடறியா 157
கொல்லான் 117
சிறப்பீனும் 144
சிறப்பொடு 161
சுழன்றுமேர் 48
செவியுண 153
தம்பொருள் 80
தவஞ்செய் 115
தவமுந்த 146
தனக்குவ 109
தாளாற்றித் 144
தீயவைதீ 112
தீவினையார் 105
துறந்தார்க் 65
தூஉய்மை 125
தென்புலத் 67
நல்லாறெ 126
நன்றுகுமா 50, 149
நாடாது 122
நிலவரை 145
நிலையஞ்சி 148
பற்றுகப 150
பாத்தூண் 113
பிறப்பென் 118
பிறப்பொக் 46, 74
புத்தேளுல 84
பெறுமவற் 93
பெற்றார்ப் 92
பொய்யாமை49
பொருளாளு 49, 159
பொருளல் 151
பொருள்நீங் 114
மடியிலா 87
மறப்பினும் 72
முறைசெய் 156
மேற்பிறந் 47,73
வகுத்தான் 106
வன்கண் 160
வேண்டிய 147

# திருக்குறளும் பரிமேலழகரும்

## 1. திருக்குறள்

### 1. குறளார்வம்

இன்று எங்கு பார்த்தாலும் திருக்குறள் திருக்குறள் என்னும் ஒலியே கேட்கப்படுகிறது. தென்றற் காற்றுத் தமிழ் மணங் கமழ வீசுகின்றது என்னும் தமிழ் நூல்கள். இன்று தென்றலே யன்றி, வாடை, கொண்டல், கோடை என்னும் எல்லாக் காற்றும் குறள் மணங் கமழ வீசுகின்றன எனல் பொருள் பொதிந்த பொன்னுரையே யாகும். அவ் வூரில் திருவள்ளுவர் திருநாள், இவ்வூரில் திருக்குறள் மாநாடு, உவ்வூரில் திருக்குறள் மன்ற ஆண்டுவிழா என்னும் செய்தியே இன்று செய்தித்தாள்களில் வெளிவரும் செய்திகளில் சிறந்த செய்தியாகி விட்டது. திருக்குறளைப் பற்றிய செய்தி யில்லாச் செய்தித்தாள்களே இன்று கிடையா. எந்த ஓர் இன்றியமையாத செய்தியையும் இருட்டடிப்புச் செய்யும் இதழ்களும் குறள் பற்றிய செய்தியை மட்டும் ஒருவாறு வெளியிட்டே வருகின்றன. குறள் இன்று அவ்வளவு முதன்மை பெற்றுவிட்டது.

திருவள்ளுவர் மன்றம், திருவள்ளுவர் செந்தமிழ்க் கழகம், திருக்குறள் மன்றம், திருக்குறள் ஆராய்ச்சிக் கழகம், திருக்குறட் பயிற்சிக் கழகம் எனப் பல பெயர்க ளால் இன்று பட்டிதொட்டி யெல்லாம் திருக்குறள் பரப்பப் படுகிறது. எங்கு பார்த்தாலும் திருக்குறள் வகுப்பு நடத்தப்படுகிறது. திருக்குறள் பற்றிய ஆராய்ச்சிகள் பல வெளிவந்துகொண்டே யிருக்கின்றன. திருக்குறட் பேச்சாளர்களுக்கு இன்று தமிழ் நாட்டில் நல்ல கிராக்கி.

திருக்குறள் கலவாமல் பேசும் எந்த ஒரு மேடைப் பேச்சாளரையும் இன்று காணமுடியாது. திருக்குறளை எடுத்துக் காட்டுவதைப் பெருமையாகக் கொள்கின்றனர். திருக்குறள் இன்னதென்று தெரியாதவர் கூடத் தம் பேச்சில் இரண்டொரு குறளைக் கலவாமல் பேசுவதில்லை.

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

''எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு''

''பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று''

''ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்''

என்பன போன்ற சில குறட்பாக்களைக் கூறித் தமது குறளறிவைக் காட்டிக் கொள்வோர் பலர். இடத்துக் கேலாமலே இரண்டொரு குறளை அங்கு மிங்கும் கூறு வோர் சிலர். பொருள் தெரியாமலே இரண்டு மூன்று

குறளை ஒப்பிப்போரும் உண்டு. தமக்கும் திருக்குறள் தெரியும் என்று காட்டிக் கொள்வதில் இன்று தமிழர்கள், தமிழ்ப் பேச்சாளர்கள் முனைந்து நிற்கின்றனர்.

## 2. தமிழர் வீழ்ச்சி

ஒரு காலத்தே இமயமுதல் குமரிவரை ஒரு மொழி வைத்தாண்ட தமிழன், பின்னொரு காலத்தே 'தமிழன்' எனத் தன் பெயர் சொல்லவும் வாயும் மனமும் கூசும் நிலையையடைந்தான்; தன்னை 'நான் ஒரு தமிழன்' எனப் பெருமையோடு கூறிக் கொள்ளவும் குற்றமெனக் கடிந்து கூறப்படும் நிலையை அடைந்தான். 'தமிழ்நாடு தமிழருக்கே' என, 'எலிவளை எலிகளுக்கே' என ஏளனஞ் செய்த காலமும் ஒன்றுண்டல்லவா? தமிழ் எனது தாய்மொழி, தமிழ் ஒரு தனிமொழி, தமிழ் இனிய எளிய இயல்பு மொழி எனக் கூறுவது தவறெனக் கருதப்பட்டது. தமிழர் ஒரு தனி யினம் என்பதை அறியா அறிவிலியானான் தமிழன்.

இமயத்தில் புலிவிற்கெண்டை பொறித்து ஏக்கழுத்த முடன் வாழ்ந்த தமிழன் தன்னாட்சி யிழந்து தன்னுரிமை யிழந்து, தன்னிலை தாழ்ந்து, தன்னியல் பிறழ்ந்து அய லார்க்கு அடிமையானான். மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்ன மானமுடைய மறத்தமிழன் தன்மானத்தையும் இழந்தான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், கங்கைகொண்ட சோழன் எனத் தன் முன்னோர் பெயரை மொழிவதும் குற்றமெனக் கருதினான்; தமிழரைப் பழித்த கனகவிசயர் என்னும் ஆரிய வரசரின் முடித்தலையில் கண்ணகி படிமக்கல் ஏற்றிவந்த சேரன் செங்குட்டுவன் பெயரைச் சிந்திப்பதும் தீதென எண்ணினான்; தமிழரின் வலியறியாது வந்த வடபுலத்தரச னை மோரியனின் புறத்தைக் கண்டு செம்மாப்போடு சிரித்து

தின்ற *பழையன் மோகூரின் பண்பைப் பகர்வதும் பழு தெனக் கொண்டான்; புகழொடு வாழ்ந்த தன் முன்னோர் பெயரையும் அறியாத முழுமகன் ஆனான் தமிழன்; இல்லை, ஆக்கப்பட்டான். தான் யார், தன் முன்னோர் யார், அன்னாரின் வாழ்க்கை வரலாறு என்ன, தன் வழிமரபு யாது? என்பன போன்ற தன்னிலை யறியா ஊமன் ஆனான் தமிழன். 'நானார், என்னுள்ளமார் ஞானங்களார்' என்பன போன்ற தன் வாழ்வுக்குப் புறம்பான ஏதெதையோ அறிவ தில் ஈடுபட்டுக் காலத்தைக் கழிக்கலானான் தமிழன்.

தமிழ் நாட்டில், தமிழ் மக்கள் கூட்டத்தில் பேசப்படும் பேச்சுக்களில், ஆரியப் பாதுகாப்பு நூல்களான கீதையும், பாரதமும், இராமாயணமும் எடுத்துக்காட்டு நூல்களாக விளங்கினவே யன்றி, திருக்குறள் முதலிய தமிழ் நூல்கள் இடம் பெறவில்லை. எங்கு பார்த்தாலும் இராமாயணச் சொற்பொழிவுகள், பாரதச் சொற்பொழிவுகள், புராணப் பேச்சுக்கள். திருக்குறட் பேச்சோ, சிலப்பதிகாரப் பேச்சோ இல்லை. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்க நூல்கள் தமிழ்மக்கட்குத் தெரியாப் பொருள்களா யின. தொல்காப்பியம் என்று ஒரு சிறந்த பழந்தமிழ் நூல் உண்டு என்பது தமிழர்க்கு அறவே தெரியாது.

"ஆதி சிவன்பெற்று விட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவு மிலக்கணஞ் செய்து கொடுத்தான்"

—பாரதியார்.

எனத் தமிழ்மொழியுங் கூட ஆரியமக்கள் பெற்று

---

*பழையன் மோகூர்—சங்ககாலச் சிற்றரசன்; தமிழர் மறத்தை மதியாது தமிழ்நாட்டின்மேல் படையெடுத்து வந்த வடவரசனாகிய மோரியனை முதுகுகாட்டி யோடும்படி செய்தவன்.

வளர்த்து அன்போடு தமிழர்க்குக் கொடுத்தார்கள் எனப் பேசப்பட்டது.

[1]உடன்பிறப் பன்புக்குப் பாண்டுவின் மக்களும் தசரதன் மக்களும் எடுத்துக்காட்டாக விளங்கினுர்களே யொழிய [2]நெடுஞ்சேரலாதன் மக்கள் விளங்கவில்லை. மாதர் மாண்புக்குச் சீதையும் துரோபதையும் சான்ருனர்களே யன்றிக் [3]கோப்பெருந் தேவியும் மாதவியும் சான்ருக வில்லை. ஆண்மைக்கு அர்ச்சுனனும் இராமனும் முன்னின்ருர்களே யல்லாமல் செங்குட்டுவனும் கரிகாலனும் முன்னிற்கவில்லை. கொடைக்குக் கன்னனும் நளனும் முன்வந்தார்களே தவிரக் காரியும் பாரியும் முன்வரவில்லை. அருந்ததி கற்பரசியானுளே யல்லது கண்ணகி கற்பரசி யாகவில்லை. அரசியற்குச் சாணக்கியன் சான்ருனே யொழிய வள்ளுவன் சான்ருக வில்லை. காரிகையார் தீரத்துக்குக் கைகேசியும் ஜான்சி ராணியும் கைகொடுத்தார்களே யன்றி [4]அல்லியும் முத்து நாச்சியும் கைகொடுக்கவில்லை. நட்புக்கு நரநாராயணர் (அர்ச்சுனனும் கண்ணனும்) எடுத்துக்காட் டானுர்களே யல்லாமல் [5]கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும்

---

[1] உடன்பிறப் பன்பு—சகோதர அன்பு. [2] நெடுஞ்சேரலாதன் மக்கள்—செங்குட்டுவனும் இளங்கோவும். இளங்கோ, அரசு தனக்குரியதெனக் கூறிய நிமித்திகன் சொல்லைப் பொய்யாக்கித் துறவு பூண்டு அண்ணனுக்கு அரசுகிடைக்கும்படி செய்தவன். [3] கோப்பெருந்தேவி—கோவலனைக் கொன்ற நெடுஞ்செழியன் மனைவி. கோவலனைக் கொன்றது தவறெனவுணர்ந்து பாண்டியன் இறந்ததும் உடனுயிர் நீத்தவள். மாதவி—பொதுமகளாக இருந்தும் கோவலனிறந்ததும் துறவு பூண்டவள். [4] அல்லி—அர்ச்சுனன் மனைவி; பாண்டிக்குமரி; பாண்டவரைப் புறமுதுகு காட்டி யோடும்படி செய்தவள். முத்துநாச்சி—கட்டபொம்மன் தங்கை; ஆண்கோலம் பூண்டு வெள்ளைப் படையோடுவீரப்போர் புரிந்தவள் [5] கோப்பெருஞ் சோழன் உறையூர், பிசிராந்தையார் பாண்டி நாடு இருவரும் கேள்வி மூலம் உணர்ச்சியொன்றி நண்பரானவர். கோப்பெருஞ்சோழன் உண்ணுநோன்பிருந்து உயிர்விட, பிசிராந்தையார் உணர்ச்சியால் அறிந்து உறையூர் வந்து உடனுயிர் விட்டவர்.

எடுத்துக்காட்டாகவில்லை. ஆடலுக்கு அரம்பையர் அரங்கேறினர்களே யொழியத் தமிழ் விறலியர் அரங்கேறவில்லை. இசைக்குக் கந்தருவர் பண்ணமைத்தார்களேயல்லது பாணர் பண்ணமைக்கவில்லை. தெருக்கூத்தரசன்கூட மனுமுறை தவருது செங்கோல் செலுத்தினனே யன்றிக் குறள்முறை தவருது செங்கோல் செலுத்தவில்லை. இதுஒருகால நிலை!

## 3. தமிழர் எழுச்சி

பின்னர் ஒருவாறு தன்னையறியத் தலைப்பட்டான் தமிழன்; தனது நிலையை உணர முயன்முன்; தன் முன்ஞேர் வாழ்க்கை வரலாற்றை ஆராய முற்பட்டான்; தன்னிலையையும் தன் முன்ஞேர் நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் உறுதி கொள்ளலானன்; எங்கு பார்த்தாலும் தமிழன், தமிழ்நாடு, தமிழ், தமிழின் பெருமை, தமிழர் பண்பாடு, தமிழர் தனிப்பெருமை, தமிழர் வரலாறு என்ற பேச்சே பேசப்பட்டது. தமிழன் என்ற பெயரைக் கேட்டுத் தலைநிமிர்ந்து நடந்தான் தமிழன், தமிழன் சிறந்தவன், உயர்ந்தவன், பழமையும் பெருமையும் உடையவன், தனிப்பட்ட பண்பாடுடையவன், உயரிய ஒழுக்கமும் விழுப்பமும் உடையவன், தமிழினம் தனியினம் எனக் கொஞ்சமும் அஞ்சாது நெஞ்சழுத்தத்துடன் கூறலானன்; தன் முன்ஞேர் வாழ்க்கை வரலாறு பொறித்த தொன்னூல்களைத் துருவிப் படிக்கத் தொடங்கினன் தமிழன். அவ்வளவுதான்! தமிழுக்கு நல்ல காலம் பிறந்தது. இந்த நல்ல காலந்தான் திருக்குறள் இன்று தமிழர்களால் போற்றிப் புகழப்படுவதற்குக் காரணம். தமிழுக்கும் தமிழர்க்கும் இந் நல்லகாலத்தை உண்டாக்கிய பெருமை யாரைச் சேரினும் அவர் வாழ்க!

தமிழர் பண்பாட்டுக்குச் சான்ருகவுள்ள பழந்தமிழ்நூல்களுள் தொல்காப்பியமும், திருக்குறளுமே தலையாய நூல்களா

கும். தொல்காப்பியம் இலக்கண நூல், திருக்குறள் இலக்கிய நூல். தொல்காப்பியம், தொல்காப்பியர் என்னும் பழந்தமிழ்ப் பெரியாரால் செய்யப்பட்டது; திருக்குறள் திருவள்ளுவர் என்னும் பழந்தமிழ்ப் பெரியாரால் செய்யப்பட்டது. இவ்விரு நூலும் தமிழ் மக்களின் இரு கண் போன்றவை; கண்ணிற் கருமணி போன்றவை; கருமணியிற் பாவை போன்றவை; பாவையின் ஒளி போன்றவை; பழந்தமிழர் வாழ்க்கை வரலாற்றை நம் கண்முன் கொண்டுவந்து காட்டும் காலக்கருவி யெனலாம். தமிழ் மக்களால் இவ்வளவு நாளாய் மறக்கப்பட்டிருந்த—தமிழ் மக்கள் அறியமுடியாது மறைக்கப்பட்டிருந்த அவ்விரு பழந்தமிழ்க் கருவூலங்களுள் திருக்குறள் இன்று எப்படியோ தமிழ்மக்களால் தம்நூலெனா அறிந்து போற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு தமிழனும் 'குறள் குறள்' என்று மனங் கூசாமல் வாய்விட்டுக் கூறி வருகிறான்.

## 4. குறளின் பெருமை

'திருக்குறள் ஒரு தனித் தமிழ் நூல். திருக்குறள் அயற்கொள்கை எதிர்ப்புநூலே யன்றி எந்த ஒரு அயற்கொள்கையையும் உடன்பட்டுக்கூறும் நூலன்று. தமிழர் வாழ்வே திருக்குறள். திருக்குறளே தமிழர் வாழ்வு என்னும் அவ்வளவு இன்றியமையாச் சிறப்பினையுடைய நூல் திருக்குறள்; உள்ளதை உள்ளபடியே உயரிய முறையில் எடுத்துரைக்கும் உண்மை நூல்; தமிழர் வாழ்வின் படப்பிடிப்பு! பழந்தமிழர் நாகரிக நல்வாழ்வை அப்படியே நமக்குக் காட்டும் களங்கமற்ற காலக்கண்ணாடி! தொன்மையும் எதிர்மையும் ஒருங்கொப்பக் காட்டுந் தொலைநோக்காடி! தமிழ் மக்களின் வாழ்க்கைச் சட்டம்! தமிழ் மக்களுக்கு வள்ளுவர் வகுத்தமைத்து வைத்த பாதுகாப்புப்படை! ஏன்? தமிழர்க்கு மட்டுமன்றி, குறள் உலகப் பொது நூல்! மக்கட் பண்பாட்டுச் சரக்கறை! எக்காலத்துக்கும் உரிய நூல்!

இறவா நூல்! காலங் கடந்த நூல்!' எனத் திருக்குறளின் பெருமையைத் திசையெட்டும் பரப்பி வருகிருன் தமிழன்; திருக்குறள் படியாதவன் தமிழனல்லன் என எடுப்புடனும் வெடுப்புடனும் கூறிக் கொள்கிருன். வாழ்க குறள்!

## 5. குறள் வாழ்வு

தமிழ் மக்கள் திருக்குறளிடத்து இன்று காட்டும் ஆர்வத்தில், அக்கறையில் இவ்வளவு நாளாய் நூற்றிலொரு பங்கு காட்டிவந்திருப்பரேல் இன்றுள்ள இழிநிலையை அடைந்திருக்க மாட்டார்கள். தமது முன்னோர் போலவே குறள் நெறியில் நடந்துவந்திருப்பரேயானுல் இத்தனை யித்தனை சாதிப் பிரிவாலும் சமயச் சளக்காலும் தமிழர் இவ்வாறு சீர்குலைந்திருக்க மாட்டார்கள். வள்ளுவர் காட்டிய வழியில் சென்றிருந்தால் தமிழினம் இன்று இவ்வாறு சிதைந்து சில்லாந்தட்டியாய்ப் போயிருக்காது. குறளைப் படித்துக் குறள்வாழ்வு வாழ்ந்துவந்திருப்பரேல் தமிழர் இவ்வாறு மானமிழந்து மதிகெட்டு அயலார்க் கடிமையாய் அடங்கி யொடுங்கி அல்லலுற் றலையவேண்டிய நிலையேற் பட்டிருக்காது. வள்ளுவர் வகுத்த வழியில் நடந்திருப்பரேல் சூடு சொரணையற்றுச் சூத்திரர்கள் எனத் தங்களை ஒப்புக் கொண்டு, சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்து உழலும் நிலை ஏற்பட்டிருக்காது தமிழர்க்கு.

குறளை முறையோடு படித்துவந்திருந்தால் இமயத்தில் விற்பொறித்த செங்குட்டுவனைப் போல் நாம் செம்மாந்த வாழ்வு வாழ்ந்திருப்போம்; ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியை அடக்கியாண்டிருக்காது; வேங்கைபோன்ற வீரங் குன்றியிருக்காது; வழிவழியாகத் தனியாட்சி நடத்திவந்த தமிழ்நாடு இன்று அயலாரடிக்கீழ் அடிமைப்

பட்டுக்கிடக்காது; இமயத்தில் புலிவிற்கெண்டை பொறித்து இறுமாப்போடு வாழ்ந்துவந்த தமிழர்க்கு இன்றுஎதற்கெடுத்தாலும் இமயத்தை நோக்கிக் கையேந்தி நிற்கும் இழிநிலை நேர்ந்திருக்காது. குறள் வாழ்க்கை நடத்திவந்திருந்தால் தமிழ்க்குலம் இன்றுள்ள இக் கொடும்பாட்டு நிலையை அடைந்திருக்காது.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த திருக்குறளைப் பின்னேன் தமிழர்கள் போற்ருது புறக்கணித்தனர்? ஏன் படித்துப் பயன் பெருதிருந்தனர்? திருக்குறள் என்று ஒரு பழந்தமிழ் நூல் உண்டு என்பது தமிழர்க்குத் தெரியாதா என்ன? தம் முன்னேர் செய்துவைத்துப் போன நூலைக் கூடத் தெரிந்துகொள்ள முடியாத அவ்வளவு முழுமோசமான நிலையையா அடைந்துவிட்டனர் தமிழர்? இல்லை. தெரிந்தும் பின்னேன் அதை மூத்ததாரத்தைப் போலப் புறக்கணித்து வந்தனர்? பழந்தமிழர்களால் உயிரினும் பெரிதாக மதித்துப் போற்றிப் பயின்று வந்த குறள் பிற்காலத் தமிழர்க்கு ஏன் அவ்வாறு எட்டிக்காயாய்க் கசந்துபோய்விட்டது? காரணம் என்ன?

திருக்குறள் பழந்தமிழ் மக்களின் அகவாழ்வு புறவாழ்வு என்னும் இருவகை வாழ்க்கை முறைகளையும், அறம் பொருள் இன்பம் என முப்பாலாக்கி, இலக்கியச் சுவைபட அழகாக எடுத்தினிதியம்பும் இயற்றமிழ் நூல். சேர சோழ பாண்டியர் என்னும் செந்தமிழ் வேந்தரும், சிற்றரசரும் வள்ளுவர் வகுத்த அரசியலைத்தான் வழுவாது இனிது நடத்திவந்தனர். பழந்தமிழ் மக்களில் எவரொருவரும் வள்ளுவர் கிழித்த கோட்டைத் தாண்டி நடந்ததில்லை. கற்ருேன்றி மட்டோன்ருக் காலத்தின் முற்ருேன்றி மூத்த குடிவாழ்க்கையை யுடைய பழந்தமிழ் மக்களின் உயரிய வாழ்க்கை முறைகளைப் பிழிந்து வடித்தெடுத்த சாரமே திருக்குறள். தமிழ் நாகரிக நற்சாறுகொண் டாக்கிய

தீங்கட்டியே திருக்குறள். தமிழ் நாகரிகத்தோடு ஆரிய நாகரிகங் கலந்து, தனித்தமிழ்ப் பண்பாட்டைக் கெடுத்து விடாமல் தடையாக இட்ட உயர்திண் கரையே திருக்குறள்.

இத்தகைய மேம்பாடுடைய திருக்குறள், கலப்பட மற்ற தனித்தமிழ் நாகரிகங் கூறும் நூல் என்பதைப் பிற் காலத் தமிழ் மக்கள் அறிய முடியாது செய்துவிட்டனர் திருக்குறள் உரையாசிரியர்கள். திருக்குறள் ஆரிய மனு முதலிய நூல்களின் மொழிபெயர்ப்பு. ஆரிய நாகரிகத்தைப் பெயர்த்தெழுதியதே திருக்குறள். உயரிய ஆரியக் கொள்கைகளை மேற்கொண்டு, தமிழ் மக்கள் உயர்வடையும் பொருட்டு வள்ளுவரால் செய்யப்பட்ட ஆரிய நாகரிக வழிநூலே திருக்குறள் எனத் தமிழ்மக்கள் நம்பும்படி மருட்டிவிட்டன அப் பழைய உரைகள்.

---

# 2 பரிமேலழகர் உரை

## 1. உரையாசிரியர்

பண்டைக் காலத் தமிழ் மக்கள் இலக்கியம், இலக்கணம் ஆகிய எல்லாவகைத் தமிழ் நூல்களையும் பாட்டாகவே பாடிவந்தனர். இன்றுபோல் அன்று தனியாக உரைநடை நூல் இல்லை. பாட்டின் உரையே உரைநடையாகும். 'பாட்டுரை நூலே' (தொல், செ-79) என்னும் தொல்காப்பியச் சூத்திரம் பாட்டும் உரையும் தனித்தனி யாப்பென்றே கூறுகிறது. பண்டு நூலைப்போலவே அதன் உரையும் நன்கு மதிக்கப்பட்டு வந்தது. உரையாசிரியர் தனியாகவே இருந்துவந்தனர். நூலாசிரியர் போலவே உரையாசிரியரும் ஒப்ப மதிக்கப்பட்டு வந்தனர். பிறர் கருத்தறிந்து உரையெழுதுதல் கடினமாகையால் நூலாசிரியரினும் உரையாசிரியர் நன்கு மதிக்கப்பட்டு வந்தனர் எனல் மிகையாகாது. நூலாசிரியர் தாம் செய்த நூலுக்கு உரையெழுதும் வழக்கம் அன்றில்லை. "நூல் செய்தவன் அந் நூற்குரை எழுதான்." என்பது இலக்கணக் கொத்து.

உரையாசிரியர்கள் நூலாசிரியர் கருத்தறிந்து உரையெழுதுவதோடு நில்லாமல், தங்கள் கருத்துக்களை வலிந்து புகுத்தி உரையெழுதுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தனர். தங்கள் கொள்கைக் கேற்றவாறு நூலின் கருத்தையே மாற்றிவிடுவதும் உண்டு. வியாசர் செய்த வேதாந்த சூத்திரம் என்னும் நூலுக்குச் சங்கரர், இராமாநுசர், மத்துவர், நீலகண்டர் என்னும் சமயாச்சாரியர் நால்வரும் நால்வகையுரை யெழுதியுள்ளதும், அவ்வுரைகளைப் பின்பற்றுவோர் தனித்தனிக் கொள்கை யுடையராய் இருப்பதும் அறிக.

இவ்வாறே தமிழர் வாழ்க்கைச் சட்ட நூல்களான தொல்காப்பியத்திற்கும் திருக்குறளுக்கும் பல உரையாசிரியர்கள் போட்டி போட்டுக்கொண்டு உரையெழுதித் தம் தம் கொள்கைகளைப் புகுத்தியிருக்கிருர்கள். தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர், பேராசிரியர், சேனுவரையர், நச்சினுர்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் என்னும் அறுவர் உரையெழுதி யுள்ளனர். திருக்குறளுக்கு,

1. தருமர்
2. மணக்குடவர்
3. தாமத்தர்
4. நச்சினுர்க்கினியர்
5. பருதி
6. பரிமேலழகர்
7. திருமலையார்
8. மல்லர்
9. கவிப்பெருமாள்
10. காளிங்கர்

என்னும் பதின்மர் உரை யெழுதியுள்ளனர்.

"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பருதி பரிமே லழகர்—திருமலையார்
மல்லர் கவிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தா ரிவர்."

## 2. பழமேலழகர்

இவர்களில் பரிமேலழகரே கடைசியாக உரையெழுதியவராவர். பரிமேலழகர் உரையெழுதிய பின்னர் மற்ற உரைகள் பயில்வாரற்றுப் போயின. அவற்றுள் சில இறந்தே ஒழிந்தன. மணக்குடவர், பருதி, காளிங்கர் முதலிய சிலர் உரையே உயிரோடுள்ளன. இதுகாறும் பரிமேலழகர் உரையே திருக்குறளோடு ஒப்ப மதிக்கப் பட்டு வந்தது.

"திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர்தங்
கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்
பன்னு தமிழ்தேர் பரிமே லழகரெனும்
மன்னு முயர்நாமன் வந்து."

"பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலில்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி."

"விள்ளுவ ளுர்க்குந் திருக்காஞ்சி வாழ்பரி மேலழகன்
வள்ளுவ ளுர்க்கு வழிகாட்டி ளுன்றெண்டை கண்டலமே."

வள்ளுவரின் கருத்தறிந்து உரை யெழுதியவர் பரிமேலழகரே. மற்ற உரையெல்லாம் பரிமேலழகர் உரைக்கு ஒப்பாகா. பரிமேலழகர் உரையில்லாவிட்டால் திருக்குறளுக்கே சிறப்பில்லை. திருக்குறளுக்குப் பெருமை தருவதே பரிமேலழகர் உரைதான். இவர் உரையெழுதும்போது, ஒருமை நிலையில் (நிஷ்டை) இருந்து உண்மைக் கருத்தைக் கண்டு எழுதினுரெனவும், உரையை அரங்கேற்ற மதுரைக்குச் சென்றபோது, பாண்டியன் விருப்பப்படி இவர் ஒரு வெண்கலக் குதிரைமேலிருந்து உரையைப் படிக்க, அவ் வெண்கலப்பரி இடம்விட்டுப் பெயர்ந்ததால் பரிமேலழகர் எனச் சிறப்புப் பெயர் பெற்றனர் எனவும் போற்றிப் புகழப் படுகிறது.

இவ்வாறு இவர் உரையைப் புகழ்வதன் காரணம், அப்பர், சம்பந்தர், சுந்தரர் என்னும் தேவார ஆசிரியர்களாகிய சைவ சமய குரவர்கள் மூவரும், வைணவ சமய குரவர்களான ஆழ்வார்கள் பன்னிருவரும் கி. பி. 7-ஆம் நூற்றுண்டுக்கும் 9-ஆம் நூற்றுண்டுக்கும் இடைப்பட்ட காலத்தினராவர். பரிமேலழகர் கி. பி. 13-ஆம் நூற்றுண்டினராவர். அதாவது ஆரியச்சார்பு பற்றிய சைவ வைணவ சமயக் கொள்கைகள் தமிழ்மக்கள் உள்ளத்தில் நன்கு பதியப்பெற்ற காலத்தில் இருந்தவராவர். தமிழர் கலை, நாகரிகம், சமயம் எல்லாம் ஆரியத்தின் குட்டிகளேயாம் எனத் தமிழர் நம்பி, வடமொழிக்கும் ஆரியத்திற்கும் அடிமைப்பட்டு வாழ்ந்த

காலமும் அதுவேயாகும். எனவே, இச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, சமயச்சார்பற்ற திருக்குறளுக்கு அக்காலத்துக்கேற்பச் சமயக் கருத்துக்களையும் ஆரியக் கொள்கைகளையும் வலிந்து புகுத்தி உரையெழுதினர் பரிமேலழகர். இதனாலேயே பிற்காலத் தமிழர்கள் பரிமேலழகர் உரையை அளவுக்கு மீறிப் போற்றிப் புகழ்வாராயினர். ஆரிய நாகரிகம் வேறு, தமிழர் நாகரிகம் வேறு; திருக்குறள் ஆரிய நாகரிக எதிர்ப்பு நூலே யன்றி ஆரியக் கொள்கை உடன்பாட்டு நூலன்று என வெட்ட வெளிச்சமாக்கப்பட்ட இன்றுங்கூடப் 'பரிமேலழகர் உரையே உரை! இப்போது உரைக்கும் உரையெல்லாம் அதற்கு ஒப்பாகுமா?' என்று கூறும் தமிழறிஞர்கள் இருக்கும்போது, தமிழ் மக்கள் ஆரியப் பேரிருளில் மூழ்கிக் கிடந்த சென்ற நூற்ருண்டில் எவ்வாறு போற்றியிருப்பர் என்பதைக் கேட்கவா வேண்டும்?

பரிமேலழகர் காஞ்சீபுரத்தில் பிறந்தவர்; பார்ப்பன இனத்தினர்; வடமொழி தென்மொழிகளில் வல்லுநர்; உரையெழுதுவதில் மிகுந்த திறமையுள்ளவர். திருக்குறளின் பழைய உரைகளில் இவர் உரை மிகவும் சிறந்த உரை என்பது உண்மையே. ஆனல், பரிமேலழகர் ஒரு பார்ப்பனராகையால், தமிழ் நூல், உரை எழுதுவதன் மூலம் தமிழில் ஆரியக் கொள்கைகளைப் புகுத்தித் தனித்தமிழ் மரபைக் கெடுப்பதையே தங்கள் வாழ்க்கைப் பயனுக—கடமையாகக் கொண்ட பார்ப்பன அறிஞர்களைப் போலவே இவரும் தமது உரையால் தனித்தமிழ் நூலாகிய திருக்குறளை, ஆரிய மொழிபெயர்ப்பு நூலெனத் தமிழர் எண்ணும்படி செய்து விட்டார். தமிழர் நாகரிகம் என்னும் இன்சுவை மிக்க திருக்குறளாகிய நல்லாவின் பாலில், ஆரிய நாகரிகம் என்னும் கொடுங்குணமிக்க தம் உரையாகிய நஞ்சைக் கலந்து பாழ்படுத்திவிட்டார். பரிமேலழகர் உரை என்னும் கொடிய நஞ்சை அகற்றிலைன்றி முப்பால் நற்பாலாகாது

அவர் தம் கடமையைச் செய்தார். நாமும் நம் கடமையைச் செய்வதே கடமையாகும்.

## 3. திருவள்ளுவமாலை

திருவள்ளுவர் திருக்குறளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்றினபோது, வள்ளுவரையும் குறளையும் சிறப்பித்துச் சங்கப்புலவர்கள் பாடியதாக 53 வெண்பாக்கள் உள்ளன. அவை **திருவள்ளுவமாலை** எனப்படும். இது திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரை எத்தகையதோ அத்தகையதே. பரிமேலழகரின் உரை திருக்குறளின் பெருமையை எங்ஙனம் சிறுமைப்படுத்துகிறதோ அங்ஙனமே திருவள்ளுவமாலையும் சிறுமைப் படுத்துகிறது. அவ் வெண்பாக்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை செய்த சங்கப் புலவர்களால் செய்யப்பட்டவை யல்ல. பிற்காலத்தே யாரோ செய்து, சங்கப்புலவர்கள் செய்ததாக அன்னார் பெயர்களை எழுதி வைத்துவிட்டனர் எனலே பொருந்தும்.

திருக்குறள் அரங்கேற்றத் தொடங்கியபோது, அதற்குத் தலைமைதாங்கத் தகுதியுடையவர் யார் என்னும் ஐயப்பாடுண்டானது சங்கப் புலவர்களுக்கு. அப்போது, வானொலி (அசரீரி), 'மதுரையில் உள்ள உருத்திர சன்மர் என்னும் பெயருடைய ஊமைப் பிள்ளையே தலைமை தாங்கத் தகுதியுடையவர்' என ஒலித்தது, என்னும் கருத்துடையது முதற்பாட்டு.

இறையனார் பாட்டுக்குக் குற்றம் கூறியவர் எனும் நக்கீரரைத் தலைவராகக் கொண்ட சங்கப் புலவர்களுக்கா இவ்வையப்பாடு! ஏன் நக்கீரர் தலைமைதாங்கத் தகுதியுடையவரல்லரோ? தமிழர் நாகரிகச் சரக்கறையாகிய திருக்குறளைச் சீர்தூக்கிப் பார்க்கும் அரங்கேற்றத்திற்கு வாய் பேசத் தெரியாத ஓர் ஊமைப் பிள்ளையா தலைமை

தாங்க வேண்டும்? அதுவும் சிறுபிள்ளை வேறு. பேசும் பிள்ளை யொன்று மதுரையில் இல்லையா என்ன? மேலும், வானொலி சொல்லித்தானா சங்கப்புலவர்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்? ஒரு நூலரங்கேற்றத்திற்குத் தலைமை தாங்குந் தகுதியுடைய ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கும் அறிவுகூட இல்லாதவரா சங்கமிருந்து தமிழாய்ந்தனர்.

இறையனாரகப்பொருள் என்னும் இலக்கண நூலுக்கு இதே சங்கப்புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரும் உரை யெழுதினர். யார் உரை சிறந்தது என்னும் ஐயப்பாடு உண்டானது. அப்போது மதுரைச் சோமசுந்தரக் கடவுள் ஐந்தாண்டுப் பருவமுள்ள இம் மூங்கைப் பிள்ளையையே தான் தலைமை தாங்கும்படி செய்து, ஐயந்தீர்த்துக்கொள்ளு மாறு கட்டளையிட்டதாக இறையனாரகப்பொருளுரை கூறு கிறது. இது ஒரு கற்பனைக் கட்டுக்கதையே யாகும். 'உருத்திரசன்மர்' என்னும் பெயரே சங்ககாலப் பெயரன்று. இது பிற்காலப் பாட்டென்பது வெளிப்படை.

'உலகத்தார் விதிவிலக்குகளை யறிந்து உய்யும் வகையை ஆராய்ந்து, நான் முதலில் நான்முகன் நாவிலிருந்து நான்கு வேதங்களையும் சொன்னேன்; இடைக்காலத்தே பாரதத்தைப் பகர்ந்தேன்; இப்போது வள்ளுவன் வாக்கிலிருந்து திருக்குறளைச் சொல்லினேன்' என நாமகள் பாண்டியனைப் பார்த்துச் சொன்னதாக வுள்ளது இரண்டாவது பாட்டு.

"நாடா முதனான் மறைநான் முகனாவில்
பாடா இடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிய வென்றி இலங்கிலைவேல் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு"

என்பது அப்பாட்டு. நாமகள் பாடினாளென்பதே கற்பனைக் கூற்றாகும். நாடா-நாடி. பாடா-பாடி. பாரதத்தில்

மக்கள் கடைப்பிடித் தொழுகக்கூடிய விதிவிலக்குகள் என்ன உள்ளனவோ நாமகளைத்தான் கேட்கவேண்டும். வேதம், பாரதம் இவற்றினும் திருக்குறள் தாழ்ந்தது என் பதைக் காட்ட எழுந்ததே இப்பாட்டு.

மேலும், வள்ளுவர் அறம் பொரு ளின்பமே சொல்லி யிருக்கத் திருவள்ளுவமாலை 7, 8, 19, 33, 38, 40 பாடல்கள் வள்ளுவர் வீட்டைப் பற்றியும் கூறியிருப்பதாகக் கூறு வதை நோக்கப் பரிமேலழகர் உரையெழுதிய பின்னர், அவ்வுரைக்கு உறுதுணையாகப் பாடப்பட்டதே திருவள்ளுவ மாலை எனக்கொள்வதற்கு இடமேற்படுகிறது. 21-ஆம் பாட லில் வள்ளுவர் பெயராக வரும் மாதானுபங்கி என்பதும் சங்க காலச் சொல்லன்று.

''நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத் [தோன்
தான்மறைந்து வள்ளுவனுய்த் தன்னுரைத்த- நூன்முறை''(4)

''செய்யா மொழிக்கும் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொரு ளொன்றே'' (23)

''வேதப் பொருளாய் மிகவிளங்கி'' (24)

''மெய்யாய வேதப் பொருள்விளங்க'' (28)

''———தாமே தமைப் பயந்த
வேதமே மேதக்க ன'' (32)

''வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனர்
ஓதவழுக் கற்ற துலகு'' (37)

''வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழா லுரைசெய்தார்'' (42)

இவற்ருல், வடமொழி வேதங்களின் கருத்துக்களையே வள்ளுவர் திருக்குறளாகச் செய்தனர் என்பது வலியுறுத் தப்படுகிறது. 32ஆவது பாட்டு ஆரிய வேதமே திருக்குற

னுக்கு முதனூல் என்கின்றது. திருக்குறள் தமிழர் நாகரிகங் கூறு நூலாயிருக்க, தமிழுக்காகவே வாழ்ந்த சங்கப் புலவர்கள், வடமொழி வேதக்கருத்துக்களே திருக்குறள் என ஒருபோதும் மாறுபடக்கூறுர். 4-ஆவது பாட்டுத் தமிழ் வாழத் தான் வாழ்ந்த பாண்டியன் பாடியதாக உள்ளது.

"———முப்பாற்குப்
பாரதஞ்சீர் ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்" (30)

என்னும் பாட்டுத் திருக்குறளுக்குப் பாரதம், இராமாயணம், மனுநூல், வேதங்கள் என்னும் இவையே ஒப்பாகும்; ஒப்பாவன பிற இல்லை என்கின்றது. மனு நூலும் வேதமும் ஆரிய அற நூல்களாகையால் அவை ஒப்பாகும் என்பதிலாகிலும் கொஞ்சம் பொருளுண்டு. ஆரியப் புராணக் கதைகளாகிய பாரதமும் இராமாயணமும் தமிழர் அறநூலாகிய திருக்குறளுக்கு எங்ஙனம் ஒப்பாகும்? அவை இரண்டும் என்ன அற நூல்களா? தமிழர் ஒழுக்கம் கூறும் திருக்குறளுக்கு ஆரியப் புராணக் கதைகள் ஒப்பாகும் என்பது, பாலுக்கு நஞ்சொப்பாகும் என்பது போன்ற பொருந்தாப் பொய்க்கூற்றே யாகும்.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்னும் பாட்டைப் போலப் பிற்காலத்தில் யாரோ பாடியவையே திருவள்ளுவமாலையும். நான்மறை முடிவு—உபநிடதங்கள். மூவர் தமிழ்—தேவாரங்கள். முனிமொழி—வேதாந்த சூத்திரம். கோவை—திருக்கோவையார். திருமூலர் சொல்—திருமந்திரம். திருக்கோவையார்

நீங்கலாக மற்றவை சமய நூல்கள். எப்படித் திருக்குறளும் இவையும் ஒன்றோ நமக்கு விளங்கவில்லை. எனவே, பரிமேலழகர் உரை, திருவள்ளுவமாலை போன்ற மாசு நீங்கித் திருக்குறளை மாசிலாமணியாக்குதல் தமிழர் கடமையாகும். *

இன்னொன்று; ஆங்கில முதலிய அயல் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் மொழிபெயர்ப்புக்களெல்லாம் பரிமேலழகர் உரையைக் கொண்டு மொழி பெயர்த்தவையே யாகும். உலகமக்கள் திருக்குறளின் உண்மைக் கருத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமெனில், குறளின் உண்மைக் கருத்துடன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தல் இன்றியமையாத தாகும்.

---

* எனது "பூவாமுல்லை" என்னும் நூலில் உள்ள "வள்ளுவன் வாயது" "ஊமும் செவிடும்" என்ற கட்டுரைகளைப் பார்க்க.

# 3. ஐயமகற்றல்

திருக்குறளில் வரும் வானோர், தேவர், புத்தேளிர், வானகம், மேலுலகம், புத்தேளுலகம், எழுபிறப்பு, மறுமை முதலிய சொற்களால், திருக்குறள் ஆரியக் கொள்கைகளை உடன்பட்டுக் கூறும் ஒரு நூலெனவும், சமயச் சார்புடைய நூலெனவும் தமிழ் மக்கள் எண்ணி ஐயுற்று வருகின்றனர். அதற்கேற்பவே பரிமேலழகர் உரையும் அமைந்துள்ளது. அவ்வாறு தமிழ் மக்கள் கொள்ளும் அவ்வையப்பாடு தீர்ந்தாலன்றித் திருக்குறளை ஆர்வத்துடனும் அக்கறையுடனும் படிக்க மனந்துணியாது. ஆகையால், அவ்வையுறவை நீக்குதல் இன்றியமையாததாகும்.

## 1. வள்ளுவர் காலநிலை

வள்ளுவர் காலத்தே, அவர் காலத்திற்குப் பன்னெடுநாள் முன்னர் இமயமலைக்கு வடபாலிருந்து வந்து, இமய மலைக்கும் விந்த மலைக்கும் இடைப்பட்ட நிலமாகிய வட நாட்டில் குடியேறி வாழ்ந்துவந்த **ஆரியர்** என்போர் அத்துடன் அமையவில்லை. நாளடைவில் அவ்வடவர் சிலர் தமிழகத்தில் குடியேறி வாழ்ந்து வந்தனர். தமிழ் மக்கள் அவ் வடபுல மக்களை அன்புடன் வரவேற்றுப் போற்றி வந்தனர். அவ்வடபுல முதியோர், தமிழ்த் துறவிகளான அந்தணர்களைப் போல மதிக்கப்பட்டு வந்தனர். அவ் வாரியக் குடும்பத் தலைவர்களில் பெரும்பாலோர் தமிழ்ச் செல்வர்களிடம் பாங்கத் தொழிலின் ஒரு பகுதியான பார்ப்பனத் தொழில் செய்துவந்தனர் (குறள்-1103). வந்தேறிகளான அவ்வடபுல மக்கள் தங்கள் குலத்தொழிலெனக் கொலைவேள்வி செய்துவந்தனர் (259). அவ்வேள்வியால் பெரும்பயன் உண்டாகு மென்னும் அவ்வாரிய மக்கள் கூற்றினைத் தமிழ் மக்கள் ஒருவாறு நம்பிவந்தனர். (328)

அவ்வடவர் கொள்கைகள் சில தமிழரிடம் பரவியிருந்தன. அன்னார் கூறிய பல கற்பனைக் கதைகளைத் தமிழ் மக்கள் தெரிந்திருந்தனர்; சில கற்பனைகளை உண்மையென நம்பியும் வந்தனர் (1146). அவ்வாரியப் பிறவி வேற்றுமைப் பிணி தமிழ் மக்களை ஒருவாறு பிணிக்கத் தொடங்கியிருந்தது (972). அதனால், தமிழ் மக்களின் ஒன்றுபட்ட ஒருமை வாழ்வு சிதையத் தலைப்பட்டது. தமிழர் பண்பாட்டை ஆரியர் பண்பாடு விழுங்கிவந்தது.

## 2. வடபுலத்தார்

அவ்வடபுல மக்கள், தாங்கள் முன்பு இருந்துவந்த தங்கள் பழைய தாயகத்தில் வாழும் தம்மவர் **மேலானவர்;** இந் நாட்டு மக்களிலும் **உயர்ந்தவர்;** யாதொரு கட்டுப்பாடு மின்றித் தம் விருப்பம் போல் நடந்துகொள்ளும் இயல் பினர் (1072). அவர்கள் தலைவனான **இந்திரன்** மிக்க வலியும் பெருமையும் உடையவன் (25). அந்நாடு செல்வமிக்க நன்னாடு; துன்பமென்பது அங்கில்லை; இன்ப வடிவானது (1103). என்பன போன்ற தம் இனப் பெருமையைத் தமிழ் மக்கள் நம்பும்படி செய்திருந்தனர்.

தமிழ் மக்கள் அவ்வடவரின் பழந்தாயகத்தினரான அவ்வடபுலத்தாரை **வானோர்** (18,346), **விசும்புளார்** (25), **இமையார்** (906), **புத்தேளிர்** (58, 213, 234, 290, 966), **தேவர்** (1072), **தெய்வம்** (50), **புலவர்** (234) எனவும்; அவ்வடபுலத் தார் வாழ்விடத்தை **வானகம்** (101), **மேலுலகம்** (222), **புத்தேளுலகம்** (213, 234, 290). **புத்தேள் நாடு** (966, 1323), **தாமரைக்கண்ணானுலகு** (1103) எனவும் அழைத்து வந்த னர். காரணங் கண்டு ஒரு பொருளுக்குப் பல பெயரிட்டு வழங்கும் தமிழர் பெருமைக்கு இஃதொரு சான்றாகும்.

**வானவர்:** மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலின் உயர்ந்த மேட்டு நிலத்திலிருந்து சேர நாட்டை யாண்டுவந்த சேர

மன்னரை வானவர் (புறநானூறு 36, 126), வானவரம்பர் (புறம் 2, பதிற்றுப்பத்து 35, 38) என்று அழைத்துவந்தது போலவே, இமயமலையின் வடபால் உயர்ந்த மேட்டு நிலத்தில் வாழ்ந்து வந்ததால் தமிழ் மக்கள் அவ் வடவரை வானோர் என அழைத்தனர். வான்-உயர்வு. வானகம்-உயர்ந்த இடம். வானவர், வானோர்-உயந்த இடத்தில் வாழ்பவர். இதுபற்றியே ஆரியர் அன்னாரை 'உயர்ந்தவர்' என்றதும்.

**விசும்புளார் :** விசும்பு-வான். விசும்புளார்-விசும்பில் உள்ளவர்-வானகத்தார். 'மேலுலகம்' என்பதும் அப் பொருளதே. திசைபற்றி ஐரோப்பா மேனாடு எனவும், மலேயா முதலிய கிழக்கு நாடுகள் கீழ்நாடு எனவும் வழங்குதல் போல, இடம்பற்றி அது மேலுலகம் எனப்பட்டது. மேல்-உயரம். உலகம் என்பது நாட்டைக் குறிக்கும். "மாயோன் மேய காடுறை உலகமும்" (தொல் அகத்-5) என முல்லை நிலம் உலகம் எனப்படுதல் காண்க.

இமயவர்: இமயமலையில் வாழ்பவர் என்னும் காரணப் பெயர். அமச்சு-அமைச்சு என அகரத்திற்கு ஐகாரம் போலியானாற்போல, இமயவர்-இமையவர் என்றாயது. இமையோர்-இமயவர். இமையவர் - கண்ணிமையாதவர் என்பது, மக்களினும் உயர்ந்தவர் என்பதைக் காட்ட எழுந்த புராணக் கற்பனை. கோவை, திரு, துடிசைக்கிழார் அவர்கள் பதித்துள்ள **திருமந்திரம்** 17-ஆம் பக்கத்தில், 'தமிழ்நாட்டின் வடவெல்லையாகிய இமயமலையின் சிகரங்களில் சிறந்த கயிலாயத்தின் திருக்கோயிலுக்கு முதற்பெரு நாயகமாகி, இந்திரன், மால் அயன் முதலாம் **இமயவர்க்கு**' என்றெழுதி, **இமயவர்-இமையமலைவாசிகள்** என்று குறிப்பும் எழுதியுள்ளார்.

"இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்
அவையில் காலம் இன்மையான" (தொல். பொ-54)

இமயவர் நாட்டினும், தமிழகத்தினும் அறம் பொருளின்ப நுகர்ச்சி யில்லாத காலம் இல்லை எனத் தொல்காப்பியர் அந்நாட்டை அயல் நாடாகவே கொண்டு கூறியுள்ளார். மக்களல்லாத தேவராயின் அறம் பொருளின்ப நுகர்ச்சி கூறுதல் பொருந்தாது. அத் தேவருலகத்தை யடையத் துணையாய அவற்றை அவர்க்குரித்தெனல் எங்ஙனம் பொருந்தும்? உரைப்பாயிர விளக்கம் பார்க்க. விரும்பியதை விரும்பியவாறு செய்தொழுகும் தேவர்கட்கு (1072) அறம் ஏது?

இமயமலைக்கு மேருமலை என்ற பெயரும் உண்டு. மேரு-பொன். மேருமலை-பொன்மலை. எனவே, பொன்னுலகம் எனப் பொருள்படும் 'சுவர்க்கலோகம்' என்பதும் இமயமலையின் ஓரிடமேயாகும்.

**புத்தேள் :** இது புத்தாள் என்பதன் திரிபு. புது ஆள்-புத்தாள்; புது ஆடை-புத்தாடை என்பதுபோல. புதியவர் என்பது பொருள். புத்தேளிர்-பன்மை. அவ்வடபுலத்தார் புதிதாக இங்கு வந்தபோது இட்டு வழங்கிய பெயர் இது. இன்றுங்கூட, வேறூரிலிருந்து வந்து புதிதாகக் குடியேறினவனைப் புதுக்குடியான் என்று அழைப்பது வழக்கில் உள்ளது. புத்தேளுலகம், புத்தேள் நாடு-வானகம்.

**தேவர் :** தேவர் என்பது மேலானவர், போற்றற்குரியவர் என்னும் பொருளது. முன்னது மேலானவர் என்னும் வடவர் கூற்றினைக் கொண்டு கூறியது. மேலிடத்தினர் என்பது பொருள். பின்னது புதிதாக வரும் அயல் நாடரை அன்புடன் வரவேற்றுப் போற்றும் தமிழர் பண்பாட்டினுல் வந்தது. எல்லா வெள்ளையரையும் மேலானவர் எனப் பொருள்படும் **துரை** என்னும் பெயராலேயே அழைத்துவந்தது இதற்குச் சான்ருகும்.

தேவர் என்னும் பெயர் திருவள்ளுவர் பெயர்களில் ஒன்ருக இருப்பதும், வேளாண்குடி மகனுகிய சேக்கிழார் இயற்பெயர் அருண்மொழித்தேவர்; சிவஞான போத ஆசிரியர் பெயர் மெய்கண்ட தேவர் ஆகையாலும், 'மேழித் தேவர் பெருமைக்கு வேறுந்தேவர் கூறேனே' என ஏரெழுபது கூறுவதாலும் வேளாண்குடி மக்களுக்குத் தேவர் என்னும் பட்டப் பெயர் வழங்கிவருவதும், மறக் குடி மக்களாகிய தமிழ் மறவர் குலம் தேவர் குலம் என்னும் பெயராலேயே இன்றும் அழைக்கப்பட்டு வருவதோடு, அக்குல மக்களும் தேவர் என்னும் பட்டப் பெயரிட்டு வழங்கிவருவதும், ஆரியமக்கள் தங்கள் தாய்மொழி யெனக் கூறிப் போற்றிவரும் வடமொழியைத் தேவ மொழி என்பதும், மலேயா முதலிய கிழக்கு நாட்டுமக்கள் நாகர் என்று அழைக்கப்பட்டது போலவே (மணிமேகலை), தேவர்களுக்கும் நாகர் என்னும் பெயர் இருப்பதும், இன்றும் அஃஃச்ஃஃசாமில் உள்ள நாகர் என்போர் நாகாலாந்து எனத் தனிநாடு பெற்று இந்தியாவின் ஒரு கூருக இருந்துவருவதும், இத் தென்னுட்டில் இருந்த அரக்கர், அசுரர் என்போர்க்கும், அத்தேவர்கட்கும் அடிக்கடி போர் நடந்தது; அது 'தேவாசுர யுத்தம்' எனப்படும்; அரக்கரும் அசுரரும் தேவர்களைச் சிறையிட்டனர்; தேவ மகளிரை ஏவற்ருெழில் செய்ய அமர்த்தினர்; அரக்கர் தலைவர்கள் தேவருலகம் சென்று, தேவர்கோனுகிய இந்திரனை வென்று அவனுடைய அரியணை முதலிய அரும் பொருள்களை எடுத்துவந்தனர் என்பதும், தேவரும் அசுரரும் காசிப முனிவரின் மக்கள் என்பதும், தேவர் என்போர் மக்களின் ஒருவகையினரே என்பதற்குச் சான்றுகளாகும். அசுரர், அரக்கர் - ஒருபொருட் சொற்கள்.

**தெய்வம்:** தெய்வம் என்பதும் மேலானவர் என்னும் பொருளைக்கொண்டு கூறிய பெயரேயாகும். தெய்வம் -

மேன்மை, சிறப்பு. தெய்வத்தமிழ், தெய்வப்புலவர், தெய்வப்புலமை, தெய்வத்தன்மை, தெய்வத்தாமரை, தெய்வவுத்தி, தெய்வப்புணர்ச்சி எனக் காண்க. தெய்வத் தமிழ்-மேன்மையான, சிறந்த தமிழ்.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து." (குறள்—978)

என்பதுபோலத் தேவரைத் தெய்வம் என்றனர். பெருமை-பெருமையுடையார். சிறுமை-சிறுமையுடையார். பெருமை, சிறுமை-பண்புப் பெயர்கள். பண்பால் பண்பியைக் குறித்தல் தமிழில் பெருவழக்கு,

**தெய்வம் என்னும் சொல் :** மலையில் மூங்கில் ஒன்றோ டொன்று தேய்வதனால் தீ உண்டாகிறது. கல்லைச் செதுக் கும்போது தீப்பொறி தோன்றுகிறது. இவற்றிலிருந்தே முதன் மாந்தர் தீக்கடை கோலும், சக்கிமுக்கிக் கல்லும் கண்டு பிடித்திருக்க வேண்டும். பொருள்கள் ஒன்றோடொன்று தேய்வதனால் தீயுண்டாவதால் பழங்காலத் தமிழ்மக்கள் அதைத் தேய் என்றனர். 'தேயு' வடமொழி. தேய் என் பதே நாளடைவில் தேய்-தே-தீ எனத் திரிந்தது. அயற் சொல்லானதால் வடமொழியில் திரியாது அப்படியே உள்ளது. உணவு சமைத்தல், குளிர் நீக்கல் முதலிய நன்மை குறித்துத் தீயை மேலானது எனப் போற்றி வந்த னர். தேய் என்னும் சொல்லினடியாகப் பிறந்தவையே தேவன், தேவி, தேவர், தெய்வம் என்னும் சொற்கள். தேவன்-ஆண்பால். தேவி - பெண்பால். தேவர் - பலர்பால். தெய்வம் - பண்புப் பெயர்.* அரசனைத் தேவன் என்றதும்,

* தேய் உ-தேய்வு-தேவு. தேவு அன்-தேவன். தேவு இ-தேவி. தேவு அர்-தேவர். தேய்வு - தெய்வு. தெய்வு அம் - தெய்வம். (ஒப்பியல் மொழிநூல் பக்கம் 237)

அரசியைத் தேவி என்றதும் முதன்மையும் மேன்மையும் பற்றியே யாகும். தெய்வம் என்னும் சொல் குறள் 43, 55, 702 ஆகிய மூன்றிடத்தும் மேன்மையே குறித்தல் காண்க.

புலவர் : புலவர்-புலம் என்பதன் அடியாகப் பிறந்த சொல். புலம்-புல-புல அர்-புலவர். ஐம்புல நுகர்ச்சியுடையோர், மனம்போனபடி நடப்பவர் (1072) என்னும் பொருளது. புலவு அர் - புலவர். புலவு-புலால். வேள்வி மூலம் புலவு உண்பவர் என்பதாம். தாமரைக் கண்ணன் - இந்திரன்.

சீனர் முதலிய வெளிநாட்டினர் யாத்திரையாய் அன்று தமிழ்நாட்டுக்கு வந்து போனது போலவே, அவ் வடபுலத்தாரும் இங்கு வரப்போக இருந்தனர். தமிழ் மக்கள் அவர்களை அன்புடன் வரவேற்றுப் போற்றி வந்தனர். (18). தமிழர் பெருமை அவ்வானுல கெங்கும் பரவியிருந்தது (234). தமிழ் மக்களும் அவ்வடபுலத்திற்குப் போகவர இருந்தனர். பாண்டிய ஒருவன் இந்திரனவைக்குப் போயிருந்ததாகக் கூறப்படுவதும், பாண்டி நாட்டை யாண்டுவந்த மீனாட்சி (தடாதகை) என்னும் தமிழரசி, அவ் வடபுலத்திற்குப் படையெடுத்துச் சென்று, சோமசுந்தரன் என்னும் அவ் வடபுலத்தரசனை வென்று, பின் அவனையே மணந்துகொண்டனள் என்பதும், இன்ன பிற செய்திகளும் இதற்குச் சான்றாகும். மீனாட்சி-மீன் ஆட்சி. மீன்-மீனக் கொடி. அது அக் கொடியுயர்த்த பாண்டி நாட்டை யுணர்த்திற்று. மீனாட்சி - பாண்டி நாட்டை ஆட்சி புரிந்தவள் என்னும் காரணப் பெயர். பழங்கள் நிறைந்த பழமலையை, வடவர் **விருத்தாசலம்** எனக் கிழட்டுமலை என்னும் பொருளில் மொழிபெயர்க்க, தமிழர் பின் முதுகுன்றம் என மொழிபெயர்த்து வழங்குவதுபோல, மீனாட்சி என்பதை **மீனாக்ஷி** என வடவர் மொழிபெயர்க்கத்

தமிழர் மீனக்கண்ணி, அங்கயற்கண்ணி என மொழி பெயர்க்கலாயினர். அக்ஷம்-கண். அக்ஷி-கண்ணி.

மேலும், சிவனுக்குச் சொந்தமான தென்னும் கயிலாயம் என்பது, மண்ணுலகில் உள்ளதும், இந்திய நாட்டின் வடவெல்லையாக உள்ளதுமான இமயமலையின் முடிகளில் ஒன்ருயிருப்பதால், ஏனைத் தேவர்களின் வாழ்விடமான வைகுந்தம், பிரமலோகம், இந்திரலோகம் முதலிய இடங்களும் மண்ணுலகத்தில், இமயமலைச் சாரலில் உள்ளவையே யாகும். அன்றி, வானவெளியில், நமது தலைக்கு மேல் தொலைவில், விண்மீன்களும், திங்கள், செவ்வாய் முதலிய கோள்களும் இருப்பதுபோலவோ, அவற்றிற்கும் மேலோ உள்ள இடங்களல்ல. விண்ணுலகம் என்பதும், வானுலகம் என்பது போல உயர்ந்த இடம் என்னும் பொருளதே. திங்கள் முதலிய கோள்களையும் தேவர்கள் என்பதால் அவ்விடங்களி லொன்றுதான் வானுலகம் என லும் பொருந்தாது.

எனவே, வானோர், வானுலகம், தேவர், மேலுலகம் என்னும் இவ் வரலாற்றுண்மையே காலக் கடப்பால், தமிழ் மக்களின் கருத்திலாப் போக்கால், கற்பனை மயக்கால், உட்பகைப் பெருக்கால், சமயச் சார்பால், தன்னுணர் விழப்பால், புராணப் புதுமையால் இன்றையத் தமிழ் மக்கள் எண்ணும் இப்புதிய நிலையை அடைந்துவிட்டது. வானுலகம், மேலுலகம், விண்ணுலகம், புத்தேளுலகம் என்பவையும் இம் மண்ணுலகத்தில் உள்ளவையே. வானவர், தேவர், புத்தேளிர், இமயவர் என்பாரும் நம் போன்ற மக்களே யாவர் என்பதைச் சிறிதும் ஐயமின்றித் தெளிக.

## 3. நூல்செய்தமுறை

வள்ளுவர் ஓர் அறிவு நூற் புலவர்; அரசியலறிஞர்; வாழ்வியற் கணக்கர்; தமிழர் பண்பாட்டின் பெருமையை

நன்குணர்ந்தவர்; தமிழினப் பற்றுடையவர்; தமிழர் நாகரிகத்திற்கும் ஆரியர் நாகரிகத்திற்கும் உள்ள வேறு பாட்டை நன்கு அறிந்தவர்; ஆகையால், அவ் வடபுல மக்களின் பொய்க்கூற்றுக்களும், போலிக் கொள்கைகளும் தமிழ் மக்களிடைப் பரவி வருவதைத் தடுத்து விலக்கி, மேலும் அவை பரவாமலிருக்க, தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களாகிய ஒழுக்க முறைகளை, அகம் புறப் பாகு பாட்டைத் தழுவி, அறம் பொருள் இன்பம் என முப்பா லாக்கி ஒரு நூல் செய்து, தமிழர் பண்பாட்டை நிலைநிறுத்த எண்ணினர். எனவே, தமிழர் மரபுக்கொவ்வாத அயற் கொள்கைகளை மறுத்தும், அவற்றை நம்பி வாழும் பொது மக்களுக்கு எளிதில் பொருள் விளங்குதற் பொருட்டுப் பொதுமக்களிடைப் பரவியிருந்த அவ்வயற் கொள்கைகளைக் கொண்டு கூறியும், தமிழ் மரபு சிறிதும் கெடாது, தமிழ் இலக்கிய மரபுக் கேற்றவாறு பொருள் விளங்குதற் பொருட்டு, உலக வழக்கில் உள்ள சில வழக்காறுகளை நூன் மரபாகக் கொண்டும், செய்யுள் வழக்கில் சிறிதும் குறைவு படாது, மிகச் சிறுபான்மையான மக்களிடை ஒரொருகால் நடந்துவந்த தீய ஒழுக்கங்களையும் மிகைபடக் கூறி விலக்கி யும், தமிழர் ஒழுக்கச் சட்ட நூலாகிய திருக்குறளைச் செய்து முடித்தார்.

## 4. நூன் மரபு

பொருள் குணங்களை ஆண்பாலாகவும், பெண்பாலாக வும் கூறுதல் நூல் மரபாகும். 'நிலம் என்னும் நல்லாள்' (1040), 'அழுக்காறு என ஒரு பாவி' (168) என நிலம் என்னும் பொருளைப் பெண்பாலாகவும், அழுக்காறு என்னும் குணத்தை ஆண்பாலாகவும் கூறுதல் காண்க. பாவி – தீயோன்.

செய்யாள் (84), செய்யவள் (67), தாமரையினுள் (617) எனச் செல்வத்தையும், தவ்வை (167), முகடி (167, 936) என வறுமையையும் பெண்பாலாகக் கூறியவாறு. செய்யவள்-இளையவள். தவ்வை-மூத்தவள். செல்வந் தீர்வதே வறுமையாதலால், செல்வத்தை இளையாள் எனவும், வறுமையை மூத்தாள் எனவும் கூறினர். மேலும், செல்வம் விரும்பப்படுதல் பற்றிச் செய்யாள் எனவும், வறுமை வெறுக்கப்படுதல் பற்றிக் கரியாள் (617) எனவும் கூறினர். தாமரையினுள் - திருமகள். திரு - செல்வம். கல்வியும் செல்வமும் மனத்தைவிட் டகலா மாண்பொருள்களாத லால் அவற்றைப் பெண்களாக்கி, மனத்தைத் தாமரை யாக்கி அதன் மேல் உள்ளனர் என்பது மரபு. பயன் கருதி நிலமடந்தை, வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி, காவிரிப்பாவை என நிலம், ஆறு முதலியவற்றைப் பெண்ணாகக் கூறுவதும் நூன் மரபேயாகும்.

கூற்று: உடலும் உயிரும் கூறுபடும் சாவினைக் கூற்று (326, 765, 1083) என உயிருடையதாகக் கூறியவாறு. கூற்று-உடலும் உயிரும் கூறுபடும் நேரம். கூறுபடுதல் - வேருதல்-பிரிதல். கூறு உ-கூற்று. கூற்று-தொழிற்பெயர். கூறு அம்-கூற்றம் (269, 894, 1085) என்பதுமது. உடலும் உயிரும் கூறுபடும் காலத்தையும் தொழிலையும் உயிருடைய தாகக் கூறியது. கூற்றுவன் என ஆண்பாலாகக் கூறுதலு மொன்று.

பேய் (565): பேய்-அச்சம். பேயிருள் - அச்சந்தரும் இருள். பேய்க்காய்ச்சல் -அச்சம்தரும் காய்ச்சல். அச்சத் தைப் பேய் என்பது உலகவழக்கு. அஃதே நூல் வழக்கு மாயிற்று. ஒருவன் கொள்ளும் அச்சமே அவன் எண்ணும் உருவெளித் தோற்றமாகி, அவனை அச்சுறுத்தும். அவ்வச் சம் ஒருவகை வெறி நோயை உண்டாக்கும். பெரும்பாலும்

பெண்களே, அவர்களிலும் இரவில் வெளிச் செல்லாத பெண்களே பேய் பிடித்தாடுதல் காண்க. பேய் பிடித்தல்—அச்சநோய் கொள்ளல். இரவில் வெளிச் சென்று தொழில் செய்துவரும் சக்கிலிப் பெண்கள், சாணரப் பெண்கள் போன்ருரைப் பேய் பிடியாமை அறிக. பேய்-பொய்த் தோற்றம்-போலித்தோற்றம் என்பதைப் பேய்க் கரும்பு, பேய்ச்சுரை, பேய்த்தேர் என்னும் வழக்காலறிக. பரணியில் வரும் பலவகைப் பேய்கள் கற்பனைப் படைப்பு. 850ஆம் குறளில் வரும் 'அலகை' என்பதுமது.

**காமன், அணங்கு:** பெண்களை வருத்தும் ஆண்பாற் காமத்தைக் காமன் (1197) என ஆண்பாலாகவும், ஆண்களை வருத்தும் பெண்பாற் காமத்தை அணங்கு (918, 1081, 1082) எனப் பெண்பாலாகவும் கூறுதல் நூன்மரபு. அணங்கு வருத்தம்; 'தகையணங் குறுத்தல்' என்னும் அதிகாரத்தைக் (109) காண்க. இவ் வாண்பால் பெண்பால்களுக்குப் பெண்டு பிள்ளை சுற்றம் வாழ்விடம் முதலியன படைத்துக் கொண்டு கூறுதல் புராணக் கற்பனையாகும்.

## 5, சொற்பொருள் விளக்கம்

**எழுபிறப்பு:** 'நாலைந்தெடு, ஏழெட்டுப்பேர்' என்னும் வழக்குப் போல, எழுமை என்னும் எண்ணுப் பெயரைப் 'பல' என்னும் பொருளிலேயே ஆளுகிருர் வள்ளுவர்—(62, 107. 126, 398, 538, 835). 'எழுபிறப்பு' (62)—பல தலைமுறை. 'எழுபதுகோடி' (639) என்பதும் பலகோடி—மிகப்பல என்னும் பொருளதே.

**பிறப்பு:** பிறப்பு என்னும் சொல்லுக்கு முற்பிறப்பு, மறுபிறப்பு என்பது சமயச்சார்பான பொருளாகும். குறளில் வரும் பிறப்பு என்னும் சொல், 'பிறவிப் பெருங் கடல்' (10)—வாழ்க்கையாகிய பெரிய கடல். 'பேர்த்

துள்ள வேண்டா பிறப்பு' (357)—பின்னர் இப்பிறப்பைப் பற்றி எண்ணவேண்டியதில்லை-இவ் வாழ்க்கையைப் பற்றி; என வாழ்க்கையையும்; 'எழுபிறப்பும் தீயவை தீண்டா' (62)—பல தலைமுறைகளிலும் தீமைகள் சேரா; 'எழுமை எழுபிறப்பும்' (107)—எப்போதும் பல தலைமுறைகளிலும்; எனத் தலைமுறையையும்; 'பிறப்பறுக்கல் உற்றார்க்கு' (345)—தீமையின் தோற்றங்களை நீக்கலுற்றார்க்கு; 'பிறப் பறுக்கும்' (349)—துன்பங்களின் தோற்றத்தை அறுக்கும்; எனத் தோற்றத்தையும்; 'தவாப் பிறப்பு ஈனும்' (361)—கெடாத துன்பத்தை விளைவிக்கும்; எனத் துன்பத்தையும்; 'இழிந்த பிறப்பாய்விடும்' (133)-தாழ்குடித் தன்மையாகி விடும்; 'பிறப்பு ஒழுக்கம்' (134)—மக்கட் பிறப்புக்கு உரிய ஒழுக்கம்; 'இம்மைப் பிறப்பில்' (1315)—இப் பிறப் பில்-உயிரோடுள்ளவரை; எனக் குடித்தன்மை, மக்கட் பிறப்பு, இப்பிறப்பு என்பவற்றையும் குறித்தல் காண்க.

**மேற்பிறந்தார், கீழ்ப்பிறந்தார் (409):** மேற் பிறந்தார்-உயர்குடிப் பிறந்தார்-வழிவழியாக நல்லொழுக்க முள்ள குடியில் பிறந்தார். கீழ்ப் பிறந்தார்-தாழ்குடிப் பிறந்தார்-நல்லொழுக்க மில்லாத குடியில் பிறந்தார்.

**இம்மை, மறுமை (98):** நாம் உயிரோடு இருக்கும் நிலை-இம்மை. இது இம்மைவாழ் வெனப்படும். நாம் இறந்தபின் நம்மைப் பற்றி இங்கு பேசப்படுவது-மறுமை. இது மறுமைவாழ் வெனப்படும். வள்ளுவர் மறுமையில் உள்ள னர். மறுமை-உயிர் எடுக்கும் மறுபிறப்பு என்பது சமயக் கற்பனை.

**வினை :** இக்காலத்தார் 'வினை' என்னும் சொல்லைக் கேட்டாலே படக்கென்று **முன்வினை, நல்வினை, தீவினை** என்று கூறிவிடுவர். வள்ளுவர் காலத்து வினை என்ற சொல் இத்தகைய பொருளைக் குறியாது 'செயல் - தொழில்' என்

னும் பொருளேயே குறித்தது. தொல்காப்பிய வினைஇயல் வினைச் சொல்லின் இலக்கணங் கூறுதல் காண்க. சில இடங்களில் துன்பத்தைக் குறிக்கும். 'இருள்சேர் இருவினை'—அறியாமையால் வரும் பெருந் துன்பம். இருமை—பெருமை. இருங்கடல் எனக் காண்க. வினை (244, 439)—செயல். நல்வினை (335)—நல்ல செயல். தவாவினை (367)—கெடாத நற்செயல். தீவினை (201, 207, 209, 210)—தீச் செயல்-கெட்ட காரியம்.

அளறு (255)-தீ நாற்ற முடைய குழைந்தை சேறு. தீராத பெருந் துன்பத்தைச் 'சேற்றில் அழுந்துதல்' என்னும் வழக்குண்டு. இழிகாமத்தைக் 'காமச்சேறு' என்பதறிக. குறள் 335, 919-ல் துன்பம் என்னும் பொருளே குறிக்கிறது. பெருந் துன்பத்தையே நிரயம் (நரகம்) எனவும், நிரயவுலகம் தென்றிசைக் கண் உள்ளதெனவும், அங்கு பல கொடுந் துன்பங்கள் படவேண்டு மெனவும், பாவம் செய்தோர் நிரயத்தை அடைவர் எனவும் கூறுதல் புராணக் கற்பனை.

# 4. உரைப்பாயிர விளக்கம்

## 1. பாயிரம்

ஒரு நூலை எடுத்து விரித்ததும் முதலில் ஆக்கியோன் பெயர், வழி, எல்லை, நூற்பெயர் முதலியன கூறும் சிறப்புப் பாயிரம் காணப்படும். சில நூற்களில் ஆசிரியரால் கூறப் படும் தற்சிறப்புப் பாயிரம் காணப்படும். அது நூலின் உட் பொருள் கூறும். ஒரு நூலுக்குப் பாயிரம் இன்றியமை யாத தென்பது, "ஆயிர முகத்தான் அகன்ற தாயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே" என்னும் ஆன்ருேர் வாக்கால் விளங்கும். ஆனல், தமிழர் வாழ்க்கைச் சட்ட நூலாகிய திருக்குறளுக்கு மட்டும் அத்தகைய பாயிரம் எது வும் இல்லை. நூலின் உட்பகுதியாகிய முதல் நான்கதிகாரத் திற்குப் பாயிரம் எனப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. பாயிர இலக்கணத்திற்குப் புறம்பாக உள்ள அதற்குப் பாயிரம் என்னும் பெயர் எவ்வகையினும் பொருந்துவதாக இல்லை.

திருக்குறளினும் முற்பட்ட பழந்தமிழ் நூலாகிய திருக் குறளின் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்குக் கூட ஆக்கியோன் பெயர் முதலியன கூறும், "வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" என்னும் தொடக்கத்தை யுடைய சிறப்புப் பாயிரம் அமைந்திருக்க, திருக்குறளுக்கு அத்தகைய பாயிரம் அமைந்திலாமையின் காரணம் நமக்கொன்றும் விளங்கவில்லை. திருவள்ளுவரின் உண்மை வரலாறு தெரியாமற் போனதற்கும், திருக்குறள் செய்த காலம் முதலியன அறிய முடியாமல் இருப்பதற்கும், திருவள்ளுவரைப்பற்றிய பொய்க் கதைக்கும் அச் சிறப்புப் பாயிரம் இல்லாமையே காரணமாகும்.

## 2. உரைப்பாயிரம்

சிறப்புப் பாயிரமோ, தற்சிறப்புப் பாயிரமோ இல்லையெனினும், திருக்குறளுக்கு உரையெழுதிய பரிமேலழகர் கூறிய உரைப்பாயிரம் என்பது நூலின் முகப்பில் அமைந்துள்ளது. அது திருக்குறளில் கூறப்படும் பொருள் இன்னவென முதற்கண் விளக்கிக் கூறுகிறது. பாயிரம்-வரலாறு. உரைப்பாயிரம்-உரையின் வரலாறு. பரிமேலழர் தாம் எழுதப் போகும் உரை இத்தன்மையதெனத் தமதுரைக்கேற்பத் திருக்குறளின் கருத்தைத் திரித்துக் கூறுவதே அவ்வுரைப் பாயிரமாகும். சிறப்புப் பாயிரத்தில் கூறப்படும் நுதலிய பொருளை—நூலிற் கூறப்படும் கருத்தைத் திரித்துக் கூறுவதே அவ்வுரைப் பாயிரம் எனல் மிகையாகாது.

திருக்குறளைப் படிக்கத் தொடங்குவோர் முதலில் அவ்வுரைப் பாயிரத்தைப் படித்துவிட்டுத்தான் அப்புறம் நூலைப் படிக்கத் தொடங்க வேண்டும், வாயிலோனைக் கடந்து அரண்மனைக்குட் போவதுபோல. பரிமேலழகரின் உரைக்கேற்றவாறு அவ்வுரைப் பாயிரம், திருக்குறள் படிக்கத் தொடங்குவோர் மனத்தை மாற்றி யமைத்துவிடும் என்பதில் சிறிதும் ஐயப்பாடு கொள்ள வேண்டியதில்லை. அதாவது, திருக்குறள், ஆரிய நாகரிகங் கூறும் வடமொழி வேதம், மனு முதலிய நூல்களின் கருத்தைத் தமிழ்ப் படுத்திய ஒரு மொழிபெயர்ப்பு வழி நூலேயன்றி, தமிழர் நாகரிகங் கூறும் தனித்தமிழ் நூலன்று என்னும் மனப்பான்மையைத் திருக்குறள் படிக்கப் புகுவோர் மனத்தில் பசுமரத்தறைந்த ஆணிபோல் நன்கு பதிய வைத்துவிடும். அத்தகைய வருஞ்சச்சிரம தரும வடிவில் அமைந்துள்ளது அவ்வுரைப் பாயிரம். அப்புதிய உரைப் பாயிரமே திருக்குறளின் பொருளையும் புதுமை செய்து விட்டது. அவ்வுரைப் பாயிரத்தின் நச்சுத்தன்மையை உணர்ந்தாலன்றித் திருக்

குறளின் உண்மைக் கருத்தை உள்ளபடி அறிய முடியாது. அறுப்பு மருத்துவம் செய்யப் புகும் மருத்துவர் கொடுக்கும் மயக்க மருந்துபோல அமைந்துள்ளது அவ்வுரைப் பாயிரம். ஆனுல், அம்மருத்துவர் கொடுக்கும் மயக்க மருந்து நன்மைக்குக் காரணமாவது போலன்றி, அவ்வுரைப் பாயிரம் தீமைக்குக் காரணமாக அமைந்துள்ளது. திருக்குறள் முழுக்க முழுக்க அப்படியே ஆரியர் பழக்க வழக்கங்களைத் தமிழாக்கிய நூல் என நம்பும்படி தமிழரை மருட்டியது அவ்வுரைப் பாயிரமேயாகும்.

1. "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும், அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருள் இன்பம் வீடு என்பன.

2. அவற்றுள், வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையால் கூறப்படுவதல்லது இலக்கண வகையால் கூறப்படாமையின் நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.

3. அவற்றுள், அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம். அது ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைப்படும்.

4. அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவாதொழுகுதல்.

5. வழக்காவது, ஒரு பொருளைத் தனித்தனியே எனதெனதென்றிருப்பார் அது காரணமாகத் தம்முள் மாறு

பட்டு அப்பொருள்மேற் செல்வது. அது கடன் கோடல் முதல் பதினெட்டுப் பதத்ததாம்.

6. அதுதான் (அவ்வொழுக்கம்) நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மை யாகிய அச்சிறப்பியல்புக ளொழித்து, எல்லார்க்கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையாற் கூறப்பட்டது" இதுதான் அவ்வுரைப் பாயிரம்.

முதலாவதாக, வள்ளுவர் காலத் தமிழர்கள் இந்திரன் முதலிய இறையவர்களைத் தங்கள் தெய்வமாகக் கொண்டதோ, கொண்டு வழிபட்டதோ இல்லை. இறையவர்–தேவர். மற்ற இறையவர் அயன், அரி, அரன் முதலியோர். இனி, இந்திரன் ஆரியர் தலைவன்; ஆரியர்க்காக நமது முன்னோர்களாகிய பழந்தமிழர்களுடன் அடிக்கடி போரிட்டவன்; நமது முன்னோர்களைக் கொல்லுமாறு ஆரியர் தம் தலைவனாகிய இந்திரனை வேண்டும் பாடல்கள் வேதத்தில் ஏராளமாக உள்ளன. இந்திரன் பாண்டியரோடு பகை கொண்டு, பாண்டி நாட்டையும், மதுரையையும் அழிக்கும்படி கடலையும் மழையையும் ஏவினதாகத் திருவிளையாடற் புராணங் கூறுகிறது. அரக்கர், அசுரர், அவுணர், தானவர் என்பாரோடு இந்திரன் பலமுறை போர் செய்ததாகப் புராணங்கள் கூறுவதெல்லாம் பழந்தமிழ்த் தலைவர்களுடன் போரிட்டதையே யாகும். அரக்கர், அசுரர், அவுணர், தானவர் என்பன ஒருபொருட் சொற்கள். அரக்கர் என்போர் தமிழர்களேயாவர்.

"உண்மையை உரைக்குமிடத்து இராமாயணக் கதையானது ஆரியர்கள் தென்னாட்டின் மீது படையெடுத்துச் சென்றபோது, அவர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த போரைப் பற்றிக் கூறுகிற தென்று சொல்லலாம். திராவிடரில் ஒரு வகுப்பாரையே 'வானரர்கள்' என்று அழைத்

தார்கள் போலும்'' (ஜவஹர்லால் நேருவின் கடிதங்கள்—177) இரண்டாவது உலகப் பெரும்போரில் (938-45) ஜப்பானியரை **அரக்கர்** என்று திட்டிப் பேசினதை நினைவு கூர்க. அரக்கர் முதலிய சொற்கள் பகைவரைக் கூறும் கடுஞ் சொற்கள்.

அப்படியிருக்க, பகைவர் தலைவனுகிய, பகைவனுமாகிய இந்திரனுடைய நாட்டை-இந்திரப் பதவியை அடையத் தமிழர் எதற்காக முயலுகின்றனர். பகைவர் பதத்தை அடைய முயலுவதா தமிழர் வாழ்வின் பயன்? இது புதுமையினும் புதுமையாக வன்றே இருக்கிறது! ஒரு வேளை, இந்திரன் நாட்டை வெல்லத் தமிழர் தலைவர்கள் முயன்றனர். எனில் பொருந்தும். வளம் பொருந்திய தமிழ் நாட்டையடைய-தமிழ் நாட்டில் நிலையாக இருந்து இன்புற்று வாழ ஆரியர்களும், ஆரியத் தலைவர்களும் பல வழிகளில், பலவாறு, பலமுறை முயன்றிருக்கிருர்களேயன்றி, தமிழர்கள் அன்னூர் பதத்தை யடைய ஒருநாளும் முயன்றதில்லை; வளமார் தமிழ்நாட்டை வெறுத்து அன்னூர் பதத்தை யடைய எதற்காக முயலுகின்றனர்? இறந்தபின் (மறுமையில்) உயிர் இந்திரன் முதலிய இறையவர் பதங்களை அடைவதென்பது வள்ளுவர் கொள்கையன்று என்பதைத் **'திருக்குறள்—குழந்தையுரை'** நோக்கி யுணர்க.

சோழ மன்னர்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்டுதோறும் 'இந்திர விழா'க் கொண்டாடினதாகச் சிலப்பதிகாரம் கூறுவது அந்நூலில் வரும் புராணக் கதைகளில் ஒன்ருக இருக்கலாம், அல்லது சோழர்கள் கொண்டாடின இந்திரவிழாவுக் குரிய இந்திரன் ஒரு சோழமன்னனுக இருக்கலாம்.[1] இந்திரன்-அரசன். நரேந்திரன், மிருகேந்திரன் எனக் காண்க. நர இந்திரன்-மக்கள் அரசன். மிருக இந்திரன்-விலங்கரசன்.

---

1. யான் எழுதியுள்ள பூவாமுல்லையில்-'இந்திரவிழா' என்னும் கட்டுரை பார்க்க.

சிலப்பதிகாரத்தின் தொடர் நூலான மணிமேகலையில், மணிபல்லவத் தீவில், தேவர் கோனாகிய இந்திரனால் நிறுவப்பட்ட புத்த பீடிகைக்காக நாகநாட்டரசர் இருவர் போரிட்டதாகக் கூறப்படுகிறது (மணி 8: 52-6). புத்த பீடிகை-புத்தரது பாத பீடிகை. பாத பீடிகை-புத்தரது பாத வடிவங்கள் உள்ள பீடம். வேள்வித் தலைவனும் தேவர் கோனுமாகிய இந்திரன், வேள்வியை மறுத்தவரும் மக்களி லொருவருமாகிய புத்தருக்குக் கோயில் கட்டி வழிபாடு செய்தான் என்பது சிறிதும் பொருந்தாத பொய்க் கூற்றே யாகும். பொன்னுலக மன்னனாகிய இந்திரன், தனக்குச் செய்யும் வேள்வியை மறுப்பதையே கொள்கையாகக் கொண்ட ஒரு மண்ணுலக மன்னனின் திருவடிகளைப் பீடிகையில் வைத்து வழிபட்டான், வணங்கினான் என்பது பள்ளிப் பிள்ளைகளும் எள்ளி நகையாடும் செய்தியாக அன்றோ இருக்கிறது? வேள்விப் பகைவராகிய புத்தர் பாத பீடிகையை வேள்வித் தலைவனாகிய இந்திரன் ஒருக்காலும் அமைத்திருக்கமாட்டான்.

மேலும், பௌத்த சாரணர் இருந்து, புத்தர் அருளிய ஆகமத்தின் பொருளை யாவர்க்கும் விளங்க உணர்த்துதற்கு இடமாகக் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனால் ஏழு விகாரங்கள் அமைக்கப்பட்டன வென்று சிலப்பதிகாரம் கூறுகிறது (சிலப் 10: 11-44). அவை இந்திர விகாரங்கள் எனவழங்கின. 'இந்திர விகாரம் எழும்' (மணி 26 : 55), 'இந்திர விகாரம் ஏழுடன்' (சிலப் 10 : 14). விகாரம்- அரங்கு, கோயில்.

புத்தர் அருளிய ஆகமம் போதிப்ப தென்ன? கொலை வேள்வி செய்தல் கூடாது என்பதுதானே? தனக்கு மக்க ளால் செய்யப்படும் வேள்வியைத் தகாதென மறுத்துக் கூறுவதற்கு இடமாக ஓரூரில் ஏழு கட்டிடங்கள் கட் டித் தருவானா இந்திரன்? யாராவது தனக்குப் பிறர்

உதவுவதை வேண்டாவென்றும், தன்னைப் பழித்தும் சொற்பொழிவாற்ற மண்டபங் கட்டி வைப்பார்களா? ஒருக்காலும் வைக்கார். வேள்வி மறுத்த அரக்கர்களை யெல்லாம் கருவறுத்த இந்திரன், அதே வேலையைச் செய்த புத்தர்க்கு மட்டும் கோயில் கட்டி வழிபாடு செய்வானா? அவருடைய அருள்மொழியை யாவர்க்கும் எடுத்துரைக்க மண்டபங் கட்டித் தருவானா?

எனவே, மணிபல்லவத் தீவில் புத்தபீடிகை அமைத்த இந்திரனும், புகார் நகரில் ஏழு விகாரங்கள் அமைத்த இந்திரனும் தேவர் தலைவனாகிய தேவேந்திரன் அல்லன்; மக்கள் தலைவனாகிய மாநில மன்னனே யாவன். மலேயா முதலிய கிழக்கு நாடுகளுக்கு முன்னர் **நாகநாடு** என்று பெயர். நாகநாட்டில் வாழ்ந்த மக்கள் **நாகர்** எனப்படுவர். அந் நாகநாடு முன்னர்ச் சோழநாட்டுடன் இணைந்தே இருந்தது. அதாவது, சோழராட்சிக் கீழ் அந்நாடு இருந்த காலமும் உண்டு. சோழர்களுக்கும் நாகர் என்னும் பெயர் உண்டு. அர்ச்சுனன் மணந்த **நாககன்னி** என்பவள் சோழன் மகளே. மணிமேகலை காலத்தில் நாகநாட்டை யாண்ட **புண்ணியராசன்** என்பவன் இந்திரன் வழிவந்தவன் என மணிமேகலை கூறுகிறது. "இந்திரன் மருமான் இரும்பதிப் புறத்து" (மணி 26: 164). மருமான்-வழிவந்தோன். புகார் மக்கள் கொண்டாடிய இந்திர விழாவுக் குரிய இந்திரன் ஒரு சோழ மன்னனே யாவன். அன்றி, தேவேந்திரனைத் தெய்வமாகக் கொண்டு தமிழர்கள் வழிபட்டதாக வேறெங்கும் காணப்படவில்லை. அப்படியிருக்க, இந்திரன் முதலிய தேவர்கள் வாழ்விடமான இந்திரவுலக முதலிய வற்றை யடைய தமிழர்கள் முயலுவ தெங்ஙனம்?

இனி, நெறியறிந்து வீட்டை அடைவதற்கு அறம் பொருள் இன்பம் காரணமாகுமே யன்றி, வீடு காரணமாகாது. வீட்டை யடைவதற்கு வீடு காரணம் எனல் எங்ஙனம் பொருந்தும்? மனைவியை அடைவதற்கு மனைவி

யும், கணவனை யடைவதற்குக் கணவனும் காரணம் எனல் எத்தகையதோ அத்தகையதே வீட்டை வழியறிந்து அடைவதற்கு வீடு காரணமென்பதும். சென்னையை வழி யறிந்து அடைவதற்குச் சென்னை எப்படிக் காரணமாகும்? இது ஒரு பெரும் புதிராகவன்றோ உள்ளது? காட்டுக் குருவியை அடைவதற்குக் கூட்டுக் குருவி காரணம் என்பது போலவெனின், எந்த வீட்டை அடைவதற்கு எந்த வீடு காரணம்? வீடு என்பது ஒன்றா இரண்டா? நன்கு எண்ணிப் பாருங்கள். இது ஒரு வகையினும் பொருந்தாத போலியுரை, அல்லது பொய்யுரையேயாகும். அறவழியில் பொருள் செய்து, இன்ப நுகர்வோர் முடிவில் வீடெய்துவர்; அதாவது, 'நெறியறிந்து வீடெய்துதற் குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப் பட்ட பொருள் மூன்று. அவை அறம் பொருள் இன்பம் என்பன' எனின் ஒருவேளை பொருந்தும்.

தமிழ் நாட்டில், தமிழ் மொழிக்குச் சான்றாகப் பல சான்றோர்கள் இருந்திருக்கிறார்கள்; இன்றும் இருக்கிறார் கள். திருக்குறளைப் பற்றிப் பேசாதவரும் ஆராயாதவரும் எவரும் இல்லை. ஆனால், 'வீட்டை யடையும் உறுதிப் பொருள் வீடு' என்னும் இம் முரண்பட்ட பொருந்தாப் போலியுரையை இல்வளவு நாளாய் எந்த ஒரு தமிழ்ப் பேரறிஞரும் எடுத்துக் காட்டாததுதான்—மறுத்துக் கூறி விலக்காததுதான் வியப்பினும் வியப்பாக இருக்கிறது. தமிழ் மொழிக்குச் சான்றெனத் தமிழ் மக்களால் கொள் ளப்பட்ட தமிழ்ச் சான்றோர்கள் எவரும் இப்பொருந்தாப் போலிக் கூற்றை எடுத்துக் காட்டி விலக்காமல் இருந்ததன் —இருப்பதன் காரணம் அறியாமையன்று. எடுத்த எடுப்பிலுள்ள இதை யறியவும் திறமையற்றதா என்ன அவர்கள் அறிவு? எடுத்துக் காட்டாததற்குப் பின்னென்ன காரணம்? தமிழ்ப் பெரியார்க ளெல்லாம் சமயச் சார்

புடையவர்கள்; சமயச் சார்பின்றித் தமிழ் தனித்தியங்கா வென்னும் கொள்கை யுடையவர்கள்; சமயச் சார்பினு லேயே தமிழ் வளர்ந்தது; சமய நெறியே தமிழ் வளர்க்கு நெறி; சமயச் செவிலிதான் தமிழ்க் குழவியை இனிது வளர்த்து வருகிருள் என்னும் கருத்துடையவர்கள்; சம யத்தை விட்டுப் பிரித்தால் தமிழ் இறந்துபடும் என்னும் கொள்கையுடையவர்கள்; ஆகையால், சமயச் சார்பான அப்போலியுரை அன்னுர் சமயக் கண்களுக்குப் பாடாமல் இருக்கலாம். பட்டும் நல்லதாகத் தோன்றி யிருக்கலாம். அல்லது அப் பொருந்தாக் கூற்றை மறுத்துக் கூறின், பரி மேலழகர் பார்ப்பனராகையால் பார்ப்பனத் தலைவர்கள் சீறி விழுவரே, பார்ப்பன இதழாசிரியர்களின் தாக்குத லுக்கு ஆளாக நேரிடுமே, நமது முன்னேற்றத்திற்கு முட் டுக்கட்டையாக முடியுமே என்னும் அச்சங் காரணமாக இருக்கலாம். அதனுல், நமது வேலையை நாம் பார்ப்போம்; நமக்கேன் இந்தத் தொல்லை என்று சும்மா இருப்பதே யன்றி அறியாமல் அல்ல. இன்றேல், ஏதாவதொரு கொசுப்போன்ற செய்திக்கும் மடிதற்று முன்வரும் இவர்கள், ஆற்றைக் கடக்க ஆறு துணை என்பதுபோல வீட்டை யடைய வீடு துணை என்னும் பொருந்தாக் கூற்றைப் பார்த்துக்கொண்டா இருப்பர்? என்றுதான் தமிழ்ப் பெரி யார்களுக்குப் 'பரந்து கெடுக உலகியற்றியான்' எனக் கூறும் வள்ளுவரின் நெஞ்சுத் துணிவு உண்டாகுமோ? இவர்கள் வள்ளுவரின் வழிவந்தோரல்லரோ!

> "பிராமணனுக்குப் பணிவிடை செய்வதே சூத்திர
> னுக்கு மோட்சத்தைத் தருகிற மேலான தருமமாகும்"
>
> (மனு, அ-9.சு-334)

என்ற மனு வாக்குப்படி பார்ப்பனருக்குப் பணிவிடை செய் தலே வீட்டுக்குக் காரணமாக இருக்க, வீடடைதற்கு அறம்

பொருளின்பமுங்கூடத் தேவையில்லையன்றோ? தமிழர்க்கு மனுமுறையை வலிந்து புகுத்தும் பரிமேலழகர் எளிதில் வீடடைவதற்குக் காரணமான பார்ப்பனப் பணிவிடையை எடுத்தியம்பாததுதான் வியப்பாக இருக்கிறது.

2. இரண்டாவது, 'வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்து' என்கிறார். அதாவது வீடு என்பது, மனத்தால் இத்தன்மையதென எண்ண முடியாததும், வாயால் இத்தன்மைத்தெனச் சொல்ல முடியாததும் என்பதாம். அவ்வாறு எண்ணவும் சொல்லவும் முடியாத வீட்டை யடைய அத்தகைய வீடு எப்படிக் காரணமாகும்? காரணப் பொருள் எளிதானதாகவன்றோ இருக்கவேண்டும்? சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய வீட்டை உறுதிப் பொருளாகக் கொண்டு அத்தகைய வீட்டை அடைதல் என்பது கல்லாச் சிறாரும் மறுத்துரைக்கும் கற்பனை கடந்த தொன்றாகவன்றோ உளது? இத்தகைய வீட்டைத் துறவறமாகிய காரணவகையாற்றான் எப்படிக் கூறமுடியும்? அதுதான் சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத் தாயிற்றே!

இனி, 'துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவ தல்லது இலக்கண வகையாற் கூறப்படாமை' என்பதும் விளங்கா வுரையே யாகும். துறவறங் காரணமாக வீட்டிலக்கணங் கூறப்படும் எனின், துறவற வியலில் வீட்டிலக்கணங் கூறலாமன்றோ? வள்ளுவர் கூறாததன் காரணம் என்ன? இலக்கண வகையால் ஏன் கூறமுடியாது? இலக்கண வகை என்பது என்ன? இது இன்ன இயல்புடையது என்பதுதானே? துறவறமாகிய காரணவகையால் கூறப்படுவ தென்பதன் பொருளென்ன? துறவறங் காரணமாக வீட்டிலக்கணங் கூறப்படும் என்பதுதானே? அப்படியிருக்க, துறவற இலக்கணங்கூறும் துறவறவியலில் துறவறத்தின் பயனாகிய வீட்டிலக்கணம் ஏன் கூறமுடியாது?

வீட்டிலக்கணம் என்பது, 'அதோ போருன் குள்ளன் இதோ போருன் குள்ளன் தாரையைக் காணும்' என்னும் சிறு பிள்ளைப் பேச்சாகவன்ரே இருக்கிறது ?

'வீடு' என்பதே பரிமேலழகர் படைத்துக் கொண்டு கூறுவதொன்ருகும். வள்ளுவர் வீடு என்னும் சொல்லையே திருக்குறளில் எங்குமே ஆளாமலிருக்க, இவர் பல இடங்களில் வலிந்து பொருள் கொண்டு, வள்ளுவர் வீட்டிலக்கணங் கூறுவதாக உரை யெழுதியிருக்கிருர். இதை 'வீடு' என்னும் தலைப்பில் கூறுவாம். அப்படிப் படைத்துக் கூறுபவர், 'இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்' எனத் தங்கூற்றுக்கு மாருகவும் கூறியுள்ளார். இது 'மாறுகொளக் கூறல்' என்னும் குற்றத்தின் பாற்படும். 'நூல்களால் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்' என்பதே உண்மையுரை யாகும். நூல்களால் கூருமல் வீட்டைப் பற்றிப் பின் எதனுல் கூறுவது ? இதிலிருந்தே இது வலிந்து புகுத்திய வடமொழிக் கருத்தென்பது விளங்குகிறதல்லவா ? தமிழர் கொள்கையல்லாத வடவர் கொள்கையையே பரிமேலழகர் தம் இயல்புப்படி வலிந்து புகுத்தியுள்ளாரென்க. 'அறம் பொருள் இன்பம்அடைதல் நூற்பயன்' என்பதையே வடமொழிக் கடிமையான பிற்காலத் தமிழர்கள், 'அறம் பொரு ளின்பம்வீடடைதல் நூற்பயன்' என்று திரித்துவிட்டனர். வீடும் உறுதிப்பொருளில் ஒன்றென்பது பழந்தமிழர் கொள்கையெனில், வள்ளுவர் திருக்குறளை நாற்பாலாகச் செய்யாமல் முப்பாலாகச் செய்திருப்பாரா ? 'குன்றக் கூறல்' என்னும் குற்றமுடைத்தாகும் என்பதை வள்ளுவர் அறியாரா என்ன ? ஆசிரியர் முப்பால் கூறியிருக்க, நாற்பால் எனக் கூறுவது ஆசிரியர் கருத்தறியாமையோடு, ஆசிரியர் கருத்தைத் திரித்துக் கூறித் தமிழரை மயங்க வைத்தலுமாகும்.

3. வள்ளுவர் அறத்துப் பாலில், இல்லறம் துறவறம் என இரு கூறுபட்ட தமிழர் அறங்களை விரித்து விளக்கிக் கூறியிருக்க, இவர் 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கின ஒழிதலுமாம்' என்கிறார். விதித்தன செய்தல்—செய்வன. விலக்கியன ஒழிதல்-தவிர்வன. முதலில் திருக்குறள் தமிழர் அறங் கூறும் தனித் தமிழ் நூல் என்பதை மறந்து, ஆரிய அற நூல்களாகிய மனு முதலிய நூல்களில் கூறும் ஆரிய அறங் கூறும் நூல் எனக் கொண்டதே தவறாகும். 'அறவாமது, தமிழ் அறவோர்களால், அல்லது அற நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' என்று கூறியிருக்க வேண்டும். தமிழ் மக்கட்கு ஆரிய அற நூல்கள் எப்படி அற நூல்களாகும்? தமிழில் அறங்கூறு நூல் இல்லாதிருந்தாலன்றோ வேற்றுமொழி நூல்வழி நடக்கவேண்டும்? தமிழரோ அறவடிவினர், அறவுளத்தினர், அறவியல்பினர், அறவாழ்வினர், அறவாழி யந்தணர் என்பது உலகறிந்த தொன்றன்றோ? அகவாழ்விலும் 'அறத்தொடுநிலை' கண்டவர் தமிழரன்றோ? 'மனத்துக்கண் மாசில ளாதல் அனைத் தறன்' (34) என்னும் அறம் தமிழர்க்கே சிறப்பாக உரிய தனியறமன்றோ? அறத்துக்கு அஞ்சி அரசு கட்டிலில் துஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன் வரலாறே தமிழரின் அற வாழ்வுக்குச் சான்றாகுமன்றோ? தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான அறவோர்களை யுடையது தமிழினமன்றோ?

அப்படியிருக்க, தமிழ் அறவோர் செய்த அறநூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் தமிழர் அறமாகுமே யன்றி, தமிழர் நாகரிகத்துக்குப் புறம்பான ஆரிய மனு முதலிய அற நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் எங்ஙனம் தமிழர் அறமாகும்? இது

தமிழர்க்கு ஒன்றுந் தெரியாது. தமிழர் சொத்தெல்லாம் வடமொழியாளர் சொத்துத்தான். தமிழர்களின் குறை கண்டிரங்கி, வடவர்களே தமிழர்க்கு அறநெறியை வகுத்துத் தந்தனர். ஆரியர் இந்நாட்டுக்கு வருமுன் தமிழர் அறம் என்பது இன்னதென அறியாதவராய் இருந்து வந்தனர். ஆரிய மேலோர் தமிழர்க்கு அற முறையை வகுத்துதவினர் என்னும் ஆரியர்தம் பொருந்தாப் பொய்க் கூற்றுப் போன்றதேயாகும்.

மேலும், ஆரியர் இந்நாட்டுக்கு வருமுன்னரே, அவர்கள் நாகரிகம் என்பது இன்னதென அறியாது, ஓரிடத்தில் நிலையாய்த் தங்கியிக்க வழிவகை காணாது, உழவுத் தொழிலை யறியாது, ஆடுமாடுகள் மேய்த்துக் கொண்டு, அவற்றின் ஊனையுண்டு, தோலை யுடுத்து நாடோடிகளாய் அங்குமிங்கும் அலைந்து திரிந்த அக்காலத்தே, தமிழர் காடு வெட்டி நாடாக்கி, குளந்தொட்டு நிலந் திருத்தி, நீர்தேக்கி நெல் விளைவித்து, ஆடையுடுத்து அரசியல் புரிந்து, அரண்மனை யமர்ந்து, நன்னாகரிக நல்வாழ்வு வாழ்ந்து வந்திருக்க, அன்னமாட்சி அனைய தமிழர்க்கு வந்தேறிகளாகிய ஆரியர் அறம் வகுத்துக் கொடுத்தனர் என்பது எவ்வளவு பொருந்தாப் பொய்க்கூற்று! ஆரியர் தமிழ்நாட்டுக்கு அண்டிப் பிழைக்க வந்தபோது அன்னாரை அன்போடு வரவேற்று உணவுடை யுதவிப் போற்றிய தமிழர்கள் செய்வன தவிர்வன அறியாது காட்டு மிராண்டிக ளாகவா இருந்திருப்பர்? மேலும், செய்வன தவிர்வன தெரியாமலா ஆரிய முனிவர் செய்த கொலைவேள்வியை மறுத்து வந்தனர்? வாழ்க்கை முறையை அகம் புறம் என இரு கூறுக்கி, அவற்றிற்குத் திணை துறை வகுத்து, இலக்கிய இலக்கணம் செய்து இன்ப வாழ்வு வாழ்ந்து வந்த தமிழர்க்கா அறந் தெரியாது? அகவாழ்வுக்குத் துணையாக வமைந்த பார்ப்பனத் தொழிலில் அன்னாரை அமர்த்திக் காத்த தமிழரா அறமறியார்?

எழுதாக் கிளவியாகிய ஆரியர் பாட்டுக்களை எழுதிவைக்க எழுத்துதவிக் காத்த தமிழர்க்கா செய்வன தவிர்வன தெரியாது? அன்றியும், மனுநூல் திருக்குறளுக்குப் பிற்பட்ட நூலேயாகும். மனு நூல் கூறும் அறம் வேறு, திருக்குறள் கூறும் அறம் வேறு என்பதற்கு,

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்
தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி"

என்னும் மனோன்மணீய ஆசிரியர் திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் வாக்கே சான்றாகும். ஒரு குலத்துக்கு ஒரு நீதி மனுவாதி உள்ளுவரோ - ஒருகுலத்துக் கொருநீதி கூறும் மனுமுதலிய வட நூல்களை எண்ணுவார்களோ? திருக்குறளை நன்கு கற்றுத் தெளிந்தவர்கள் பிறவி வேற்றுமை கூறும் மனு முதலிய ஆரிய நூல்களைப் படிப்பார்களோ என்பதாம்.

மனுமுதலிய ஆரிய நூல்களில் கூறும் அறங்களே திருக்குறளில் கூறும் அறங்கள் என்பது முழுப் பொய் என்பதை அறிதற்குத் திருக்குறளுக்கும் மனுவுக்குமுள்ள வேற்றுமையைப் பாருங்கள். திருக்குறள் தமிழர் அறங்கூறு நூல், மனு ஆரியர் அறங்கூறு நூல் என்பதை மட்டும் மறவாமல் மனத்தில் வையுங்கள்.

## 1. பிறப்பு

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" (குறள்-972)

எல்லா மக்களும் ஒரே பிறப்பினர்; பிறப்பில் ஏற்றத் தாழ்வு இல்லை. அவரவர் செய்யும் தொழில் வேற்றுமை

யால் பெருமை சிறுமை என்னும் சிறப்பு ஒவ்வா. சிறப் பொவ்வாமை-ஒருவன் செய்யும் நல்ல தொழிலினுல் பெருமையும், கெட்ட தொழிலினுல் சிறுமையும் அடைதல்.

"பிராமணன் முதல் வருணத்தான் ஆனதாலும் பிரமாவின் முகமாகிய உயர்ந்த இடத்தில் பிறந்ததினுலும், எல்லா வருணத்தாருடைய பொருள்களையும் தானம் வாங்கத் தலைவனுகிருன்"

(மனு, அ-1. சு-100)

"சூத்திரன் பிராமணர்களைத் திட்டினுல், அவன் தாழ்ந்த இடமான காலில் பிறந்தவனுகையால் அவன் நாக்கை யறுக்கவேண்டும்" (மனு, அ-8. சு-270)

"பிராமணனுக்கு மங்கலத்தையும், சத்திரியனுக்கு வலுவையும், வைசியனுக்குப் பொருளையும், சூத்திரனுக்குத் தாழ்வையும் காட்டுகிற பெயரை இடவேண்டும்" (மனு, அ-2. சு-31)

## 2. கல்வி

"மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்ரு ரனைத்திலர் பாடு" (குறள்-409)

கல்லாதவர் உயர் குடியில் பிறந்தாராயினும், தாழ் குடியில் பிறந்தும் கற்ருரைப் போலப் பெருமை யில்லாதவராவர். உயர்குடி-வழிவழியாக நல்லொழுக்கமுள்ள குடி. தாழ் குடி-நல்லொழுக்கமில்லாத குடி. எல்லோரும் கற்க வேண்டும்.

"பார்ப்பனர் இந்த மனுநூலைப் படிக்கலாம்; மற்ற வருணத்தாருக்கு ஓதுவிக்கக் கூடாது"

(மனு, அ-1. சு-103)

"சூத்திரன் பக்கத்தில் இருக்கும்போது வேதம் ஓதக்கூடாது." (மனு, அ-1. சு-99)

"வேதத்தைக் கேட்கிற சூத்திரனது காதுகளில் ஈயத்தையும் மெழுகையும் உருக்கி விடவேண்டும். வேதத்தைச் சொல்லுகிற சூத்திரனது நாக்கை அறுத்தெறிய வேண்டும்; பொருளை யுணர்ந்து வைத்திருக்கிற நெஞ்சைப் பிளக்க வேண்டும்." (வேதம்)
எவ்வளவு அருளுள்ளம் ?

### 3. ஈகை

**"இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய**
**தாமே தமிய ருணல்"** (குறள்-229)

தேடிய பொருளைப் பிறர்க்குக் கொடாமல் தாமே தனியாக உண்ணுதல் இரத்தலைக் காட்டிலும், கொடியது.

"சூத்திரனுக்கு மிஞ்சிய சோற்றையும், ஓமம் பண்ணிய மிச்சத்தையும் கொடுக்கலாகாது."
(மனு, அ-4. சு-80)

### 4. இரத்தல்

**"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகியற்றி யான்"** (குறள்-1062)

இவ்வுலகத்தை யுண்டாக்கியவன், மக்கள் முயற்சியால் ஏதாவது தொழில் செய்து உயிர்வாழ்தலை விரும்பாது, பிறரிடம் சென்று இரந்தும் உயிர்வாழ்தலை விரும்புவானானால், அக் கொடியோன் இரப்பாரைப்போல எங்குந் திரிந்து கெடக்கடவன். உலகம் ஒருவனால் உண்டாக்கப்பட்டது என்னும் கொள்கையைக் கொண்டு கூறியது.

"நாள்தோறும் பிச்சைக்காக ஊர்க்குள் புகவேண்டும்"
(மனு, அ-6. சு-43)

### 5. உழவு

**"சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்**
**உழந்து முழவே தலை"** (குறள்-1031

உழவுத் தொழிலால் உண்டாகும் மெய்வருத்தத்தை நோக்கிப் பிற தொழில்களைச் செய்தாலும், உலகத்தார் உணவுக்காக ஏருடையார் இடத்திற்கே வருவர். ஆதலால், வருந்தியும் உழுதலே தலைமையான தொழிலாகும்.

"சிலர் பயிர்த்தொழில் நல்ல தொழிலென்று நினைக்கிருர்கள். அந்தத் தொழில் பெரியோர்களால் இகழப்பட்டது. ஏனெனில், இரும்பை முகத்திலேயுடைய கலப்பையும் வெண்வெட்டியும் நிலத்தையும், நிலத்திலுண்டான பலபல உயிர்களையும் வெட்டுகிறதல்லவா ?" (மனு, அ-10. சு-84)

வேள்விக்கண் ஆடுமாடுகளை வெட்டுதல் என்னவோ!

## 6. பொய் சொல்லாமை

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" (குறள்-297)

ஒருவன் எப்போதும் பொய் சொல்லா திருப்பின், அவன் வேறு அறங்கள் செய்யவேண்டியதில்லை. பொய்யாமை என்னும் அறம் மற்ற எல்லா அறங்களின் பயனையும் தரும்.

"பல மனைவிகளை யுடையவன் அவர்களின் புணர்ச்சிக்காகவும், பசுமாடுகளின் புல்லுக்காகவும், பிராமணரைக் காப்பாற்றவும் பொய் சொன்னல் குற்றமில்லை. (மனு, அ-8. சு-112)

## 7. கொலையும் புலையும்

"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணுமை நன்று" (குறள்-259)

நெய் முதலியவற்றை ஊற்றி ஆயிரம் வேள்வி செய்தலைக் காட்டிலும் ஒன்றன் உயிரைப் போக்கி அதன் ஊனை உண்ணுமை நல்லது. கொலை வேள்விகள் பல செய்தலை விட ஒருயிரைக் கொன்றுண்ணுமல் இருப்பது நல்லது.

**" நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை "** (குறள்- 328)

வேள்வி மூலம் கொன்றால் நன்மையைத் தரும் பெரும் பயன் கிடைக்கும் என்று பிறர் கூறினும், ஓருயிரைக் கொல்வதால் வரும் பயன் பெரியோர்க்கு இழிந்ததாகும். இது தமிழ்த் துறவிகள் அறம். ஆரிய முனிவர்கள் அறத்தைப் பாருங்கள்.

" அஜீகர்த்தர் என்னும் முனிவர் பசியினால் வருந்தி, சுநச்சேபன் என்னும் தன் பிள்ளையை நர வேள்விக்குக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக நூறு பசுக்கள் வாங்கிக் கொன்று வேள்வி செய்து தமது பசியைத் தீர்த்துக் கொண்டார். அப்படிச் செய்தும் அவருக்குப் பாவம் நேரிடவில்லை."

(மனு. அ-10. சு-105)

"ஒரு பிராமணன் தன்னைப் புலால் உண்ண வேண்டும் என்று பிறர் கேட்டுக் கொள்ளும்போதும், விதிப்படி சிரார்த்தத்தில் வரிக்கப்பட்டபோதும், வேறு உணவில்லாமல் உயிர் போகும்படி நேரிட்டபோதும் மந்திரத்தினால் கொல்லப்பட்ட விலங்குகளின் இறைச்சியை உண்ணலாம்." (மனு, அ-5. சு-27)

" உயிருக்கு ஆபத்து நேருங்கால் உண்ணத்தக்க உயிர்களை நாள்தோறும் உண்டாலும் பாவத்தை யடையமாட்டான். பிரமனாலேயே உண்ணத்தக்கவையும், கொல்லத் தக்கவையும் படைக்கப்பட் டிருக்கின்றன வல்லவா ?" (மனு, அ-5. சு-30)

**சிரார்த்தம் :—**"மீன் இறைச்சியால் சிரார்த்தம் செய்தால் பிதிர்க்கள் இரண்டு மாத வரையிலும் திருப்தியடைவார்கள் ; மான் இறைச்சியால் மூன்று மாதங்களும், செம்மறியாட் டிறைச்சியால் நான்கு மாதங்களும், பறவை யிறைச்சியால் ஐந்து மாதங்

களும், வெள்ளாட் டிறைச்சியால் ஆறு மாதங்களும், புள்ளிமான் இறைச்சியால் ஏழு மாதங்களும், கவரி மான் இறைச்சியால் எட்டு மாதங்களும், கலைமான் இறைச்சியால் ஒன்பது மாதங்களும், முள்ளம்பன்றி, காட்டெருமை இறைச்சியால் பத்துமாதங்களும், முயல் ஆமை இறைச்சியால் பதினெரு மாதங்களும், வார்த்தீசனம் என்னும் கிழ வெள்ளாட் டிறைச்சியால் பன்னிரண்டாண்டுகளும், முள்ளுள்ள வாளைமீன் இறைச்சியால் அளவற்ற காலமும் திருப்தி யடைகிருர்கள்.''

(மனு, அ-3. சு-268, 269, 270, 271)

''சிரார்த்தத்தில் விதிப்படி வரிக்கப்பட்ட பிராமணன் குற்றமென்று இறைச்சியைப் புசியாவிட்டால் அவன் 21 பிறப்புப் பசுவாகப் பிறப்பான்.''

(மனு, அ-5. சு-35)

## 8. ஆராய்ச்சி

''எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'' (குறள்—423)

எந்த ஒரு பொருளை யார் சொன்னுலும் அப் பொருளின் உண்மைப் பொருளை ஆராய்ந்து அறிவதே அறிவாகும்.

''வேதத்தைச் சுருதி யென்றும், தரும சாத்திரத்தை மிருதி என்றும் அறியத்தக்கது. அவ்விரண்டையும் ஆராய்ச்சி செய்து மறுப்பவன் நாத்திகனுவான்.'' (மனு, அ-2. சு-10)

## 9: ஒத்தமுறை

''ஓர்ந்துகண் ணேடா திறைபுரிந்தி யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை'' (குறள்—541)

ஒருவன் செய்த குற்றத்தை ஆராய்ந்து, யாவரிடத்தும் இரக்கம் காட்டாது, தலைமை பொருந்தி, குற்றத்திற்குத்

தக்க தண்டனையை ஆராய்ந்து தண்டித்தலே முறையாகும். குரவர்க்கும் சமநீதி வழங்கவேண்டும்.

1. "பிராமணன் பொருளை அபகரித்த சூத்திரனைச் சித்திரவதை செய்து கொல்லுக. ஆனால், பிராமணன் சூத்திரனுடைய பொருளை விருப்பப்படி கொள்ளையிடலாம்." (மனு, அ-9. சு-248)

2. "பிராமணன் எத்தகைய குற்றங்களைச் செய்தாலும் அவனைத் தூக்குப் போடவேண்டிய நிபந்தனை ஏற்பட்டால், அவன் தலையை மொட்டை யடிக்கவேண்டும். அதுவே அவனுக்குத் தூக்குத் தண்டனைக்கொப்பாம். மற்ற வருணத்தாருக்குக் கொலையே தண்டனை" (மனு, அ 8. சு.379)

3. "கொடிய குற்றம் செய்தாலும் பிராமணனைக் கொல்லாமலும், மற்ற எத்தகைய துன்பத்திற்கும் ஆளாக்காமலும் அவனுடைய பொருளைக் கொடுத்து அயலூருக்கு அனுப்பவேண்டும்."(மனு, அ 8. சு-380)

4. "அரசன் எத்தகைய குற்றத்திற்கும் பிராமணனைக் கொல்ல நினைக்கக் கூடாது." (மனு, அ 8. சு-381)

பார்த்தீர்களா குறளுக்கும் மனுவுக்கும் உள்ள வேறுபாட்டை? இன்னோரன்ன கொடிய அறங்கள்தாம் மனு நூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதனாலேயே அதை மனு அதர்ம நூல் என்கின்றனர் பகுத்தறிவுத் தமிழர். இம் மனு அறங்கள் எப்படித் தமிழர்க்கு அறங்களாகும்? மேலும், இந்த அறங்களெல்லாம் பிரமனால் சொல்லப்பட்டவை என (மனு, அ 1. சு, 58) மனுவே சொல்லுகிறார். இம் மனுநூலில் சொல்லப்படும் அறங்களெல்லாம் வேத சம்பந்தம் உடையவை (மனு, அ 2. சு-7) என அவரே கூறுகிறார். வேதம், மனு முதலிய ஆரிய அற நூல்களின் அற நெறியைப் பாருங்கள். இத்தகைய வருணாச்சிரம தருமங்

களா திருக்குறள் கூறும் பொருள்கள்? தமிழர்க்கு ஏற்றவையா இவை? மேலும், இம்மனு நூலில் சொல்லப்படும் அறங்கள் ஆரியரின் பழைய ஒழுக்கங்களாம். அவர்கள் தமிழ்நாட்டுக்கு (இந்தியாவுக்கு) வருமுன்னர் ஒழுகிய ஒழுக்கங்களும் இவைதாமாம்.

> "பழமையான தேச ஒழுக்கத்தையும் குல ஒழுக்கத்தையும் மனுவானவர் இந்த நூலில் வரிசையாகச் சொல்லியிருக்கின்றார்." (மனு. அ. சு-118)

எனவே, அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' என்னும் கூற்றே பொருந்தாப் போலிக் கூற்றாகும். ஆரியக் கொள்கைகளை எப்படியாவது தமிழர் நம்பும்படி செய்துவிட வேண்டும் என்னும் உட்கருத்துடன் கூறப்பட்டதேயாகும் இவ்வுரைப் பாயிரம். மனுவறம் தமிழர்க்கு எவ்வகையினும் பொருந்தாது. இக்கருத்துடன் உரையிற் புகுத்தப்படும் மனு மறங்களைக் களைந்து குறட் கருத்தை கொள்ளுதல் வேண்டும்.

இனி, 'அது ஒழுக்கம் வழக்கு தண்டம் என மூவகைப்படும்' என்பதும் பொருந்தாவுரையே யாகும். அது அறம். வள்ளுவர், 'அறன் வலியுறுத்தல்' (4) என்னும் அதிகாரத்தில் இல்லறம் துறவறம் என்னும் இருவகை யறங்களின் சிறப்பினைப் பொதுப்படையாக வற்புறுத்திக் கூறிவிட்டு, பின்னர் இல்லறத்தின் பகுதியாகிய அன்புடைமை, விருந்தோம்பல், இன்சொல், செய்ந்நன்றியறிதல், நடுவு நிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை முதலிய அறங்களை ஒவ்வோரதிகாரமாக விளக்கிக் கூறிச் செல்கிறார். எனவே, ஒழுக்கம் என்பது அறமேயன்றி அறத்தின் கூறுபாடு அன்று. வழக்கும் தண்டமும் பொருட்பாலைச் சேர்ந்தனவே யன்றி அறத்துப் பாலில் இடம்பெறா.

4. ஒழுக்கம் என்பது நன்னடக்கை. கெட்ட வழிகளில் நடக்காமல் நல்ல வழிகளில் நடப்பதே ஒழுக்கமாகும். ஒழு

குதல்—ஒழுக்கம். ‘ஒழுக்க முடைமை’ என்னும் அதிகாரத் தில் ஒழுக்கம் இன்னதென்பதை வள்ளுவர் இனிது விளக்கி யுள்ளார். ஒழுக்கமே உயர்குடிப் பிறப்பின் இலக்கணம். நல்லொழுக்கம் நன்மைக்குக் காரணமாகும்; தீய ஒழுக்கம் தீமைக்குக் காரணமாகும், என்பதே ஒழுக்க விளக்கத்தின் சுருக்கமாகும்.

ஆனல், பரிமேலழகரோ, ‘அவற்றுள், ஒழுக்கமாவது அந்தணர் முதலிய வருணத்தார் தத்தமக்கு விதிக்கப்பட்ட பிரமசரிய முதலிய நிலைகளினின்று அவ்வவற்றிற் கோதிய அறங்களின் வழுவா தொழுகுதல்’ என்கிருர். இது பச்சை வருணச்சிரம தருமம். மக்கள் ஒழுகவேண்டிய ஒழுக்கங் களை வள்ளுவர் பொதுப்படையாகக் கூறுகிருரே யன்றி, இன்ன சாதியான் இன்னவாறு ஒழுகவேண்டும் என்ருே, இன்ன சாதியான் இன்ன நிலையில் இன்னவாறு ஒழுக வேண்டுமென்ருே கூறவில்லை. (நிலை-ஆச்சிரமம்) மேலும், ‘ஒழுக்கமுடைமை’ என்னும் அதிகாரத்தை வள்ளுவர் இல் லறவியலில், இல்லறத்தார்க் குரிய ஒழுக்கமாகக் கூறியிருப் பதும், பரிமேலழகரும் தம் உரையில் அவ்வதிகாரத்தை இல் லறவியலிலேயே வைத்து உரை யெழுதி யிருப்பதுமே இவர் கூறுவது போலியுரை என்பதற்குச் சான்ருகும். ஆனல், அவ்வதிகார விளக்கத்திலும், ‘தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத்தினை யுடையராதல் என வரு ணச்சிரம தருமத்தையே புகுத்துகிருர். இது அவர்தம் இயல்பு போலும்!

மேலும், இல்லறத்தில் நல்லொழுக்க மொழுகி, பின் ஒழுக்கத்து நீத்து, அதாவது நல்லொழுக்கத்தினின்று தீய ஒழுக்கங்களைத் துறந்து துறவற நெறியில் ஒழுகுவோர், அவ் வறத்தில் மனவுறுதிப்பா டில்லாமல், முன்விட்ட காம வின் பத்தைப் பின்னும் விரும்பி மறைந்தொழுகும் ‘கூடாவொ ழுக்கம்’ (28) துறவறத்திற்குத் தகாதென விலக்குவதால்,

இவ் வொழுக்கம் பிரமசரிய முதலிய நால்வகை நிலைக்கும் ஏலாமை யறிக.

> "ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
> வழுக்கியும் வாயாற் சொலல்" (குறள்-139)

நல்லொழுக்க முடையவர் மறந்தும் தீய சொற்களைச் சொல்லமாட்டார் என்பதால், வள்ளுவர் கூறுவது பொதுப்படையான ஒழுக்கமே யன்றி, வருணத்திற்கும் நிலைக்கும் ஏற்ற வருணாச்சிரம ஒழுக்கமல்ல.

தமிழ் அந்தணர் என்பார் தனிச் சாதியல்லர். வேளாளர், வணிகர், அரசர் என்னும் வகுப்பினரில் இல்லறம் இனிது நடத்தி, காமம் தீர்ந்த காலத்துக் குடும்பத்தை மக்களிடம் ஒப்படைத்துவிட்டுப் பொதுநலம் புரியும் பெரியோர்களே அந்தணர் ஆவர் எனத் தொல்காப்பியர், பொருளதிகாரக் கற்பியல் 51-ஆம் சூத்திரத்தில் கூறுகிறார். அந்தணர்—துறந்தார்—நீத்தார். 'அந்தணர் என்போர் அறவோர்' (30) என வள்ளுவரே கூறுதல் காண்க. எனவே, பரிமேலழகர், 'அந்தணர் முதலிய வருணத்தார்' என அந்தணரை ஒரு சாதி எனக் கூறியிருத்தல் சிறிதும் பொருந்தாது. தமிழரில் அந்தணர் என்பது அறப்பெயர் (துறவறம்). ஆரியரிற்றான் அந்தணர் என்பது சாதிப் பெயர்.

இனி, ஆரியப் பிராமணரைத் தமிழ்ப் பெயரால் அந்தணர் எனக் கூறுவதே தவறாகும். ஆரியப் பிராமணர் பிரமாவின் முகத்தில் பிறந்த முதல் சாதியினர். தமிழந்தணர் துறவறத்தினர்; தனிச் சாதியினரல்லர். தமிழந்தணர்களோ மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுபவர் (குறள்—30); இல்லறந் துறந்து பொதுநலம் புரிபவர்; தீய ஒழுக்கம் சிறிதும் இல்லாதவர்; அளவற்ற பெருமை யுடையவர்; புலனடக்க முடையவர்; செயற்

கருஞ் செயல் செய்பவர்; குணக்குன்றுகள்; சினம் என்பதை அறியாதவர்; உயிர்களிடத் தருளுடையவர்.

ஆனல், ஆரியப் பிராமணரோ, படகோட்டிய கன்னிப் பெண்ணைப் படகிலேயே புணர்தல் போன்ற தீய ஒழுக்கமே உருவானவர்; வேண்டியதை இல்லை என்னது கொடுத்த வள்ளலாகிய மாவலியை வஞ்சித்துக் கொல்லும் சிறுமை யுடையவர்; புலனடக்கமின்றி நாச்சுவைக்கக் கள்ளுங் கறியுமுண்டு காலங்கழித்தவர்; அன்போடு வரவேற்று உணவுடை யுதவிப் போற்றிய தமிழர்களை வஞ்சித்துக் கொன்றும், நூற்றுக்கணக்கான தமிழரசர்கள் கோட்டைகளைத் தீவைத்துக் கொளுத்தியும் (ரிக் வேதம்) கொடுமைகள் செய்த இழிதொழிலாளர்; தங்களைப்போல் பிறரும் கல்வி கற்று மேம்பட வாழக்கூடாதென்னும் இழிகுண முடையவர்; எடுத்ததற் கெல்லாம் கல்லாய்ப் போ, மண்ணாய்ப் போ என்று சபிக்கும் கடுஞ் சினத்தார்; பிறருக்கு மிஞ்சிய சோற்றைப் போடுவதும் பாவம் என்னும் வன்னெஞ்சர்கள்; 'கல்மனப் பார்ப்பார் தங்களைப் படைத்துக் காகத்தை என்செயப் படைத்தாய்' என்பது விவேக சிந்தாமணி. பொதுநல மென்பதையே அறியாதவர். இப்படியிருக்க, இங்கே அந்தணர் என்றது பிராமணர்களையே யாகும்; தமிழந்தணர்களை யன்று. பிராமணர் எவ்வகையிலும் அந்தணர் என்னும் பெயருக்கு உரியவராகார். ஆரிய முனிவர்களும் இல்லறம் முற்றித் துறந்தவர்களல்லர்; இள மனைவி மக்களுடன் வாழ்ந்துவந்த ஒரு சாதியினரே யாவர்.

இனி, பிரமசரிய முதலிய நால்வகை நிலைகளும் தமிழர் ஒழுக்கமல்ல. தமிழ்த் துறவென்பது இல்லறப் பற்றின்றிப் பொதுநலம் செய்யும் நிலையேயன்றி, மனைவி மக்களைவிட்டு, ஊரைவிட்டு ஓடிவிடுவதன்று. அத்தகைய குறிப்பொன்றும் திருக்குறளில் இல்லை. பட்டினத்தார் போன்ற ஒரு சில தமிழர் அவ்வாறு வெளியேறினாரெனின், அன்னார்

தமிழ்நாட்டை ஆரியச் சார்பான சமயவிருள் மூடியிருந்த காலத்தில் இருந்ததாலும், வடமொழிக் கொள்கைகளைத் தமிழ்க் கொள்கையெனக் கொண்ட மயக்கத்தாலும் அவ்வாறு செய்தனர். பட்டினத்தார் போன்ருர், 'ஊரார் சதமல்ல, உற்ருர் சதமல்ல, பெற்ருர் சதமல்ல, பெண்டீர் சதமல்ல, என வெறுத்தும், பெண்களைக் கண்டபடி பழித்தும், தாம் நற்பேறடைவ தொன்றையே பெரிதாகக் கருதி, அதற்காகவே முயன்று வந்தாராகையால், அன்னுர் தன்னல மொன்றையே கருதினுர்களன்றிப் பொதுநலம் என்பதைக் கனவிலும் கருதினுரில்லை யாகையால், அவர்கள் செந்தண்மை பூண்ட அந்தணராகார்.

அயன் அரி அரன் முதலிய தேவர்களிடம் ஒன்றை வேண்டிக் காட்டிற் சென்று தவம் செய்யும் வழக்கமும் தமிழர் வழக்கமன்று. திருக்குறளில் கூறப்படும் 'தவம்' என்னும் அதிகாரத்தை (27) நோக்குக. அது மனவடக்கத்தின் பொருட்டு ஊனும் உறக்கமும் குறைத்தல், உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்தல், பிற உயிர்களைப் போற்றுதல் முதலிய நோன்பு நோற்றலேயாகும். காட்டில் சென்று கண்ணை மூடிக்கொண்டு கடவுளை நோக்கி ஒன்றை வேண்டுவதன்று. மும்மூர்த்திகளை வேண்டித் தவம் செய்து வேண்டிய வரங்களைப் பெற்றனர் என்பதெல்லாம் புராணக் கதைகளேயாகும். சிவபெருமான் திருவடி நிழலையடைய அரும்பாடு பட்ட பெரிய புராண நாயன்மார் கதையில்கூடக் காட்டில் சென்று கண்மூடித் தவம் செய்ததாகக் கதையில்லை.

இனி, மணம் செய்து கொள்ளாமல் குருவின் வீட்டிலேயே இருந்து படித்தல் என்பதும் தமிழர் வழக்கமன்று. பழங்காலத் தமிழர்கள் மணஞ் செய்துகொண்ட பின்னரே அயல் நாடுகளில் சென்று அந்நாட்டு நாகரிகங்களைக் கற்று வந்தனர். அக்கல்விப் பிரிவு மூன்ருண்டுவரை உண்டு என்பது,

"வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது"
(தொல், கற்—47)

என்னும் தொல்காப்பியர் வாக்கால் தெரிகிறது. எனவே, பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நால்வகை நிலைகளும், ஆரிய நாகரிகமே யன்றித் தமிழர் நாரிகமல்ல. பிரமசரியம்—குருகுலத்திலிருந்து படித்தல். குலம்—வீடு. கிருகத்தம்—இல்லறம். வானப்பிரத்தம்—மனைவியுடனே, தனித்தோ காட்டில் சென்று தவம் செய்தல். சந்நியாசம்—துறவு. அந்நிலைகளே தமிழ் மரபின்மையால், அவ்வவற்றிற் கோதிய அறங்களும் தமிழர்க்குரியவையல்ல. பரிமேலழகர் வேண்டுமென்றேஆரிய வருணாச்சிரம தருமத்தை வலிந்து புகுத்தியதேயாகும்.

5. வழக்கு என்பது பொருட்பாலைச் சேர்ந்தது. 'அவ்வழக்குக் கடன்கோடல் முதல் பதினெட்டுப் பதத்ததாம்' என்பது மனு முறையே யன்றிக் குறள் முறையல்ல. பதினெட்டாவன: கடன்கோடல், உபநிதி, கூடிமேம்படல், நல்கியதை நல்காமை, ஒப்பிப் பணி செய்யாமை, கூலி கொடாமை, உடையனல்லான் விற்றல், விற்றுக் கொடாமை, கொண்டுள்ள மொப்பாமை, கட்டுப்பாடு கடத்தல், நிலவழக்கு, மாதராடவர் தருமம், தாயபாகம், வன்செய்கை, சொற்கொடுமை, தண்டக்கொடுமை, சூது, ஒழிபு என்பன. இவை பதினெட்டும் மனு, அத்தியாயம் எட்டில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

6. தமிழர்கள் ஒரே வகையான ஒழுக்கமுடையவர்கள். தமிழர் வாழ்வு ஒரே தரமானது. இன்றுள்ள தமிழரைப் பார்த்து ஐயுறக் கூடாது. இன்றுள்ள தமிழர், தமிழ் மரபினின்றும் தவறிய நிலையிலுள்ளவராவர். இன்றுள்ள சாதிப் பிரிவுகளும், சாதி வேற்றுமைகளும் வள்ளுவர்

காலத்தில் இல்லை. இவை ஆரியப் பழக்கத்தால், ஆரியக் கொள்கைகளைப் பின்பற்றியதால், ஆரிய நாகரிகத்திற்குத் தமிழ் நாகரிகம் இரையானதால் ஏற்பட்ட பிரிவுகளே யாகும். ஆரியர் இங்கு வருமுன், தமிழினம் ஆரிய நாகரிகத்தால் தாக்குண்ணுமுன், தமிழரிடைச் சாதி வேற்றுமை யின்றி, எல்லோரும் கொண்டு கொடுத்து ஒரே இனமாக வாழ்ந்துவந்தனர் என்பது தொல்காப்பியக் கற்பியல் மூன்ருவது சூத்திரத்தால் விளங்குகிறது. பிறவி வேற்றுமையோ, குலவேற்றுமையோ அன்று தமிழரிடை இல்லை. 'பிறப் பொக்கும் எல்லா வுயிர்க்கும்' (குறள்—972). தமிழர் எல்லோரும் ஒரே இனம் ; ஒரு குலைக்காய் !

உழவு, கைத்தொழில் என்னும் இருவகைத் தொழிலும் மக்களின் உயிர் வாழ்க்கைக்கு, நாகரிக நல்வாழ்வுக்கு உதவி செய்வன வாகையால் அத்தொழிலாளர்கள் வேளாளர் எனப்பட்டனர். வேள்-உதவி. 'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்' என்பது திரிகடுகம். "தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு" (212) என்பது திருக்குறள். நாள் ஆகஆக உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருளை உண்டாக்கும் உழவுத் தொழிலாளர்க்கே உரித்தாயது வேளாளர் என்னும் பெயர். மற்ற தொழிற் பெயர்களால் தொழிலாளர் வகுப்புகள் உண்டாயின. பிற்காலத்தே ஆரியக் கொள்கையின் ஆதிக்கத்தால் அத்தொழில் வகுப்புகள் தனித்தனித் தொழில் இனங்களாகி, முடிவில் ஏற்றத் தாழ்வுடைய வெவ்வேறு சாதிகளாகி வேறுபட்டன.

பழங்காலத் தமிழகத்தில், தமிழர்க்குள் வேளாளர், வணிகர், அரசர், அந்தணர் என்னும் நான்கு பிரிவே இருந்தன. இவை தொழில் பற்றிய பெயர்கள். அந்தணர் என்பது பொதுநலத் தொழிற்பெயர். உழவு முதலிய

தொழில் செய்வோர் வேளாளர். அவர்களில் வாணிகம் செய்வோர் வணிகர். அவர்களில் நாடு காப்போர் அரசர். அரசு-காவல். இம்மூவகைத் தொழிலினத்தினும் இல்லறம் முற்றித் துறவு பூண்டு பொதுநலம் புரிவோர் அந்தணர். இந் நாற்பாலினவாய் ஒருபாற்பட்டு நன்கினிது வாழ்ந்து வந்தது பழந்தமிழினம். தமிழ் மக்கள் குறள் நெறியைக் கடைப்பிடித்தால் பழையபடி அந்நிலையை அடையலாம்.

இவ்வாறிருக்க, ‘அதுதான் (அவ்வொழுக்கம்) நால் வகை நிலத்தாய்,வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையாகிய அச்சிறப்பியல்புகள் ஒழித்து, எல்லார்க் கும் ஒத்தலின் பெரும்பான்மையாகிய பொதுவியல்பு பற்றி இல்லறம் துறவறம் என இருவகை நிலையில் கூறப் பட்டது’ என்பது தனி ஆரியக் கொள்கையே யாகும். பிராமணர் முதலிய வருண வேற்றுமையும், பிரமசரிய முதலிய நிலைகளும் தமிழ் மரபு அன்மையாலும், தமிழ் அந்தணர் ஒரு சாதி அல்லராலும் இது பொருந்தாக் கூற்றேயாகும். ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு வருணத் திற்கும் வெவ்வேறு ஒழுக்கங்கள் விதித்துள்ள ஆரிய வருணாச்சிரம தருமம் இயற்கைக்கு மாறுபட்ட அடக்கு முறை ஆதிக்க வெறிச் சட்டமேயாகும்.

எனவே, இவ்வுரைப்பாயிரம் திருக்குறளுக்கு எவ்வகை யிலும் பொருந்தாத தொன்றுகும். பரிமேலழகர் திருக் குறளில் தாம் வலிந்து புகுத்தும் உரைக்கு உறுதுணையாக உரைக்கப்பட்டதே யாகும் இவ்வுரைப்பாயிரம். இவ்வாறு சிறிதும் பொருத்த மில்லாததும், தமிழ் மரபுக்குப் புறம்பா னதும், தமிழ்ப் பழக்க வழக்க மல்லாததும், தமிழ் மரபைத் தாழ்த்துவதும், திருக்குறள் படிப்போர் சிந்தையைச் சிதைப்பதும் ஆகிய ஆரியக் கொள்கையை வேண்டு மென்றே முதலில் கூறிவைத்த பரிமேலழகரின் நெஞ்சமூத்

தமே அழுத்தம்! இத்தகைய துணிவு தமிழறிஞர்க்கு இல்லாமைக்குத்தான் இரங்கவேண்டி யிருக்கிறது, இனி யாகிலும் தமிழறிஞர்கள் தமிழ் மரபுக்குப் புறம்பான கருத்துக்களை யார் கூற்றுனும் அஞ்சாது எடுத்துக்கூறும் நெஞ்சுரம் கொள்வார்களாக. வாழ்க தமிழ்மரபு!

——

# 5. ஆரியக் கொள்கை

பரிமேலழகர் உரை எத்தகையது, அதனுல் திருக்குறளின் தனித்தமிழ்க் கொள்கை எவ்வாறு மறைக்கப்பட்டுள்ளது என்பவற்றை அவர் உரைத்துள்ள உரைப்பாயிரத்தால் ஒருவாறு உணர்ந்தாம். இனி, அவர்தம் உரையில் வள்ளுவர் கருத்துக்கு மாருகத் தமது கருத்துக்களை வலிந்து புகுத்தித் திருக்குறளின் உண்மைக் கருத்துக்களைத் தமிழ் மக்கள் அறிந்து பயன்பெற முடியாது செய்துவிட்டமையை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். அதுவே இந் நூற்பயனுமாகும்.

தமிழர் கொள்கை வேறு, ஆரியர் கொள்கை வேறு. தமிழர் கொள்கைக்கும் ஆரியர் கொள்கைக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. அவ் விரண்டிற்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள தூரம். அவை எண்ணெயும் தண்ணீரும் போல், பகலும் இரவும் போல் வேறுபட்டவை. தமிழர் நாகரிகம் மக்கட் பண்பாட்டினின்று இயல்பாகத் தோன்றிப் படிப்படியாக வளர்ந்து மாண்புற்றது. ஆரியர் நாகரிகம் மக்கட் பண்பாட்டுக்குப் புறம்பாக வலிந்து புகுத்தி வளர்க்கப்பட்டது. தமிழர் நாகரிகம் ஒத்த நீதி யுடையது. ஆரியர் நாகரிகம் ஒருகுலத்துக் கொரு நீதி யுடையது. தமிழ் நாககரிகம் தமிழினத்தின் பொதுவுடைமை. ஆரிய நாகரிகம் ஏற்றத் தாழ்வான பிறவி வேற்றுமை யுடையது. தமிழ் நாகரிகம் தமிழர் எல்லோர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆரிய நாகரிகம் குல வேற்றுமையும் நிலைவேற்றுமையும் உடையது. (நிலை-ஆச்சிரமம்) தமிழ் நாகரிகம் இயல்பானது, ஆரிய நாகரிகம் திரிபானது என்பனவற்றை முதலில் மனத்தில் நன்கு பதித்துக்கொள்ள வேண்டும். அப்போதுதான் பரிமேலழகர் குறட் கருத்துக்களை மாற்றியும் வலிந்

தும் தொடர்பில்லாமலும் புகுத்தியுள்ள ஆரியக் கொள்கைகள் எளிதில் விளங்கும். அவை விளங்கினாற்றான் குறளின் உண்மைக் கருத்தும் எளிதில் விளங்கும். ஆரிய நாகரிகமாவது, தமிழ் நாகரிகமாவது. எல்லாம் ஒன்றுதான், என்னும் மனப்பான்மை யுடையவர்க்கு வள்ளுவரின் உண்மையுள்ளம் ஒருபோதும் விளங்காது.

## 1. வருணாச்சிரம தருமம்

வருணாச்சிரம தருமமாவது-பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நால்வகை ஆரியச் சாதியினரும், பிரமசரியம், கிருக ஃச்தம். வானப்பிரஃச்தம், சந்நியாசம் என்னும் நால்வகை நிலைகளிலும், அவரவர்க்கு விதிக்கப்பட்ட விதிப்படி ஒழுகும் ஒழுக்கமாகும். வருணாச்சிரம தருமம்-**குலநிலை அறம்**. குலம்-வருணம், சாதி. நிலை-ஆச்சிரமம். குலநிலை அறம்—குலத்துக்கும் நிலைக்கும் ஏற்ற அறம். பிரமசரியம்-கல்விநிலை. கிருகஃச்தம்-இல்லறம். வானப்பிரஃச்தம்-தவநிலை. சந்நியாசம்-துறவு. வேதம், மனு முதலிய ஆரிய அறநூல்களில் ஒவ்வொரு சாதிக்கும், நிலைக்கும் தனித்தனி ஒழுக்கங்கள் கூறப்படுகின்றன. குல வேற்றுமை, நிலை வேற்றுமை ஆகிய அவற்றைக் **குலநிலையொழுக்கம்** எனவும் கூறலாம். இக் குலநிலை யொழுக்கம் தமிழர்க்குரியவை யல்ல. தமிழரிடைக் குலவேற்றுமையும் நிலைவேற்றுமையும் இல்லை. ஒன்றே குலம் ஒருவகை நிலையே.

> 1. **ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
> **வேண்டும் பனுவற் றுணிவு.** (21)

பனுவல் துணிவு-நூல்களது துணிவு, ஒழுக்கத்து நீத்தார் பெருமை-நல்லொழுக்கத்தில் நின்று தீய ஒழுக்கங்களைத் துறந்தாரது பெருமையையே, விழுப்பத்து வேண்டும்-எல்லாப் பெருமைகளிலும் மேலாக விரும்பும்.

பனுவல்-நூல். அது நூலாசிரியரைக் குறிக்கும். அறிவுநூற் புலவர்கள், நீத்தார் பெருமையை எல்லாப் பெருமைகளிலும் மேலான பெருமையாகக் கொள்வர் என்பதாம்.

**பரிமேல்ழகர் :** 'தமக்குரிய ஒழுக்கத்தின் கண்ணே நின்று துறத்தலாவது-தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்களை வழுவாதொழுக அறம் வளரும், அறம் வளரப் பாவந்தேயும், பாவந்தேய அறியாமை நீங்கும்' என அடுக்கிக்கொண்டு போகிறார்.

'தமக்குரிய' என வருவித்து, தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் உரிய ஒழுக்கங்கள் என வருணாச்சிரம தருமத்தைப் புகுத்துகிறார். துறவறம் ஒரே தன்மைத்தன்றிச் சாதிக்கேற்ற ஒழுக்கமுடையதன்று. ஒழுக்கத்து நீத்தல்-நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்துத் தீய ஒழுக்கத்தைத் துறத்தலேயாகும். இங்கு குலத்துக்கும் நிலைக்கும் இடமேயில்லை. நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்துத் தீய ஒழுக்கத்தை விட்டவர் பெருமையே எல்லாப் பெருமையினும் மேலான பெருமையாகும் என்பதே குறளின் கருத்தாகும்.

2. **இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்**
**நல்லாற்றி னின்ற துணை.** (41)

இல்வாழ்வான் என்பான் - குடும்ப வாழ்க்கை நடத்துபவன் என்று கூறப்படுவோன், இயல்புடைய மூவர்க்கும். அறத்தின் தன்மையை யுடைய மூவர்க்கும், நல்லாற்றின் நின்ற துணை-நல்ல வழியில் நிலைபெற்ற துணையாவான்.

அறத்தின் தன்மையை யுடையார்-அறவாழ்வு வாழ்பவர். அவர் அடுத்த குறளில் வரும் துறந்தார் முதலிய

மூவர். இக்குறள் தொகுத்துச் சுட்டல். அம் மூவரையும் நல்லாற்றில் வாழச் செய்பவர் இல்வாழ்வாரே.

பரி: 'ஏனை மூவராவார் - ஆசாரிய னிடத்தினின் றோதுத லும், விரதங் காத்தலுமாகிய பிரமசரிய வொழுக்கத் தானும், இல்லை விட்டு வனத்தின்கண் தீயொடு சென்று, மனையாள் வழிபடத் தவஞ்செய்யும் ஒழுக் கத்தானும், முற்றத்துறந்த யோக வொழுக்கத்தானும் எனுமிவர். இவருள் முன்னை யிருவரையும் பிறர் மத மேற்கொண்டு கூறினார்.'

பிரமசரிக்கு இல்லறத்தான் துணையாயினும், காட்டின் கண் மனையாளொடு சென்று தவஞ் செய்வோனுக்கு எப்படித் துணையாவான்? இன்று மனையாளொடு யாத்திரை செல்வோர் அவ் யாத்திரைக்கு வேண்டிய பொருள் கொண்டு செல்வதுபோல, தவஞ் செய்யச் செல்வோரும் வேண்டுவன கொண்டு செல்வாரன்றோ? அவரே 'இவருள் முன்னையிருவரையும் பிறர்மதமேற் கொண்டு கூறினார்' என் கின்றார். பிறர் கொள்கையை எடுத்துக் கூறுதல் எனவே, இது தமிழர் கொள்கையன் றென்பதை ஒப்புக்கொண்டு வலிந்து புகுத்துதலேயாகும். மனையாள் வழிபடக் காட் டின்கட் சென்று தவம் செய்தல் தமிழர் கொள்கை அன்றென்பது உரைப்பாயிர விளக்கத்தில் விளக்கப் பட்டது.

3. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை.

துறந்தார்க்கும்-துறவிகளுக்கும், துவ்வாதவர்க்கும்- வறுமையினால் உண்ண உணவின்றித் தவிக்கும் ஏழைகளுக் கும், இறந்தார்க்கும்-பாதுகாப்போர் இல்லாதவர்க்கும், இல்வாழ்வான் என்பான் துணை-இல்லறத்தான் துணை யாவான்.

துஆதவர்-துவ்வாதவர். து-உண். துவ்வாதவர்-உண்ண உணவில்லாதவர்-எளியர். இறத்தல்-கடத்தல். இறந்தவர்-கடந்தவர்-நீங்கினவர். குடும்பத்தினீங்கினவர்-யாருமற்றவர்; தாமாக வாழமுடியாத இளைஞரும் முதியரும்-(அனாதைகள்). துறவிகள், எளியவர், யாருமற்றவர் ஆகிய மூவர்க்கும் இல்வாழ்வார் துணையாவர்.

பரி: 'துறந்தார்க்கும்-களைகண் ஆனவரால் துறக்கப்பட்டார்க்கும், துவ்வாதவர்க்கும் - நல்கூர்ந்தார்க்கும், இறந்தார்க்கும்-ஒருவருமின்றித் தன்பால்வந் திறந்தார்க்கும்.

துறந்தார்க்குப் பாவம் ஒழிய அவர் களைகணாய்நின்று வேண்டுவன செய்தலானும், இறந்தார்க்கு நீர்க்கடன் முதலியன செய்து நல்லுலகின்கட் செலுத்துதலானும் துணை யென்றார்.'

களைகண்-துணை, ஆதரவு. மேல் 41-ஆம் குறளுக்கு அவ்வாறு பொருள் கொண்டதனாலேயே இக்குறளுக்கு இவ்வாறு பொருள் கொள்ளலானார். 'துறந்தார்' என்னும் செய்வினைக்குத் 'துறக்கப்பட்டார்' எனச் செயப்பாட்டு வினைப் பொருள் கொண்டுள்ளார். தம்மால் ஆதரிக்கப் படுபவரை ஆதரிக்காது விடுதல் பாவம் என்பதும், அப்பாவம் வேறொருவரால் ஆதரிக்கப்பட்டால் தீரும் என்பதும் ஆரியக் கொள்கையாகும். நீர்க்கடன்-சிரார்த்தம் அல்லது திதி கொடுத்தல். திதி கொடுப்பதால் உயிர் வானுலகும் வீடும் அடையும் என்பதும் ஆரியக் கொள்கையே.

துறவிகட்கும், வறிஞர்கட்கும், தம்மால் உழைத்து உண்ணமுடியாத அனாதைகட்கும் உதவுதல் இல்லறத்தார் கடமையாம். துறவிகள் பொதுநலம் புரிவதால் அவர்க்

குதவுதல் கடமையாகும். ஏனை இருவர்க்கும் உதவுதல் ஒப்புரவாகும்.

4. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றுங்
கைம்புலத்தா றோம்பல் தலை. (43)

தென்புலத்தார்-தென்னாட்டினர், தெய்வம்-தன் முன்னோர், விருந்து-விருந்தினர், ஒக்கல்-சுற்றத்தார், தான் என்று ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை-தான் என்னும் ஐந்திடத்தும் அறவழியைத் தவருது செய்தல் இல்வாழ்வானுக்குச் சிறந்தது.

புலம்-இடம். தென்புலத்தார்-தமிழர். வடபுலத்தாரும் இருந்ததால் தென்புலத்தார் என்ருர். இது இனப்பற்று. அதாவது தமிழினப் பற்றுக் கொள்ளுதல். தெய்வம்-மேன்மை; தன் முன்னோரின் மேன்மை அல்லது பெருமை விளங்கச் செய்தல். அதாவது தன் குடிக்குரிய நல்லொழுக்கத்தில் தவருதொழுகித் தன் முன்னோர் பெயர் விளங்கச் செய்தல். தன் உடலையும் ஒழுக்கத்தையும் போற்றுதலும் இல்வாழ்வான் கடமையாயிற்று. இனப்பற்றுக் கொள்ளுதலும், முன்னோர் பெயர் விளங்கச் செய்தலும், விருந்தினரைப் போற்றுதலும், சுற்றந்தழுவலும், தம்மைப் பேணுதலும் இல்வாழ்வார் கடமையாகும்.

பரி: 'தென்புலத்தார்-பிதிரர். தெய்வம்-தேவர். பிதிரராவார்-படைப்புக் காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி. அவர்க்கிடம் தென்றிசை யாதலின் தென்புலத்தார் என்ருர். ஐவகையும் அறஞ்செய்தற்கு இடனுகலின் ஐம்புலமென்ருர். இவ் வைம்புலத்திற்கும் ஐந்துகூறு வேண்டுதலான் அரசனுக்கு இறைப்பொருள் ஆறிலொன்ருயிற்று'

பிதிர்க்கள் இறந்துபோன முன்னோர்கள் (தகப்பன், பாட்டன்) என்று மனு, அத்தியாயம் 3. சுலோகம் 220,

221-ல் கூறியிருக்க, மனுவை அறநூலென்று ஒப்புக் கொண்டு, அதைக் குறளுரையில் வலிந்து புகுத்தும் இவர், அதற்கு மாருக, 'பிதிரராவார்-படைப்புக் காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட் சாதி' என்பது, 'மாறு கொளக்கூறல்' என்னும் குற்றமாகும். 'அவர்க்கிடம் தென்றிசை' என்பது யமபுரம் அல்லது நரகவுலகத்தையே யாகும். பாண்டு நரகவுலகத்தில் இருப்பதைக் கேள்விப் பட்ட பாண்டவர் அரச வேள்வி செய்து அவரை வானுல கடையச் செய்ததாகப் பாரதம் கூறுவதால், இறந்தவர் நரகவுலகத்தை யடைவர் என்பதும், அது தென்றிசைக் கண் உள்ளதென்பதும் வடநூற் கொள்கையாகும்.

மேலும், 'இறந்தார்க்கு நீர்க்கடன் முதலிய செய்து நல்லுலகின்கட் செலுத்துதலானும்' (குறள் —42) என்னும் இவர் கூற்றுக்கும் இது மாருகவன்ரே உளது ? 7-ஆம் அதிகார விளக்கத்தில், 'தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும்' எனப் புதல்வன் திதி செய்தலைக் குறிப்பிடு கிருர். 63-ஆம் குறளுரையிலும் இதைக் கூறுகிருர். பிதிரர் கடவுட் சாதியெனின், அவர்க்குப் புதல்வர் செய்யும் கடன் என்ன ? அக்கடனுல் தந்தைக்கு-தந்தையின் உயிர்க்கு ஏற்படும் நன்மை என்ன ? 'தந்தைதாய்க்குத் திதிகொடுத் தான் என்பது பாவனையில் கொடுத்தல்' என்னும் நன்னூல் நான்காம் வேற்றுமை யுரையாலும் முன்னேரே பிதிர்க்கள் என்பது வெளிப்படை. எனவே, பிதிரர் கடவுட் சாதி என்பது பொருந்தாவுரையே யாகும். இக்குறள் இல்வாழ் வான் கடமை கூற, இவர், 'இவ்வைம்புலத்திற்கு ஐந்து கூறு வேண்டுதலான் அரசற்கு ஆறிலொரு கடமை யாயிற்று ' எனக் கொடுத்தலாகக்கூறுதல் பொருந்தாவுரை யாகும். ஒருவன் தான் தேடுவதில் ஐந்து கூறைப் பிறர்க் கீந்து தான் ஒரு கூறு கொள்ளவேண்டும் என்பது பொருந்தா அறமேயாகும்.

5. வள்ளுவர், ஓரதிகாரத்தில் வரும் சொல்லையோ, சொற்றொடரையோ கொண்டே அவ்வதிகாரத்திற்குப் பெயரிட்டுள்ளனர். அக் கொள்கைப்படி 7-ஆம் அதிகாரத்தில் **புதல்வர்** என்னும் பெயர் வரவேயில்லை. **மக்கள்** என்னும் பெயர் 7 குறளில் வந்துள்ளது. முதற் குறளில் **மக்கட்பேறு** என்பதும் வந்திருக்கிறது. எனவே, அவ்வதிகாரத்திற்கு 'மக்கட்பேறு' என்னும் பெயரே பொருந்தும். மணக்குடவர் 'மக்கட்பேறு' என்றே பெயரிட்டுள்ளார். பரிமேலழகரோ தனது ஆரியக் கொள்கைக்கேற்ப, வருணாச்சிரம தருமத்தை நிலைநாட்டப் **புதல்வரைப் பெறுதல்** என்று பெயரிட்டுள்ளார். இப்பெயர் பெண்பாலை ஒழிப்பதால் பெண்ணடிமையைக் குறிக்கிறது.

அதிகார விளக்கத்தில், 'இருபிறப்பாளர் மூவரானும் இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியானும், தேவர் கடன் வேள்வியானும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலானும் அல்லது இறுக்கப்படாமையின்' எனப் பச்சை வருணாச்சிரம தருமத்தை அப்படியே புகுத்துகிறார்.

கேள்வி-ஓதுதல், கற்றல்-பிரமசரியம். அப்புதல்வரால் பிதிர்க்களுக்கு நீர்க்கடன் செய்தல் கூறுதலால், முன் (43) 'தென்புலத்தார் ஒரு கடவுட்சாதி' என்றதற்கு மாறுபடக் கூறலேயாம். மேலும், வள்ளுவர் பொதுவாக மக்கட்பேற்றின் சிறப்புக்கூற, இவ இருபிறப்பாளரான பிராமணர், சத்திரியர், வைசியர், என்னும் ஆரிய முதற் குலத்தோர் மூவரின் மக்கட்பேறே கூறினதாகக் கூறி, சூத்திரர் திதி செய்யப்படாமையான் அவரை விலக்கிவிட்டார். இஃது வள்ளுவர் கருத்தறியாமையே யாகும். வள்ளுவர் உலக நிகழ்ச்சியின் இன்றியமையாமையான மக்கட்பேறு கூற, இவர் அதை வருணாச்சிரம தருமத்தின்பாற் படுத்தி

மருட்டிவிட்டார். தமிழ் அந்தணர் துறவிகளாதலால் இது ஆரியக் கொள்கையே யாகும். தமிழ் வேளாளர் உயர் மக்கள் என்பது இங்கு அறியத்தக்கது. ஆரியக் கொள்கையைத் தழுவிய தமிழ்நாட்டு வேளாளர் இன்று திதி செய்து வருகின்றனர்.

**6. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு. (81)**

இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம்-வீட்டின்கண் இருந்து பொருள்களைப் போற்றி வாழ்வதெல்லாம், விருந்து ஓம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு-வந்த விருந்தினரைப் போற்றி அவர்க்கு உதவி செய்வதற்காகவே. விருந்தினரைப் போற்றுதலே இல்வாழ்வாரின் முதற்கடமை. விருந்தினர்-புதியவர்.

**பரி :** 'இல் இருந்து-மனைவியோடும் வனத்திற் செல்லாது இல்லின்க ணிருந்து' என்கிறார்.

'மனைவியோடும் வனத்திற் செல்லாது' என்பது இந்த இடத்திற்கு ஏலாத வருணச்சிரம தருமப் புகுத்தலேயாம். 'இல் இருந்து' என்பது-இல்லறத்தைக் குறிக்கும் தொடரேயன்றி, 'வனத்தின்கண் செல்லாது' என்பதை அவாவியதன்று. ஆரிய மக்கள் தாம் தவம் என்னும் பெயரால் மனைவி மக்களோடு பெரும்பான்மையோர் காட்டில் வாழ்ந்து வந்தார்களே யன்றித் தமிழர் வழக்கமன்று. விருந்தோம்பல் என்பது தமிழர்க்கே யுரிய தனியறம் என்பதை இவர் அறியார் போலும்!

**7. ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும். (133)**

ஒழுக்கம் உடைமை குடிமை-நல்லொழுக்கம் உடைமையே உயர்குடித் தன்மையாகும், இழுக்கம் இழிந்த பிறப்

பாய் விடும்-ஒழுக்கமின்மை தாழ்குடித்தன்மை யாகிவிடும். தாழ்குடித்தன்மை-நல்லொழுக்க மில்லாத தன்மை. பிறப்பு என்றது குடியை.

பரி: 'ஒழுக்கம் உடைமை குடிமை-எல்லார்க்கும் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்க முடைமை குலனுடைமை யாம். இழுக்கம் இழிந்த பிறப்பாய்விடும்-அவ் வொழுக்கத்திற் றவறுதல் அவ்வருணத்தில் தாழ்ந்த வருணமாய் விடும்.

பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தாராயினும் ஒழுக்க முடையவராக உயர்குலத்தாராவராகலின் குடிமை யாம் என்றும், உயர்ந்த வருணத்துப் பிறந்தாராயினும் ஒழுக்கத்திற்றவறத் தாழ்ந்த வருணத்தா ராவராகலின் இழிந்த பிறப்பாய்விடும் என்றும் கூறினர்.'

'வருணத்திற் கேற்ற ஒழுக்கம்' என்பது வருணாச்சிரம தருமம். பிறந்த வருணத்துள் இழிந்த குலத்தார் என்பது ஆரியருக்குள் இல்லை. இதுவரை எந்த மூன்றுங்குல நாலாங் குலத்தோனும் நல்லொழுக்கத்தால் பிராமணனாக வில்லை. உலகம் போற்றும் உத்தமர் காந்தியே வைசியனாகப் பிறந்து வைசியனாகவேதான் கோட்சேயின் கைவெடிக் குண்டுக் கிரையானார். உயர்ந்த வருணத்திற் பிறந்தா ராயினும் ஒழுக்கந் தவறின் தாழ்ந்த வருணத்தாராவர் என்ற படி. குருவின் மனைவியைப் புணர்ந்தவனும், தாயின் இரண்டாவது கணவனுக்குப் பிறந்த தம்பிமார்களின் மனைவியரான கைம்மைகளைக் கலந்து பிள்ளை பெற்றவனும் தாழ்ந்த வருணமாக வில்லை. இன்றும் ஒழுக்கமென்பதே சிறிதும் இல்லாத பார்ப்பனருங்கூடப் பார்ப்பனராகவே தான் இருந்து வருகின்றனர். பிராமணன் ஒழுக்கந் தவறிச் சூத்திர னானதாகப் புராணங்கூட இல்லை. அரச

ஒழுக்கத்திற் குறைவின்றி யிருந்த சூத்திரச் சிவாஜி அரச னாக அன்னார் அருளையல்லவோ வேண்டி நின்றான்!

8. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். (134)

பார்ப்பான் மறப்பினும் ஓத்துக் கொளலாகும்-நூல் களை ஆராய்ந்து பார்ப்பவன் அவற்றை மறப்பினும் மறுபடி யும் கற்றுத் தெரிந்து கொள்ளலாம், 'பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்-மக்கட் பிறப்புக்குரிய உயரிய ஒழுக்கம் குறையுமானால் அவன் கெடுவான்.

கற்றதை மறந்தாலும் பின் கற்றுக் கொள்ளலாம். ஆனால், ஒழுக்கம் குன்றினால் மறுபடியும் தேடிக்கொள்ள முடியாது. கற்றலினும் ஒழுக்கம் சிறந்ததென்பது.

பரி: ஒத்து மறப்பினும் கொளலாகும்-கற்ற வேதத்தினை மறந்தானாயினும் அவ் வருணங் கெடாமையின் பின் னும் அஃதோதிக் கொள்ளலாம், பார்ப்பான் பிறப்பு ஒழுக்கங் குன்றக் கெடும்-அந்தணரது உயர்ந்த வரு ணம் தன்னொழுக்கங் குன்றக் கெடும்.'

இது தமிழர் ஒழுக்கங் கூறு நூல் என்பதை மறந்து கூறியது. ஒழுக்கத்தின் சிறப்பை விளக்கக் கற்ற கல்வியை மறத்தலை எடுத்துக் கூறினாரே யன்றிப் பார்ப்பானையும் வேதத்தையும் கூறவில்லை. மேலும், 'அந்தணரது உயர்ந்த வருணம். சிறப்புடை வருணத்திற்கு மொழிந்தமையின் இஃது ஏனைய வருணங்கட்கும் கொள்ளப்படும்' என்பதும், பார்ப்பனர் உயர்ந்தவர், சிறந்தவர் என்னும் மனு முறையேயாகும். மறந்த வழி இழிகுலத்தானா மாகலின்' என்பதும் பொருந்தாக் கூற்றேயாகும். இன்று வேதம் என்பதே இன்னதென்று தெரியாத பார்ப்பானும் பார்ப் பானாகவேதான் இருந்து வருகிறான். இது வலிந்து குல

வேற்றுமையைப் புகுத்தியது. ஓத்து என்பது பொதுவாக ஓதுதலைக் குறிக்குமே யல்லாது வேதத்தினைக் குறியாது. ஓத்து இங்கே வினையெச்சப் பொருள்படும்.

## 2. சாதி வேற்றுமை

பிறப்பிலேயே உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் சாதி வேற்றுமை தமிழர்க்குள் இல்லை. 'ஒன்றே குலம்' என்பது ஆன்றோர் மொழி. பிராமணன் பிரமாவின் முகத்திலும், சத்திரியன் மார்பிலும், வைசியன் தொடையிலும், சூத்திரன் காலிலும் பிறந்தனர் என்பதும், அவ்வவ் விடத்திற் கேற்ற வாறு ஏற்றத் தாழ்வுடையர் என்பதும், பிரமாவின் உயர்ந்த இடமான முகத்தில் பிறந்ததால் பிராமணன் உயர்ந்த பிறப் பினன், பிரமாவின் தாழ்ந்த இடமான காலில் பிறந்ததால் சூத்திரன் தாழ்ந்த பிறப்பினன் என்பதும் ஆரியக் கொள் கை. அவ்வுயர்வு தாழ்வுக் கேற்றவாறே அன்னார் ஒழுகியும் வந்தனர். இச்சாதி வேற்றுமைக் கொள்கைக்குச் சான்றாக எழுதப்பட்டதே மனு நூல். 'பிறப்பொக்கும் எல்லா வுயிர்க் கும்' (972) என்ற கொள்கையுடைய திருக்குறளில், பரிமே லழகர் வேண்டுமென்றே ஆரியச் சாதி வேற்றுமையை வலிந்து புகுத்தியுள்ளார்.

1. **மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்**
   **கற்றா ரனைத்திலர் பாடு.** (409)

கல்லாதார் மேற்பிறந்தா ராயினும்-கல்லாதவர் உயர் குடியில் பிறந்தாராயினும், கீழ்ப்பிறந்தும் கற்றார் அனைத் துப் பாடு இலர்- தாழ்குடியில் பிறந்தும் கற்றாரைப் போலப் பெருமை யில்லாதவராவர்.

உயர்குடி - வழிவழியாக நல்லொழுக்க முள்ளகுடி. தாழ்குடி-வழிவழியாக நல்லொழுக்க மில்லாதகுடி. ஒரு வன் உயர்குடியில் பிறந்தும் கல்லாவிட்டால் அக்குடிப்

பெருமையை அவன் இழந்து விடுவான். தாழ்குடிப் பிறந்த ஒருவன் கற்கின் உயர்குடிக்குரிய பெருமையை அடைவான். இன்று கல்லூரிப்பட்டம் பெற்ற எத்தனையோ தாழ்குடியினர் உயர்குடியில் மணஞ் செய்துள்ளனர். கல்வியே பெருமைக்குக் காரணம்.

பரி : 'கல்லாதார் உயர்ந்த சாதிக்கட் பிறந்தாராயினும் தாழ்ந்த சாதிக்கட் பிறந்து கற்ருரது பெருமை இலராவர்.'

'பிறப்பொக்கும்'(972) என்ற வள்ளுவர் கொள்கைக்கு முரணுக 'உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி' என்பது பொருந்தாது. மேலும், இவர், 'உடலோ டொழியும் சாதியுயர்ச்சி' என்பதால், ஆரியப் பிறிவி வேற்றுமையையே குறிப்பிடுகிருர். நந்தனுரின் உடலைத் தீயில் எரித்துவிட்டுப் பிராமண வடிவங்கொண்டனர் என்பதும், சிவன் முதலிய தேவர்கள், அடியாரைச் சோதிக்கப் பிராமண வடிவுகொண்டே வந்தனர் என்பதும், பிறப்பினுல் ஏற்பட்ட சாதியுயர்வைக் குறிப்பதே யாகும்.

2. பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (972)

எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும்-எல்லா மக்களுக்கும் பிறப்பு ஒக்கும், செய்தொழில் வேற்றுமையான் சிறப்பு ஒவ்வா-அவரவர்கள் செய்யும் தொழில் வேற்றுமையால் பெருமை சிறுமை என்னும் சிறப்பு ஒவ்வா.

உயிர் என்றது மக்களை. எல்லா மக்களும் பிறப்பினுல் ஒரு தன்மையினரே-ஒத்த பிறப்பினரே. செய்யுந் தொழிலுக்குத் தக்கவாறு மதிக்கப்படுகின்றனர்.

பரி : 'எல்லா மக்களுயிர்க்கும் பொதுவகையாகப் பிறப்பு ஒக்குமே யெனினும், பெருமை சிறுமை என்னும்

சிறப்பியல்புகள் ஒவ்வா, அவை செய்யுந் தொழில்கள
ளது வேறுபாட்டான்.'

உயிர் என்றது ஆகுபெயரால் மக்களை யுணர்த்த, இவர் உயிரெனவே கொண்டு, அவ்வுயிர் செய்யும் தொழில்களது வேறுபாடென்றும். 'வினை வயத்தால் பஞ்சபூத பரிணாமமாகிய யாக்கையைப் பொருந்தி நின்று, அதன் பயன் ஆநுபவித்தல் எல்லா வருணத்தார்க்கும் ஒத்தலின் பிறப்பொக்கும் என்றும், பெருமை சிறுமைகட்குக் கட்டளைக் கல்லாகிய தொழிற் பாகுபாடுகள் வருணந்தோறும், யாக்கைதோறும் வேறுபடுதலின் சிறப்பு ஒவ்வா என்றுங் கூறினர்' என்கிறார்.

பஞ்சபூதம்—நிலம் நீர் தீ காற்று வெளி. பரிணாமம்-வேறுபடுதல். கட்டளைக்கல்-உரைகல். 'உயிரானது முன் வினையினால், பஞ்சபூத வேறுபாட்டால் உண்டாகிய உடல் எடுக்கிறது. எல்லா வருணத்தாரும் இவ்வாறே பிறக்கின்றனர். யாக்கை யெடுத்து வினைப்பயனை அநுபவித்தலில் எல்லா வருணத்தாரும் ஒரே தன்மையுடையரே. ஒவ்வொரு சாதிக்கும், மரம் விலங்கு முதலிய யாக்கைதோறும் தொழில் வேறுபடுகிறது' என்பன வெல்லாம் சாதி வேற்றுமையை நிலைநாட்ட வலிந்து கொண்ட பொருளேயாகும்.

பார்ப்பனர் முதலிய எல்லாச் சாதியினர் உடலும் பஞ்சபூத பரிணாமத்தால் ஆனது என்பது 'பிறப்பொக்கும்' என்பதற்கு நேர்பொருளன்று. மேலும், சாதித் தொழிலும், மரங்கள், ஊர்வன, நீர்வாழ்வன, பறப்பன, நடப்பன, மக்கள், தேவர் என்னும் எழுவகைப் பிறப்பு எடுக்கிறது ஓர் உயிர் என்னும் ஆரியச் சமயக் கொள்கைப்படி உயிர் அந்தந்த யாக்கைதோறும் செய்யுந் தொழிலுமன்று இங்கு வள்ளுவர் கூறுந்தொழில். வள்ளுவர் கூறுவது 'நல்லது கெட்டது' என்னும் தொழிலேயாகும். இது 'பெருமை'

என்னும் அதிகாரம். நற்செயலால் பெருமையும், தீச் செயலால் சிறுமையும் உண்டாவதால், செய்யுந் தொழிலுக்குத் தக்கபடி உயர்வு தாழ்வு உண்டாகும் என்பதே இக்குறளின் கருத்தாகும். 'செயற்கரிய செய்வார் பெரியர்' (26) என்பதை நோக்குக.

வள்ளுவர் மக்களது பெருமை கூறுகின்றாரே யன்றி, உயிர் வினைவயத்தால் பஞ்சபூத வேறுபாட்டால் ஆகிய உடலை யெடுத்து, அவ்வினைப் பயனை அநுபவிக்கிறது என்னும் உயிரைப் பற்றிய ஆராய்ச்சிக்கு இங்கு இடமில்லை. வருணந்தோறும் யாக்கை தோறும் தொழில் வேறுபடும் என்பது சாதி வேற்றுமையும் பிறவி வேற்றுமையும் ஆகும்.

3 அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள. (241)

செல்வங்களுள் சிறந்த செல்வமாவது அருளாகிய செல்வம்; பொருட் செல்வம் கீழோரிடத்தும் உள்ளது. கீழோர்- நற்குணமும் நல்லொழுக்கமும் இல்லாதவர்.

பரிமேலழகர், 'பூரியர்-நீசர்' என்கிறார். நீசராவார்- 'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என நன்னூலார் கூறும் நரகரேயாவர். நரகர்-தாழ்த்தப்பட்டோர். இது தற்காலத்தே ஆரிய நாகரிக ஆதிக்கத்தால் உண்டானதே. இங்கு நீசர் என்னும் சாதிக்கும் அருளுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. துறவற ஒழுக்கங்களுள் அருள் முதன்மையான தொன்றாகையால், பொருட்செல்வம் ஒழுக்க மில்லாத கீழ் மக்களிடத்தும் உண்டெனை அருளின் சிறப்பை எடுத்துக் காட்டினார். 'உயர்ந்தோர் கண்ணே யல்ல தில்லாத அருட் செல்வம்' என உயர்சாதியைக் குறிப்பிடுகிறார். உயர்ந்த சாதியார்க்கே அருளுண்டென்பது இவ்விடத்திற்குச் சிறிதும் பொருந்தாது. துறவிகட்குச் சாதியேது? வேகாத கடு

வெயிலில் விறகுடைத்து வேர்த்துக் களைத்து விடாய்த்துக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கேட்டால், ஏதோ ஒரு மாதத்தையும் நாளையுங் கூறி 'இல்லை' என்னும் இரக்க மென்பதையே இன்னதென்றறியாத உயர் சாதியினரா அருளுடையர் ?

## 3. வேள்வி

வேள்வி என்பது தேவர்களுக்கு விருப்ப முண்டாகச் செய்யப்படும் தீத்தொழில். இது பாக வேள்வி, அவி வேள்வி, சோம வேள்வி என முப்பகுதியாய், ஒவ்வொரு பகுதியும் எவ்வேழாய் இருபத்தொரு வகைப்படும். இவையே யன்றி, நாடோறும் செய்யப்படும் பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம் என ஐம்பெரு வேள்விகளு முண்டு. வேள்வி, யாகம், யக்யம், ஓமம் என்பன ஒருபொருட் கிளவி. வேள்வி செய்தல் ஆரியர்க்குரிய தொழில்களில் தலையாய தொன்று. ஆரிய வேதங்களிற் பெரும்பகுதியும் இவ் வேள்வி பற்றிய செய்திகளே யாகும். தேவர்களின் பொருட்டுச் செய்யப்படும் இவ் வேள்விகளில் ஆடுமாடு முதலிய உயிர்களைக் கொல்வது கொலையாகாது என்று அவ்வேதமே கூறுகிறது. (மனு, அ-5.சு-39) வேள்விசெய்வதால் எல்லா வகையான நன்மைகளும் உண்டாகு மென்றும், வேள்வி செய்தற் குரியர் பிராமணரே யாவர் என்றும் வேதம், மனு முதலிய ஆரிய நூல்கள் கூறுகின்றன. தமிழர்க்கு இவ் வேள்வி உரியது மன்று, உடன்பாடு மன்று. 259, 328ஆம் குறள் களில் வள்ளுவர் வேள்வியை மறுத்துக் கூறியுள்ளார். சமண பௌத்தர்களும் அவ் வேத வேள்வியை மறுத்து வந்தனர்.

"வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை

**வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே**
**பாதி மாதுட னாய பரமனே**
**ஞால நின்புக ழேமிக வேண்டுந்தென்**
**ஆல வாயி லுறையுமெம் மாதியே.''**

எனச் சம்பந்தர், வேள்வியை மறுத்த சமண பௌத்தரை அழித்துச் சைவத்தை வளர்க்கும்படி ஆலவாய்ச் சிவனை வேண்டுவதால், தேவார காலச் சைவர்கள் வேள்வியை உடன்பட்டு வந்துள்ளனர் எனத் தெரிகிறது. ஆதம்-அன்பு. ஆதம் இல்லி- அன்பில்லாத. தேரர் - பௌத்தர். இவ் வாரிய வேத வேள்வியைப் பரிமேலழகர் வலிந்து புகுத்துகின்றனர்.

**1. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்**
**துணைத்துணை வேள்விப் பயன். (87)**

வேள்விப் பயன் இனைத்துணைத்து என்பதொன்று இல்லை - விருந்தோம்பலின் பயன் இன்ன அளவினது என்று கூறும் ஓர் அளவினை யுடையதன்று, விருந்தின் துணைத்துணை-அவ்விருந்தினரது தகுதியின் அளவேஅதற்கு அளவாகும். வேள்வி - உதவி.

**பரி :** 'வேள்விப் பயன்-விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன். ஐம்பெரு வேள்வியின் ஒன்றாகலின் வேள்வி என்றும்'

ஐம்பெரு வேள்வியாவன-பிரமயாக முதலியன. பிரம யாகம்-வேதமோதல். தேவயாகம்-ஓமம்வளர்த்தல். மானுட யாகம்-விருந்தோம்பல். பிதிர்யாகம்-சிரார்த்தம் செய்தல். பூதயாகம்-பலியீதல். யாகம்-வேள்வி.

வேள்வி என்னும் சொல்லுக்கு இவர் கொண்ட பொருளே தப்பு. மற்ற வேள்விகளையும் தமிழரை நம்பும் படி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டதே

யாகும் இப்பொருள். வேள்வி - விருந்தோம்பல் என்பதே நேர் பொருள். பிரமயாகம் முதலிய மற்ற வேள்விகள் தமிழர்க்கு ஏலாமையால், அதிலும், மனுமுறைப்படி தமிழ் வேளாளர்க்கு ஒரு சிறிதும் ஏலாமையால் இது போலியுரையே யாகும். மேலும், விருந்தோம்பல் என்பது தமிழ் வேளாளர்க்குச் சிறப்புப் பண்பாக இருக்க, அவர்க்கேலாத மற்றவற்றுடன் சேர்த்துப் பரிமேலழகர் கொண்ட பொருளில், வேள்வியை மறுத்துக் கூறும் (259, 328) வள்ளுவர் ஒருபோதும் கூறியிருக்கமாட்டார்.

2 அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு. (384)

அறன் இழுக்காது - அறனெறி தவறாது, அல்லவை நீக்கி-அறமல்லாத குற்றங்களை நீக்கி, மறம் இழுக்கா மானம் உடையது அரசு-வீரத்தினின்று தவறாத மானத்தை யுடையவனே அரசனாவான்.

பரி : 'அறமாவது-ஓதல், வேட்டல், ஈதல், என்னும் பொதுத் தொழிலினும், படைக்கலம் பயிறல், பல்லுயி ரோம்பல், பகைத்திறந் தெறுதல் என்னும் சிறப்புத் தொழிலினும் வழுவாது நிற்றல்'

இத்தொழில்கள் கூறவேண்டிய இடமே இங்கில்லை. அறம் என்பதற்கு அரசன் செய்யும் தொழில்களைக் கூறுதல் பொருந்தா உரையே யாகும். வேட்டல்-வேள்வி செய்தல். இது ஆரிய அரசர் தொழிலேயன்றித் தமிழரசர் தொழிலன்று. தமிழ் நாட்டில் வாழ்ந்த, தமிழரல்லாத கொடுங் குணங்களையுடைய கொடியரெனத் திரித்துக் கூறப்படும் அரக்கர் தலைவராகிய **இராவணன், இரணியன்** முதலியோர் கூடக் கொலை வேள்வியை மறுத்திருக்கும்போது, தமிழரசர்களுக்கு வேட்டல் எங்ஙனம் தொழிலாகும்? ஆரியர்

புகழுரையில் மயங்கி, ஆரியக் கொள்கை மோகத்தால் 'பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி' போன்ற ஒரு சிலர் வேள்வி செய்துள்ளதாகத் தெரிகின்றதேனும், தமிழரசர்க ளெல்லாம் வேள்வியை ஒரு தொழிலாகக் கொண்டு செய்து வந்ததாக வரலாறில்லை.

**3 இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த**
**வகுத்தலும் வல்ல தரசு.** (385)

இயற்றலும் - பொருள் வரும் வழிகளை மேன்மேல் உண்டாக்கலும், ஈட்டலும்-வந்த பொருளைச் சேர்த்து வைத்தலும், காத்தலும்-அவற்றைக் காப்பற்றுதலும், காத்த வகுத்தலும்-அப்படிக் காப்பாற்றியவற்றை நாட்டு நலத்தில் செலவிடுதலும், வல்லது அரசு-வல்லவனே அரசனாவான்.

பரி : 'காத்த வகுத்தலும்-காத்தவற்றை அறம்பொருளின்பங்களின் பொருட்டு விடுத்தலும். கடவுளர், அந்தணர், வறியோர் என்றிவர்க்கும், புகழுக்கும் கொடுத்தலை அறப்பொருட்டாகவும்.'

கடவுளர்க்கு என்றது வேள்விக்கும், அந்தணர்க்கு என்றது பிராமணர்க்குங் கொடுத்தலை. இது ஒருசார் மனுமுறையையே யாகும். வேள்விக்குக் கொடுத்தல் தமிழரசர் அறமன்று.

**4 தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**
**தந்தம் வினையான் வரும்.** (63)

அவர் பொருள்-மக்கள் தேடும் பொருள், தம்தம் வினையான் வரும்-அவரவர் தொழிலுடனே பெற்றோர்பால் வரும் ஆதலால், தம் மக்கள் தம்பொருள் என்ப—தம் மக்களைத் தம்பொருள் என்பர் அறிவுடையோர்.

மக்கள் பெற்ருேரின் கீழ் வாழ்வதால், அம்மக்கள் செய்யும் தொழிலும், அத்தொழிலால் அவர் தேடும் பொருளும் பெற்ருேரையே சேரும் என்பதாம். பெற்ருேர்க்கு மக்களே பெருஞ் செல்வம்.

பரி: 'தம் புதல்வரைத் தம் பொருளென்று சொல்லுவர் அறிந்தோர். அப்புதல்வர் செய்த பொருள் தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினையானே தம்பால் வரும் ஆதலான், நன்மக்கட் பெற்ருேர் பெறும் மறுமைப் பயன் கூறப்பட்டது.'

'தம்மை நோக்கி அவர் செய்யும் நல்வினை'—இறந்து போன பெற்ருேரை நோக்கி மக்கள் செய்யும் திதி. நல்வினை-திதி. தம்பால்-அப்பெற்ருேர்பால். சிரார்த்தத்தில் புரோகிதருக்குக் கொடுக்கும் பொருள் பெற்ருேரைச் சேருமென்பது கருத்து. பெற்ருேர்க்கு மறுமைப் பயன்-அவர் மக்கள் செய்யும் சிரார்த்தமே யாகும்.

•

ஆலமரத்திற்கு விழுதைப்போல முதுமைப் பருவத்தில் பெற்ருேர்க்குதவும் மக்களின் இன்றியமையாமையை விளக்கிஞரே யன்றி மறுமைப்பயன் கூறவில்லை. பெற்ருேரின் முதுமைப் பருவத்தில் அவர் மக்கள் தொழில் செய்து பொருளீட்டிப் பொற்ருேருக்கு உதவுதலான், மக்களைத் தம்பொருள் என்பர் பெற்ருேர் என மக்கட் பேற்றின் சிறப்புக் கூறியதேயாகும். மக்கள் தேடும் பொருள் சிரார்த்தங் கொடுப்பதன் மூலம் இறந்துபோன பெற்ருேரிடம் வரும் என்பது ஆரியக் கொள்கையை வலித்து புகுத்துதலேயாகும். மக்கள் என்பதற்குப் 'புதல்வர்' என ஆண்பாலாகக் கொண்டதும், பெண்பாலை யொழித்துச் சிரார்த்தம் செய்வதற்குரிய ஆண்பாலாகக் கொண்ட மனுமுறையே யாகும்.

சிரார்த்தம் என்பது—இறந்துபோன பெற்ருேர்களின் உயிர் நற்கதியடையும் பொருட்டு (குறள் 42. பரி) ஆண்டு தோறும் அவர் இறந்த நாளில் அவர் மக்களால் செய்யப் படும் சடங்கு. உவாத்தோறும் திதி செய்வதும் உண்டு. உவா—அமாவாசை. சிரார்த்தம், திதி, திவசம் என்பன ஒரு பொருட் கிளவி. இறந்தவர்—பிதிர்க்கள் எனப்படு வர். பிராமணரைப் பிதிர்க்களாகப் பாவனை செய்து, இப் பிராமணர் உண்பது அப்பிதிர்க்கள் உண்பதாகப் பாவித் துச் செய்வதே திதியாகும். மனுநூல் மூன்ருவது அத்தியாயம் முழுவதும் இச்சிரார்த்தத்தைப் பற்றியதே யாகும்.

''பார்ப்பன மாந்தர்காள் பகர்வது கேண்மின்!
இறந்தவ ராயுமை யிவ்விடை யிருத்திப்
பாவனை மந்திரம் பலபட வுரைத்தே
உமக்கவர் புத்திரர் ஊட்டின போது
அடுபசி யாற்குலைந் தாங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது கண்டதார் புகலீர்!
அருந்திய வுண்டியால் யார்பசி கழிந்தது?''
(கபிலரகவல்)

உமை-பிராமணரை. அவர் புத்திரர்-இறந்தவர் மக் கள். அடுபசியால் குலைந்து-மிக்க பசியால் வருந்தி. ஆங் கவர்-பிதிருலகில் உள்ள பிதிர்க்கள். அருந்திய உண்டி யால் யார் பசி கழிந்தது-பிராமணர் உண்ட உணவால் பிராமணர் பசி தீர்ந்ததா? அல்லது பிதிர்க்கள் பசி தீர்ந்ததா? பிராமணர் பசிதான் தீர்ந்தது. இதனுல், தமிழர்க்குத் திதி கொடுத்தல் உடன்பாடன் றென்பது தெரிகிறதல்லவா?

## 4. துறக்கம், நரகம்

துறக்கம்-சுவர்க்கம், துறக்கவுலகம், தேவருலகம், புத்தேளுலகம், வானுலகம், மேலுலகம், விண்ணுலகம்

என்பன வெல்லாம் ஒரு பொருட் சொற்கள், இவை யெல்லாம் மண்ணுலகத்தில் உள்ள இடங்களே யன்றி, திங்கள், விண்மீன் முதலியனபோல வானவெளியில் உள்ளனவல்ல, தேவர் என்பாரும் மக்களேயாவர். நரகம் என்பது பெருந்துன்பம். அது ஓரிடம் என்பதும், அது தெற்கே யுள்ளதென்பதும் கற்பனைப் படைப்பு. இறந்த உயிர்கள் புண்ணிய பாவத்திற்குத் தக்கபடி தேவருலகத்தையும் நரகவுலகத்தையும் அடைந்து இன்பதுன்ப மநுபவிக்கும் என்பதும் ஆரியச் சமயச்சார்பான புராணக் கருத்துக்களாகும். ஐயமகற்றல் என்னும் தலைப்பைப் பார்க்க.

பிராமணர்களுக்கு வேண்டியதைக் கொடுப்பதும் அவர்களுக்குத் தொண்டு செய்வதுமே புண்ணியம். அவர்களுக்குக் கொடாமையும் தொண்டு செய்யாமையும் பாவம். (மனு, அ-10. சு-122,3) என்பது பிராமணர் தமிழரை ஏமாற்றிப் பிழைக்க எழுதிவைத்த ஏட்டுக் கற்பனையேயாகும்.

'இறந்து போகிறவர்', உயிருடனிருக்கும்போது இங்கு தேவர்களுக்குக் கொடுத்த சோமம், இறைச்சி இவற்றின் உயர்வு தாழ்வுக் கேற்றவாறு துறக்கத்திலும் சோமம், அமுதம், அழகிய பெண்கள் இவற்றை அனுபவிப்பார்கள். புண்ணியம் முடிந்தவுடன் பழையபடியே மண்ணுலகத்தில் பிறக்கிறார்கள்" (இருக்குவேதம்)

**1 அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்.** (121)

அடக்கம் அமர் அருள் உய்க்கும்-அடக்கம் மிக்க மேன்மையைக் கொடுக்கும், அடங்காமை ஆர் இருள் உய்த்து விடும்-அடக்கமின்மை மிக்க துன்பத்தைக் கொடுத்து விடும்.

அடக்கம்-மனமொழி மெய் அடங்குதல். அருள்-மேன்மை. அமர்தல்-பொருந்துதல். அமர் அருள்-அமர்ந்தஅருள்-மிக்க அருள். இருள்-துன்பம். ஆர் இருள்-மிக்க துன்பதும்-பெருந்துன்பம். அடக்கம் இன்பத்தையும் அடங்காமை துன்பத்தையும் தரும்.

பரி : 'அடக்கம் அமரருள் உய்க்கும்-ஒருவனை அடக்கமாகிய அறம் பின்தேவருலகத் துய்க்கும், அடங்காமை ஆர் இருள் உய்த்துவிடும் - அடங்காமையாகிய பாவம் தங்குதற்கரிய இருளின்கட் செலுத்தும். இருள் என்பது ஓர் நரக விசேடம்.'

அடக்கமுள்ளவன் இறந்தபின் தேவருலகத்தை யடைவான், அடங்காதவன் இறந்தபின் நரகத்தை அடைவான் என்பதாம்.

நரகம் இருபத்தெட்டுக் கோடி உண்டு என்னும் புராணப்படி, 'இருள் ஓர் நரகவிசேடம்' என்றார். ஒருவன் உயிரோடுள்ளபோது எய்தும் இன்ப துன்பப் பயன் கூறப் பட்டதே யன்றி, இறந்தபின் உயிரடையும் இன்ப துன்பங்களல்ல. இறந்தபின் அடையும் இன்ப துன்பத்தைக் கூறி அச்சுறுத்தி ஏமாற்றுவது ஆரியக் கொள்கையே யன்றித் தமிழர் கொள்கையன்று. பருவத்தில் அடக்கமுடையவன் இன்புறுவதும், அடக்கமில்லாதவன் துன்புறுவதும் கண்கூடு.

2 புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவி னல்ல பிற. (213)

ஒப்புரவின் நல்ல பிற-ஒப்புரவைக் காட்டிலும் நல்ல வேறு செயல்களை, புத்தேளுலகத்தும் ஈண்டும் பெறல் அரிது-வானுலகத்தும் தமிழ்நாட்டினும் பெறமுடியாது.

ஒப்புரவு-இல்லார்க்குக் கொடுத்தல் உள்ளவர் கடமை என்பதை உணர்ந்து கொடுத்தல். எதிர்நாடா உதவியை விட நல்லதொன்று எங்கும் இல்லை என்பதாம். இன்றும் ஏதாவதொன்றை மேனாட்டிலும் இல்லை இங்குமில்லை என்று சொல்வதுண்டல்லவா? புத்தேளுலகம் இன்ன தென்பதை வடபுலத்தார் என்னும் தலைப்பில் காண்க.

பரி: 'ஈவாரும் ஏற்பாரும் இன்றி எல்லோரும் ஒரு தன்மையராதலின் புத்தேளுலகத் தரிதாயிற்று'

இத்தகைய உலகம் ஒன்று உண்டு என்பது வியப்பினும் வியப்பே. சமய உலகில்கூட ஏற்றத் தாழ்வான தகுதியும், செல்வாக்கும் செல்வாக்கின்மையும் உள்ள கடவுளர் உண்டு. மண்ணுலகில்கூடத் திருப்பதியானுக்குள்ள செல்வாக்கு வெண்ணெய்மலையானுக்கில்லை, பழனியாண்டவனுக்குள்ள பெருமை மேட்டுப் பழனிக்கில்லை. புத்தேளுலக மன்னனாகிய இந்திரன், தனது பூந்தோட்டத்துக்குத் தண்ணீரில்லாமல்யானைமுகனைக் குறையிரந்ததாகப் புராணங் கூறுகிறது. புராணக் கற்பனைகளையும் சமயக் கருத்துக்களையும் புகுத்தும் இவர் இவ்வாறு கூறுவதுதான் நமக்கு விளங்க வில்லை. தமிழர்களை நம்பும்படி செய்வதற்குச் செய்யும் சூழ்ச்சியே யாகும்.

## 5. புராணக்கதை

புராணம் என்பது சிறுவர்களுக்குச் சொல்லிய பஞ்ச தந்திரக் கதைகளைப்போலப் பெரியவர்களுக்குச் சொல்லிய கற்பனைக் கதைகளே யாகும். புராணம்-பழங்கதை. இது,

'இறைவன் வேதாகமங்களை ஓதியருளியதன்றி, அவற்றை ஓதவும் உணரவும் ஏலாத ஏனையோர் பொருட்டு அவ் வேதாகம சாரத்தை யுட்கொண்ட சரிதமாகிய

புராணங்களை அருளி, நந்திதேவர் மூலமாக அகத்திய ராதி முனிவர்களுக்கு உபதேசிப்பித்தார்.'

எனத் தெய்வத்தொடர்பாக்கப்பட்டுள்ளது. புராணக் கதைகள் பெரும்பாலன இயற்கைக்கு ஒவ்வாததும், மக்கட் டன்மைக்கு அப்பாற்பட்டதுமாகவே உள்ளன. அவற்றைக் கதைக்காகக் கொள்ளாமல் உண்மை நிகழ்ச்சியெனக் கொள்வதே தகாமையாகும்.

1. ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி. (25)

ஐந்து அவித்தான் ஆற்றல்-ஐம்பொறிகளையும் அடக் கினவனது வல்லமைக்கு, அகல் விசும்பு உளார் கோமான்- இந்திரனே - அகன்ற வானுலகத்தார்க்குத் தலைவனாகிய இந்திரனே, சாலும் கரி-தக்க சான்றுவான்.

வானுலகத்தை வடபுலத்தார் என்பதில் காண்க. இந் திரன் ஆரியர் தலைவன்; தமிழர் பகைவன்; தமிழர் பெருமை கண்டு பொருதவன்; வலிமையும் பெருமையும் தலைமையும் புகழுமுடைய தமிழ்ப் பெரியார்களை ஒழிப் பதையே தனது வாழ்க்கைப் பயனாகக் கொண்டவன்; வரையா ஈகையால் பெரும்புகழொடு வாழ்ந்த 'மாவலி' என்னும் தமிழரசனை வாமனன் என்பானைக் கொண்டு கொல்வித்தவன்; பாண்டியர் பெருமை கண்டு பொருது அவர்களை ஒழிக்கப் பல சூழ்ச்சிகள் செய்தவன் எனப் பல கதைகள் கூறப்படுகின்றன. இத்தகைய கதைகள் பல அன்றுங் கூறப்பட் டிருக்கலாம். அக்கதைகளைத் தெரிந் திருந்தனர் பழந்தமிழ் மக்கள். துறந்தார் பெருமையைப் பலரும் எளிதில் உணரும் பொருட்டு இந்திரன் கதையை எடுத்துக் காட்டாகக் காட்டினர் வள்ளுவர். தமிழ் மக்களின் கொடை, புகழ் போன்ற பெருமைக்கே பொரு

மைப்படுகிற இந்திரன், ஒழுக்கத்து நீத்து ஐந்தவித்தார் பெருமைக்கு என்படான்? என நீத்தார் பெருமையை விளக்கியவாறு. இன்றும், தமிழர் வாழ்வு கண்டு பொருது பல அடக்குமுறைச் சட்டங்களைச் செய்து தமிழரை வாட்டி வதைக்கும் தென்னுப்பிரிக்கா மலான் போன்ருர் கொடுஞ் செயல்களை எடுத்துக்காட்டுவ துண்டல்லவா? தமிழ்த் துறவிகள், அயல்நாடர் பொருமை கொள்ளக்கூடிய அவ் வளவு பெருமை யுடையவர் என்பதாம்.

பரி : 'தான் ஐந்தவியாது சாபம் எய்தி நின்று அவித்தவன தாற்றல் உணர்த்தினுகைலின், இந்திரனே சாலுங்கரி என்ருர்.'

அவித்தவன்-கௌதம முனிவர். கௌதமர் குளிக்கப் போனபோது அவர் மனைவி அகலிகையோடு இந்திரன் கூடியிருக்கக் கண்ட முனிவர் அவனைக் கல்லாகச் சபித்த தோடு, இந்திரனை உடம்பெல்லாம் பெண்குறி உண்டாகும் படி சபித்தனர் என்பது புராணம். இங்கே வள்ளுவர் தமிழ்த் துறவிகளின் பெருமை கூறுகிருரேயன்றி, ஆரிய முனிவர்களின் பெருமை கூறவில்லை. அவ்வாறு இரக்க மின்றிச் சபிக்கக்கூடியவர் என்பது அருளாளராகிய தமிழ்த் துறவிகளுக்கு இழுக்கேயாகும்; பெருமையாகாது. கல்லாகச் சபிப்பதும், நெடுங்காலத்திற்குப் பிறகு ஒருவன் கால்பட அக்கல் பெண்ணுன தென்பதும் நடக்கா நடப் பாகும்.

2. மடியிலா மன்னவன் எய்து மடியளந்தான்
தாஅய தெல்லா மொருங்கு. (610)

மடியில்லா மன்னவன்—சோம்பலில்லாத அரசன், மடி அளந்து ஆன்ருயது எல்லாம்-சோம்பலடைந்ததால் முன்பு தன்னை விட்டு நீங்கிய செல்வத்தை யெல்லாம், ஒருங்கு எய்தும்-ஒருங்கே அடைவான்.

அளத்தல்-கலத்தல். அளவளாவி என அறிக. மடி-சோம்பல். மடி அளந்து-சோம்பலைக் கலந்து - சோம்பலடைந்து. ஆன்று-நீங்கி. முடிந்தது-முடிந்தாயது என நிற்பதுபோல, ஆன்றது-ஆன்ருயது என நின்றது. ஆன்றது-வினையாலணையும் பெயர். நீங்கிய செல்வத்தைக் குறித்தது. சோம்பலில்லாத அரசன், முன்பு சோம்பலடைந்ததால் இழந்த செல்வத்தை யெல்லாம் ஒருங்கடைவான். அடியளந்தான் – வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனவும், தாயது-அவன் கொண்ட நிலம் எனவும் கொள்ளலாம்.

பரி : 'மடியிலா மன்னவன், அடியளந்தான் தாயது எல்லாம்-தன் அடியளவானே எல்லா வுலகையும் அளந்த இறைவன் கடந்த பரப்பு முழுவதையும், ஒருங்கே எய்தும்.'

இது, திருமால் இந்திரன் வேண்டுகோளால் வாமனனுகப் பிறந்து, மாவலியிடம் மூன்றடி மண்ணிரந்து பெற்று, பின் முப்பேருருவனுகி, (திரிவிக்கிரமன்), அதாவது ஒருகால் பாதாளத்தையும், மற்ருெருகால் மேலுலகத்தையும் பொருந்த உலகமுழுவதும் தானேயாகி, மாவலி தலையில் மேலே தூக்கிய காலைவைத் தழுத்திக் கொன்றனன் என்னும் புராணக்கதையாகும். மேலே தூக்கிய கால் பிரமவுலகம் செல்லப் பிரமன் அக்காலுக்குப் பூசை செய்த (கழுவிய) நீரே கங்கை என்பதும் புராணக் கதை. திரிவிக்கிரமன் தாவிய வானுலகத்தையும், பாதாளத்தையும் அடைவான் என்பது வள்ளுவர் கருத்தன்று. உயிரோடு தான் வானுலகை யடைய முடியாதே. இறந்தபின் அடையும் வானுலகை எத்தகைய முயற்சியுடையவன்தான் எப்படி யடைய முடியும்? முயன்ருல் முன்னிழந்ததை முற்றும் அடைவான் என்பதே குறட் கருத்தாகும்.

3\. ஊறொரால் உற்றபின் ஒல்காமை யிவ்விரண்டின்
ஆறென்ப ராய்ந்தவர் கோள். (662)

ஆய்ந்தவர் கோள் - நூல்களை ஆராய்ந்தறிந்த அறிவுடையோர் கொள்கையாவது, ஊறு ஓரால்-தீய காரியங்களைச் செய்யாமையும், உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறென்பர்-மேற்கொண்ட செயல் பழுதுபட்டால் மனந் தளராமையும் ஆகிய இவ்விரண்டன் வழியாகுமென்பர்.

தீய செயல்களைச் செய்யாமல் நீக்குதலும், மேற்கொண்ட செயல் முடியாவிட்டால் மனந்தளராமையும் அறிவுடையோர் கொள்கையாகும்.

பரி : 'உற்றபின் ஒல்காமை-தெய்வத்தால் பழுதுபட்ட வழி அதற்குத் தளராமை. தேவர்க்கும் அசுரர்க்கும் அமைச்சுப் பூண்ட வியாழ வெள்ளிகளது துணிவு தொகுத்துப் பின் நீதிநூலுடையார் கூறியவாறு கூறுகின்றமையின்.'

வியாழனும் வெள்ளியும் நெடுங்காலம் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் குருவாக இருந்துவந்தனர் என்பது புராணக்கதை. தமிழ்நூலை ஆய்ந்த தமிழறிஞர்கள் கொள்கையை வள்ளுவர் கூறினரேயன்றி, வடமொழியாளர் கொள்கையை வள்ளுவர் கூறவில்லை. நீதிநூலுடையார்-சாணக்கியரும், காமந்தகரும். இவ்விருவர் நூலின் கருத்துக்களையே வள்ளுவர் மொழிபெயர்த்துள்ளார் எனத் திருக்குறள் ஆரியக் கொள்கை கூறும் நூலென்பதை வலியுறுத்துகிருர். வள்ளுவர் கள்ளுண்பதை மறுக்க, சாணக்கியர் அரசனது வருவாய்க்குக் கள்ளுக்கடை வருவாயும் ஒன்றெனக் கூறுவதால், சாணக்கியர் கூறியவாறு வள்ளுவர் கூறுகிருர் என்பது எவ்வாறு பொருந்தும்? ஏன் தமிழில் நீதி நூல்கள் இல்லையா என்ன? 'ஆய்ந்தவர் கோள்' என்பதால், வள்ளுவர் திருக்குறள் செய்யுமுன்னரே தமிழில் நீதிநூல்கள் பல இருந்தன என்பது விளங்குகிறதல்லவா? தமிழில் உள்ளன வெல்லாம் ஆரியர் சொத்து என்னும்

ஆரியக் கொள்கை புகுத்தலே யாகுமிது.

4. **ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து**
**வேந்தனும் வேந்து கெடும்.** (899)

ஏந்திய கொள்கையார் சீறின்-உயர்ந்த கொள்கையை யுடைய பெரியோர் வெகுளுவாராயின், வேந்தனும் இடை வேந்து முரிந்து கெடும்-அரசனும் இடையே தன்னிலை யிழந்து கெடுவான். அரசை யிழந்து தானும் கெடுவான் என்பதாம்.

பரி : 'ஏந்திய கொள்கையார் சீறின்-காத்தற் கருமையான் உயர்ந்த விரதங்களை யுடையார் வெகுள்வாராயின், வேந்தனும் இடை வேந்து முரிந்து கெடும்-அவராற்ற லான் இந்திரனும் இடையே தன்பதம் இழந்து கெடும். நகுடன் என்பான் இத்திரன்பதம் பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான் அகத்தியன் வெகுள்வதோர் பிழைசெய, அதனாற் சாபமெய்தி அப் பதம் இடையே இழந்தா னென்பதனை உட்கொண்டு இவ்வாறு கூறினார். இவை நான்கு பாட்டானும் முனிவரைப் பிழைத்தலின் குற்றங் கூறப்பட்டது.'

இதன் முன்னுள்ள மூன்று குறளிலும், பெரியார் - தவத்தாற் பெரியார். தகைமாண்ட தக்கார் - சாபவருள் கட் கேதுவாய பெருமை மாட்சிமைப்பட்ட அருந்தவர். குன்றன்னார் - குன்றையொக்கும் அருந்தவர் எனப் பெரி யார் என்பதை ஆரிய முனிவர் எனக்கொண்டு கூறு கிறார்.

வள்ளுவர் தமிழ்ப் பெரியாரைப் பிழையாமை கூற, இவர் ஆரிய முனிவர்களைக் கொண்டதோடு, வேந்தன்

என்பதற்குப் பொருத்தமில்லாமல் 'இந்திரன்' என்றும், நகுடன் சாபம் பெற்ற புராணக் கதையையுங் கூறுகிருர். பெரியார் வெகுளுமாறு நடந்துகொண்டால் நாட்டுமக்களும் அரசனை வெறுப்பார்களாதலால், அதனுல், அரசன் அரசையிழந்து கெடுவான் என்பது கருத்து.

நூறு குதிரை வேள்வி செய்தவன் இந்திரப் பதவி பெறுவானென்றும், அப்போது பழைய இந்திரன் விலகிக் கொள்வா னென்றும், ஆனுல், இந்திராணி அப்புதிய இந்திரனுக்கு ராணியாவாள் என்றும், இவ்வாறு நகுடன் என்னும் அரசன் நூறு குதிரை வேள்வி செய்து இந்திரப் பதவியேற்க மலரூர்தியில் சென்ருன். அவனை அகத்தியர் முதலிய எழு முனிவர்கள் தூக்கிச் சென்றனர். நகுடன் விரைவில் இந்திராணி முதலிய பேற்றையடைய விரும்பி, 'சர்ப்ப சர்ப்ப '(விரைக விரைக) என்ருன். அகத்தியர் வெகுண்டு 'நீ சர்ப்பமாகக் கடவாய்' என்று சபித்தார். அவன் பாம்பானுன் என்பது புராணம்.

குதிரை வேள்வி யென்பது படையோடு குதிரையை நாற்றிசையினும் விட்டுப் பிடிப்போரை வென்று அவர் கொடுக்கும் பொருள் கொண்டு செய்வது. இது ஒருவகை அரசத் தேர்தல் போலும்! இதிலிருந்தும் இந்திரன் என்பவன் இன்று மக்கள் எண்ணும் தேவனல்லன் ; மண்ணுலகத்தவனே என்பது தேற்றம். இது, ஆரியரிடம் தமிழர்க்கு அச்சம் உண்டாகுமாறு கூறியதாகும்.

5. தாமரைக் கண்ணுனுலகு (1103)—இந்திரவுலகு.

பரி : 'தவயோகிகள் எய்தும் செங்கண்மாலுலகம்' இது, இல்லற வாழ்வை விட்டாற்ருன் வைகுந்த முதலிய பதம் கிடைக்கும் என்னும் புராணக்கதை.

## 6. பெண்ணடிமை

பெண்களை உடைமைகளி லொன்ருகக் கொள்வது ஆரிய நாகரிகம். பெண்களை வாழ்க்கைத் துணையாகக் கொள்வது தமிழ் நாகரிகம். எனவே, பெண்ணடிமை என்பது தமிழர் பண்பாடன்று. ஆரியர் பெண்களை நடத்தும் வகையை மனு, அத்தியாயம் ஒன்பதில் காண்க.

1. **பெற்ருர்ப் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழு முலகு.** (58)

பெற்ருர்ப் பெறின்-கணவனை மனவுறுதியுடையராகப் பெற்ருல், புத்தேளிர் வாழுமுலகு-தேவருலகில், பெண்டிர் பெரும் சிறப்புப் பெறுவர் - பெண்கள் பெருஞ்சிறப்பை அடைவர்.

பெற்ருர்-பெண்களை மனைவியாகப் பெற்றவர் - கணவர். கணவரும் மனவுறுதி யுடையராகப் பெற்ருல், ஒரு மனப்பட்டு உயரிய வாழ்க்கை நடத்தி, அயல் நாடும் புகழும் பெருஞ்சிறப்பினைப் பெறுவர் பெண்டிர் என்பதாம். மேல் (57) மனைவியர் மனவுறுதி கூறினர். இதில் கணவர் மனவுறுதி கூறினர். கணவர் மனமொத்து நடக்கும்படி நடந்துகொள்வது பெண்கள் கட்மையாகும். இது ஆண்கட்கும் ஒக்கும். புத்தேளிர் உலகத்தை வடபுலத்தாரிற் காண்க.

பரி: 'பெண்டிர் பெற்ருன் பெறின் - பெண்டிர் தம்மையெய்திய கணவனை வழிபடுதல் பெறுவராயின்.'

பெண்கள் இறந்தபின் தேவர் சிறப்புச் செய்ய இப்போது கணவனை வழிபடுதல் வேண்டுமென்பது கருத்து. (மனு, அ-5, சு-155). கணவன் மனமொத்து நடக்கும்படி நடந்து குடும்ப நடத்தும் பெண்களைத் தந்நாடே யன்றி அயல் நாடும் புகழு மென்பது வள்ளுவர் கருத்தேயன்றி,

இறந்தபின் புகழப்படுவதை யன்று. இவர் மறுமைப் பயன் கூறுவதாகக் கொண்டதே தப்பு.

2. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. (61)

நாம் பெறும் பேறுகளுள் அறிவுடைய மக்கட் பேற்றைவிடச் சிறந்த பேறு வேறில்லை.

பரி: 'அறிவறிந்த' என்றதனால் மக்கள் என்னும் பெயர் பெண்ணொழித்து நின்றது.

வள்ளுவர் 'மக்கட்பேறு' என்று அதிகாரத்திற்குப் பொதுவாகப் பெயரிட்டிருக்க, இவர் 'புதல்வரைப் பெறுதல்' என்று ஆண்பாலாகக் கொண்டதற் கேற்பவே இவ்வாறு கூறினார். சங்ககாலத்தே செந்நாப்புலமை யுடைய பெண்கள் பலர் சங்கப்புலவர்களாய் இருந்திருக்க, இலக்கியம் இலக்கணம் இரண்டினாலும் ஆண்களோடு போட்டி போட்டுக்கொண்டு நூல்கள் எழுதியிருக்க, அறிவுக் கொள்கலமாகிய அவ்வையா ரிருந்திருக்க, பெண்களுக்கு அறிவில்லையென்றோ, அறிவு பெறக்கூடாதென்றோ கொள்ளுதல் தமிழர் பண்பாடன்று. வள்ளுவர் கொள்கையுமல்ல. எல்லாத் தமிழரசியரும் சிறந்த புலமை யுடையவராகவே விளங்கியுள்ளனர். விறலியர், பாட்டியர் ஆகிய ஆடன்மகளிரும், பாடன்மகளிரும் அறிவில்லாதவரா என்ன? தமிழ்ப் பெண்டிர் அறிவில்லாமலா செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்தனர் (86)? இசை நாடகத்தமிழை வளர்த்த பெருமையே பெண்களைச் சேர்ந்ததாயிருக்க, பெண்களுக்கு அறிவில்லை, அவர் அறிவுபெறத் தகுதியற்றவர் என்பது பொருந்தாக் கூற்றேயாகும். அறிவில்லா மக்கட்பேற்றால் பயனில்லையாதலால், 'அறிவறிந்த மக்கள்' என்றார். பெண்ணொழிக்கவில்லை.

3. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (69)

தன் மகனை அறிவில் நிறைந்தோனென்று அறிவுடையோரால் சொல்லக் கேட்ட தாய், பெற்ற பொழுதைவிடப் பெரிதும் மகிழ்வாள்.

ஒருமை பற்றி 'மகன்' என்றார், மகளும் கொள்க. தந்தையைவிடத் தாயே மக்கள் பெருமை கண்டு மிகவும் மகிழ்வாளாதலால் 'தாய்' என்றார். அறிவுடையோரால் உங்கள் மகன் சிறந்த அறிவுடையவன் என்று சொல்லக் கேட்ட பெற்றோர் மிகவும் மகிழ்வர் என்பதாம்.

பரி: 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின் கேட்ட தாயெனவுங் கூறினார்.'

தம் மகனைத் தாமாக அறிவில் சிறந்தவனென்று யாருஞ் சொல்லிக்கொள்ளார். தாமாகச் சொல்லிக்கொள்வதில் பயனுமில்லை. பிறர் சொல்வதுதான் ஏற்றதாகும். அதிலும், அறிவுடையோர்க்கே ஒருவர் அறிவைப்பற்றி ஆராய்ந்து கூற முடியுமாகையால், அறிவுடையோரால் உங்கள் மகன் சிறந்த அறிவுடையவன் என்று சொல்லக் கேட்ட தாய் மிகவும் மகிழ்வாள் என்பதே நேர் பொருள். பெண்கள் அறிவிலார் என்பது தமிழர் கொள்கையன்று.

4. பெண்வழிச் சேறல் (91)

வாழ்க்கைத் துணைவர்களாகிய ஆணும் பெண்ணும் வாழ்க்கையில் ஒத்த உரிமையுடையவராய் நடந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் வாழ்க்கையில் அறம் பொருளின்பம் அடைந்து அமைவுடன் வாழலாம். இல்லறத்தார்க்குரிய கடமைகளையும் குறைவின்றிச் செய்து புகழுடன் வாழலாம். இங்ஙனமன்றி, ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் அடங்கித் தன்னுரிமை யிழந்து, அவரேவல் கேட்டு நடப்பாராயின் இல்லறம்

OFFICE OF THE DIRECTOR OF ARCHAEOLOGY 4829 5 JUN 1975

இனிது நடைபெருது. வாழ்க்கையில் செய்யவேண்டுவன செய்து இன்புற முடியாது. அறம்பொருளின்பம் அடைய முடியாது.

சில பெண்கள் தம் கணவர்களை அடக்கித் தம்கீழ்ப் படுத்தி, தாம் சொல்லுகிறபடி தம் கணவர் ஆடுமாறு ஆட்டிவைக்கின்றனர். அப் பெண்ணேவல் செய்தொழுகுவோர் தம் மனைவியர்க்கு வேண்டாத சுற்றத்தாரைப் போற்றவோ, தாம் விரும்பினவர்க்கு ஒன்று செய்யவோ, விரும்பிய தொன்றைக் கொடுக்கவோ முடியாமல் மானங் கெட்டு நிற்கின்றனர். எதற்கும் மனைவியர் கையைப் பார்த்து அலைகின்றனர். அவர்களை உறவினரோ, பிறரோ யாரும் மதிப்பதில்லை. பெண்ணேவல் செய்தொழுகுவான் தனக்கு வேண்டியவரை வீட்டுக்குக் கூட்டிப்போனல் அன்று வீடு போர்க்களமாகிவிடும். அவன் மானம் கப்பலேறிவிடும். உலகில் ஓர் ஆண்மகனுக அவன் வாழமுடியாது.

இவ்வாறே சில ஆண்கள் பெண்களை அடிமைகளாக்கி, 'மனையாள், இல்லாள்' என்னும் அவர்களது வீட்டதிகார உரிமையைப் பறித்து, நாளும் அரிசி பருப்பு உப்புப் புளி கூட அளந்து கொடுத்துக் கொண்டு வருவர். இப் பெண்களாலும் வாழ்க்கை யின்பத்திற்கு வேண்டிய எதையும் செய்யமுடியாது. கணவர் வீட்டுச் செலவுக்குக் கொடுப்பதில் மிச்சம் பிடித்துச் சிறுவாடு சேர்த்தும், தம் விருப்பம் போல் குடும்ப நடத்த முடியாமலும் திண்டாடுவர். அவர்கள் 'இல்லாள், மனையாள்' என்னும் பேருக்கு இருந்து வருவார்களே யன்றி அவ்வுரிமை சிறிதும் இலராகவே இருப்பர்.

இப் பெண்வழிச் சேறலும், ஆண்வழிச் சேறலும் வாழ்க்கை முறைக்குச் சிறிதும் ஏற்றவையல்ல. இக்

கெட்ட ஒழுக்கத்தை விலக்க எழுந்ததே இவ்வதிகாரம். ஆண்வழிச் சேறலினும் பெண்வழிச் சேறல் மிகுதியாதலி ஞலும், இல்லின்கண் இருந்து விருந்து, சுற்றம், நட்பு முதலியோரைப் போற்றுதல் பெண்கள் ஆதலினலும், மனைவி தலைமை பெறின் கணவனுடைய சுற்றத்தார்க்கு யாதொரு உதவியும் செய்யாததோடு, அவர்களை வெறுத் துப் பகையாகக்கொண்டு நடத்துதலினுலும், மிகவும் தகாததான பெண்வழிச் சேறலின் குற்றங்கூறி ஆண் வழிச் சேறலின் குற்றத்தையும் பெறவைத்தார். இஃதறி யார், வள்ளுவர் பெண்ணடிமையை விரும்புகிருர் எனத் தமக்குத் தோன்றியவாறெல்லாங் கூறுவர். திருக்குறள் குழந்தையுரை கண்டு உண்மை யுணர்க.

பரி : 'அஃதாவது, தன்வழி யொழுகற் பாலளாய இல்லாள் வழியே தானெழுகுதல்.'

இது, பெண்களுக்கு எவ்வகை யுரிமையும் இல்லை.

'இளமையில் தகப்பன் கட்டளைப்படியும், பருவத் தில் கணவன் கட்டளைப்படியும், கணவனிறந்த பின்பு பிள்ளைகள் கட்டளைப்படியும் இருக்க வேண்டியதே யல்லது பெண்கள் தன் சுவாதீனமாக ஒருபோதும் இருக்கக்கூடாது.' (மனு, அ-5. சு-148)

'கணவன் தீய ஒழுக்கமுடையவனுக இருந் தாலும், பிற பெண்கள் லோலனுக இருந்தாலும், நற் குணமில்லாதவனுக இருந்தாலும் கற்புடைய பெண் ணுனவள் அவனைத் தெய்வத்தைப் போல் பூசிக்க வேண்டியது. (மனு, அ-5. சு-154)

என்னும் மனுமுறை புகுத்துதலேயாகும்.

மேலும், 'பேணுது (2)—தன் ஆண்மையை விட்டு. அவள் தான் அஞ்சி யொழுகுதல் இயல்பாதலின், அவளை அஞ்சுதல் இயல்பின்மை யாயிற்று (3). தான் வேண்டிய

வாறன்றித் தன் மனையாள் வேண்டியவாறு ஒழுகுபவர்' (8) என்பன வெல்லாம் ஆணுக்குப் பெண் அடங்கியே நடக்க வேண்டும் என்னும் பெண்ணடிமைக் கருத்துக்களே யாகும்.

## 7. பச்சை யாரியம்

அறம்பொரு ளின்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெறிந்து தேறப் படும். (501)

அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின் திறம் தெரிந்து—அறமும் பொருளும் இன்பமும் உயிரச்சமும் என்னும் நான்கின் கூறுபாட்டையும் ஆராய்ந்தறிந்து, தேறப்படும்-பின்பு ஒருவனைத் தெளியவேண்டும்.

தெளிதல்—தேர்ந்தெடுத்தல். இது, 'தெரிந்து தெளிதல்' என்னும் அதிகாரத்தைச் சேர்ந்தது. தெரிந்து தெளிதல்—ஆராய்ந்து தேர்ந்தெடுத்தல். அதாவது, அரசன், அமைச்சர் முதலாயினோரை அறிவு குணம் செயல் என்பவற்றை ஆராய்ந்து தேர்ந்தெடுத்தல். இக்காலத்து பண்ணையம், கடை, தொழிலகம் முதலியவற்றிற்கு ஆட்களைத் தேர்ந்தெடுத்தலுக்கும் இது பொருந்தும். அரசியல் அலுவலாளர்களையும் இம்முறையில் தேர்ந்தெடுத்தல் ஏற்றதாகும்.

அறம் பிறழாமலும், பொருளுக்காகக் கடமையிற் றவறாமலும், இன்பத்தின் பொருட்டு ஒழுக்கந் தவறாமலும், உயிர்க்கு உண்டாகும் கேட்டுக்கு அஞ்சிக் கடமை தவறாமலும் உள்ளவனையே தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதாம். உயிரச்சம்—உயிருக்காக அஞ்சும் அச்சம்; தனது கடமைக்கு மாறாக ஒன்றைச் செய்யாவிட்டால் உன்னைக் கொல்வேனென்று அச்சுறுத்தினாலோ, அல்லது வருத்தி

ஞலோ அதற்கு அஞ்சிக் கடமையில் தவறுதல். இந் நான்கு வகையிலும் ஆராய்ந்து பார்த்து, இந்நான்கிலும் தவருதவனையே வேலைக்கு அமர்த்திக்கொள்ள வேண்டும்.

பரி : 1. 'அவற்றுள், அறவுபதையாவது—புரோகிதரையும் அறவோரையும் விட்டு, அவரால், இவ்வரசன் அறவோனன்மையின் இவனைப் போக்கி, அறனுமுரிமையும் உடையானெருவனை வைத்தற் கெண்ணினம்; இதுதான் யாவர்க்கும் இயைந்தது. நின்கருத் தென்னையெனச் சூழுறவோடு சொல்லுவித்தல்.

2. பொருளுபதையாவது-சேனைத்தலைவனையும், அவனேடியைந்தாரையும் விட்டு, அவரால், இவ்வரசன் இவறன் மாலையனுகலின் இவனைப் போக்கி, கொடையும் உரிமையும் உடையானெருவனை வைத்தற் கெண்ணினம்; இதுதான் யாவர்க்கும் இயைந்தது. நின்கருத் தென்னையெனச் சூழுறவோடு சொல்லுவித்தல்.

3. இன்பவுபதையாவது — தொன்றுதொட்டு உரிமையொடு பயின்ருளொரு தவ முதுமகளை விட்டு, அவளால், உரிமையுள் இன்னுள் நின்னைக் கண்டு வருத்த முற்றுக் கூட்டுவிக்க வேண்டுமென்று என்னை விடுத்தாள். அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமே யன்றிப் பெரும்பொருளும் கைகூடும் எனச் சூழுறவொடு சொல்லுவித்தல்.

4. அச்சவுபதையாவது—ஒரு நிமித்தத்தின் மேலிட்டு, ஓரமைச்சனுல் ஏனையோரை அவன் இல்லின்கண் அழைப்பித்து, இவர் அறைபோவான் எண்ணிக் குழீஇயினுரென்று தான் காவல் செய்து, ஒருவனுல் இவ்வரசன் நம்மைக் கொல்வான் சூழ்கின்றமையின், அதனை நாம் முற்படச் செய்து, நமக்கினிய அரச

ஞெருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கும் இயைந் ததுு. நின்கருத் தென்னையெனச் சூழுறவோடு சொல்லுவித்தல்.

இந் நான்கினும் திரிபில ஞகியவழி எதிர்காலத்துந் திரிபில னெனக் கருத்தளவையால் தெளியப்படும் என்ப தாம். இவ் வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவரோ தியதறியாது பிறரெல்லாம் இதனை 'உயிரெச்சம்' எனப் பாடந் திரித்துத் தமக்குத் தோன்றியவாறே யுரைத்தார்'

உபதை-சோதனை, ஆராய்ச்சி. சூழுறவு-சத்தியம். சத்தியமாகச் சொல்லும்படி கேட்டல். கருத்தளவை-எண்ணியறிதல்.

1. அதாவது, ஒருவன் அரசியல் வேலைக்காக விண் ணப்பம் போட்டால், அவனை வரவழைத்து ஒரு தனிஇடத் தில் இருக்கும்படி செய்து, புரோகிதரையும், அறவோரை யும் அங்கு அனுப்பி, அவ்வாறு கேட்கச் சொல்லுதல். அவன் அவ்வாறே இவ்வரசனை நீக்கிவிட்டு வேறொருவனை அரசனுக்கலாம் என்ருல், அவனை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளாமல் தள்ளிவிடுதல். அவ்வாறு செய்யக் கூடாது. அது தவறு. இது அரச இரண்டகச் செயலாகும் என அவன் மறுத்துக் கூறிஞல், அவனை வேலைக்கு எடுத்துக் கொள்ளுதல் என்பதாம்.

2. இவறன் மாலையன்—உலோபத்தன்மை யுடை யவன். இங்கும் அவ்வாறே சோதித்தல்.

3. உரிமை-அரசன் மனைவியர். தொன்றுதொட்டு உரிமையொடு பயின்றவள்-அரசன் மனைவியர் வந்ததி லிருந்து அவர்களோடு பழகினவள். தவமுதுமகள்-கிழவி. உரிமையுள் இன்னுள். அரசன் மனைவியர் பலருள் இன் னவள். நின்னைக் கண்டு வருத்தமுற்று - உன்னைக்கண்டு

காதலுற்று அதனுல் வருந்தி. கூட்டுவிக்க வேண்டு மென்று-அழைத்து வரும்படி.

4. நிமித்தம்-காரணம். அறைபோதல்-பகையரசனைப் போய்ச் சேருதல். ஓரமைச்சன் வீட்டில் பலரும் கூடி யிருந்து, அங்கு அவனை அழைத்துப் போய், இவர்களெல் லாம் இவ்வரசனைவிட்டுப் பகையரசனிடம் போகக் கூடினு ரென்று எண்ணி, இவ்வரசன் போகாமல் காவல் செய்து, ஒருவனைக் கொண்டு இங்குள்ளோரை யெல்லாம் கொல்ல நினைப்பதனுல், அவன் நம்மைக் கொல்வதன்முன் நாம் அவனைக் கொன்று, நமக்கேற்ற அரசனெருவனை வைக்க இங்குள்ள எல்லோரும் முடிவு செய்தனம்.

பார்த்தீர்களா ஆரியர் அரசியல் முறையை? இவ்வாரு வேலைக்கு ஆளைத் தேர்ந்தெடுப்பது ? இவ்வாறு தேர்ந் தெடுத்தால், தேர்ந்தெடுப்போரைப் பற்றியும் அவ் வரசனைப் பற்றியும் அவன் என்ன நினைப்பான் ? இவை தான் ஓர் ஆளைத் தேர்ந்தெடுக்கும் வழியா ? நல்ல சோதனை ! இத்தகைய அரசியல் முறை கூறுவதுதான் மனு முதலிய ஆரிய அறநூல்கள். அந்த நூல்களில் விதித் தன செய்தலும் விலக்கியன ஒழிதலுந்தான் திருக்குறள் கூறும் அறம் என்று கூறும் பரிமேலழகரின் துணிவே துணிவு !

இனி, மூன்ருவதான இன்பச்சோதனை ஓர் அரசன் செய்வானு ? அவனுக்கு என்ன மானம் வெட்கம் உண்டா இல்லையா ? 'எனது பெண்டாட்டி உன்னைக் காதலிக் கிருள். உன்மீது அவளுக்கு அளவுகடந்த ஆசை. உன் னைக் கூடமுடியாது வருந்துகிருள். நீ அவளைக் கூடிப் பேரின்பம் அடைவாய். உனக்கு இன்பந்தருவதோடு, அவள் மிகுந்த பொருளுந்தருவாள். நீ தயவு செய்து அவள் விருப்பத்தை நிறைவேற்றுவாயாக. நீ அவ்வாறு

அவள் விருப்பத்தை நிறைவேற்றினால் பேரின்பமும் பெரும் பொருளும் பெறுவாய்' என ஒருவன், அதுவும் ஓர் அரசன் தன் வேலைக்காரியை விட்டு, தன்னிடம் வேலை வேண்டி வந்த ஒருவனைக் கூப்பிடுவானா? அவன் என்ன மகனா, அல்லது மரக்கட்டையா?

அட மானங்கெட்ட ஆரிய நாகரிகமே! அடடா! என்ன உயரிய நாகரிகம்! இத்தகைய உயரிய நாகரிகத்தைத்தான் ஆரிய மக்கள் தமிழ் மக்களுக்கு அருள்கூர்ந்து வழங்கினர் போலும்! ஒரு தமிழரசன் இதைக் கனவிலாவது கண்டிருப்பானா? மேலும், 'இவ் வடநூற் பொருளை யுட்கொண்டு வள்ளுவர் ஓதியதை மற்ற உரையாசிரியர்கள் அறியவில்லை' என்று வெட்கமில்லாமல் வேறு கூறுகிறார்.

ஆரியர் நாகரிகம் தமிழர் நாகரிகம் என்பதெல்லாம் முழுப்பொய்; அது குறுகிய நோக்கம்; ஒருவகைத் தன்னலத்தால் கூறும் கூற்று. ஆரிய நாகரிகமும் தமிழர் நாகரிகமும் ஒன்றாகக் கலந்து நெடுங்காலமாகிவிட்டது. தமிழர் நாகரிகமென்று தனியாக ஒன்றில்லை. ஆரிய நாகரிகக் கலப்பால்தான் தமிழர் நாகரிகம் சிறப்புற்றது என்போர் இதைக் கண்டு தங்கள் மயக்கந் தெளிவார்களாக.

இத்தகைய இழிதகைமையான கொள்கையை வடநூற் கொள்கை யென்று வாயுமனமுங் கூசாமல் கூறிக்கொண்டு, இக்கருத்தை உடன்பட்டே வள்ளுவர் கூறியுள்ளார் என்று துணிந்து கூறும் பரிமேலழகருடைய நெஞ்சத் துணிவை மெச்சுவதா! 'இவனென்னடா கத்துக்குட்டி! பரிமேலழகரைக் குறைகூற வந்துவிட்டான். பரிமேலழகரெங்கே இவனெங்கே? அவருடைய உரையில்லாமல் திருக்குறளை எப்படிப் படிப்பது?' என்று

கூறும் தமிழரது தகாத் தன்மையை மெச்சுவதா! இத் தகைய உரையை அப்படியே வைத்துக்கொண்டிருந்த தமிழ்ச் சான்ரேர்களின் அக்கறையற்ற தன்மையை மெச்சுவதா! எதை மெச்சுவது! தற்காலத் தமிழ்மக்களே கூறட்டும்.

# 6. சமயக் கருத்து

திருக்குறள் ஒரு சமயச் சார்பற்ற நூல். அகம் புறம் என்னும் மக்கள் வாழ்க்கை முறையை, அறம் பொரு ளின்ப மென முப்பாலாக்கிக் கூறும் வாழ்க்கைச் சட்ட நூலேயன்றித் திருக்குறள் ஒரு சமய நூலன்று. எச் சமயத்திற்கும் உடன்பாடான நூல் என்பதும் பொருந் தாது. வாழ்க்கை வேறு, சமயம் வேறு. வாழ்க்கைக்கும் சமயத்திற்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. சமயச் சார்பற்ற வாழ்க்கையே உயரிய நல்வாழ்க்கையாகும். வாழ்க்கைத் தேரை இனிது செல்லாமல் தடை செய்யும் மேடு பள்ளமும் மணலும் புழுதியும் சேறுமேயாகும் சமயங்கள்; வாழ்க்கை வழியிடைப்பட்ட பேரிருளே யாகும் சமயம். வாழ்க்கையில் சமயத்தைத் தொடர்பு படுத்தி வாழ்க்கையைக் குட்டிச்சுவராக்கினது அதிகார பீடத்தில் சமயம் அமர்ந்ததனுலேயே யாகும். உலகம் பொய், உடம்பு பொய், வாழ்க்கை பொய், பெண்டுபிள்ளை யெல்லாம் பொய், ஏன் காண்பதெல்லாம் பொய் என்ற புறம்போக்காளர்களுக்கு அரசர்கள் அடிமையானதே, அன்னுரின் கட்டளைப்படி ஆட்சி நடத்தினதே இக்கேட் டுக்குக் காரணமாகும். தமிழர் பண்பாடு கெட்டு, தமி ழினம் இன்றுள்ள இத்தகைய இழிநிலையை அடைந்ததற் குக் காரணம் வாழ்க்கையையும் சமயத்தையும் பிரிக்க முடியாத நிலையில் ஒன்ருகப் பிணித்ததே யாகும்.

திருக்குறளில் கூறும் துறவறம், இல்லறம் முற்றியவர், இல்லறத்தைத் துறந்து—இல்லற இன்பத்தைத் துறந்து மன அமைதியுடன் பொதுநலம் புரிவதைக் கூறுவதே யாகும். சமயக் கருத்துக்கள் ஒன்றும் அங்கு கூறப்படவில்லை. எனவே, திருக்குறள் எந்தச் சமயத்தாரும் எமதென

உரிமை கொண்டாட உரிமை யில்லாததாகவும், எல்லார்க்கும் உரிய பொது நூலாகவும் உள்ளது. இத்தகைய சமயச் சார்பற்ற குறளில், பரிமேலழகர் வேண்டுமென்றே வினை, பிறப்பு, வீடு முதலிய சமயக் கருத்துக்களை வலிந்து புகுத்தி, திருக்குறள் சமயச் சார்பான நூலென எண்ணும்படி செய்துவிட்டனர்.

## 1. வினை

வினை என்பது—ஒருவன் செய்த வினை அவன் உயிர் எடுக்கும் பல பிறப்புக்களிலும் அவ்வுயிரோடு தொடர்ந்து செல்லும். அவ்வினையே பிறப்புக்குக் காரணம். அது நல்வினை தீவினை என இரண்டு வகைப்படும் என்பது சமயக் கற்பனை.

1. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. (5)

இறைவன் பொருள் சேர்புகழ் புரிந்தார் மாட்டு—இறைவனது மெய்ப்பொருள் சேர்ந்த புகழை விரும்பினவரிடத்து, இருள் சேரும் இருவினை சேரா—அறிவின்மையால் உண்டாகும் பெரிய துன்பங்கள் சேரா.

இருள் - அறிவின்மை. வினை - துன்பம். இருமை - பெருமை. இருங்கடல் எனக் காண்க.

பரி : 'இருள்சேர் இருவினையும் சேரா—மயக்கத்தைப் பற்றி வரும் நல்வினை தீவினை என்னும் இரண்டு வினையும் உளவாகா'.

அறியாமையால்-அறிவு மயக்கத்தால் தீவினைதான் செய்வார்களே தவிர, நல்வினை செய்வதெங்ஙனம்? அறியாமை நல்வினைக்குக் காரணமாயின் அறிவினாலாய பயனென்? இறைவன் புகழை விரும்பினார்க்குப் பெருந்துன்பங்கள் சேரா என்பதே நேர்பொருளாகும்.

2. தீவினையா ரஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை யென்னும் செருக்கு. (201)

தீவினை என்னும் செருக்கு-தீச்செயல் என்னும் களிப்பை, தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்-தீச் செயலுடையார் அஞ்சார், சீரியர் அஞ்சுவர்.

களிப்பு-தீச்செயல் புரிந்ததால் ஏற்படும் மிகுமகிழ்ச்சி. தீவினையார்-தீச்செயல் புரிந்து பழகினர். தீவினை-கெட்ட காரியம்.

பரி : 'தீவினை என்னும் செருக்கு-தீவினை யென்று சொல் லப்படும் மயக்கத்தை, தீவினையார் அஞ்சார்-முன் செய்த தீவினை யுடையார் அஞ்சார், விழுமியார் அஞ்சுவர்-அஃதிலராகிய சீரியர் அஞ்சுவர்.'

தீவினையார்-தீச்செயல் செய்து பழகினவர்; தீச்செயல் புரிபவரேயன்றி, முற்பிறப்பில் செய்த தீவினையார் அல்லர். முன்செய்த தீவினைப்படி தீவினை செய்யின் குற்றம் அவ ருடையதன்றே. வினைப்படி நடப்பதற்கு அவரென்ன செய்வர்? வினைப்படி நடக்கும் செயலை எப்படி அஞ்சிச் செய்யாது தவிர்க்க முடியும்?

3. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை. (37)

சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை-பல்லக் கைச் சுமப்பானிடத்தும், அதில் ஏறிச் செல்வானிடத்தும், இது அறத்தாறு என வேண்டா-இது அறநெறி என்று கூறவேண்டா.

பொறுத்தல்-சுமத்தல். மக்களில் ஒருவரை ஒருவர் சுமக்கு முறை அறமாகாது. இது மக்கட் பண்பாட்டுக்குத் தகாத முறையாகும். செல்வத்திலும், தன்மையிலும் இவ்

வளவு ஏற்றத்தாழ்வு அறமாகாது என்பதாம். ஓடு-எண்ணெடு நீண்டது. இடை-இடம்.

பரி : 'அறத்து ஆறு இது என வேண்டா-அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகமவளவையான் உணர்த்தல் வேண்டா, சிவிகைபொறுத்தானேடு ஊர்ந்தானிடை-சிவிகையைக் காவுவானேடு செலுத்துவானிடைக் காட்சியளவை தன்னனே உணரப்படும்.'

'பயனை ஆறென்ருர், பின்னதாகலின்' என்பதால், முற்பிறப்பில் அறஞ் செய்தவன் பல்லக்கின் மேலும், அறஞ் செய்யாதவன் பல்லக்கைச் சுமந்தும் செல்கின்றனர் என்பது கருத்தாகும். ஆகமம்-நூல். அறம்-செய்வன தவிர்வனவே யன்றி ஈகையன்று. முற்பிறப்பில் புண்ணியம் செய்தவன் பல்லக்கில் செல்கிருன், புண்ணியம் செய்யாதவன் அதைச் சுமந்து செல்கிருன். எனவே, பிறருக்குக் கொடுங்கள் என்பது செய்வன தவிர்வனவாகிய அறத்தின் சிறப்பை வற்புறுத்திக் கூறும் 'அறன்வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்திற்குப் பொருந்தாது.

4. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது. (377)

கோடி தொகுத்தார்க்கும்-கோடியளவு நுகரப்படும் பொருள்களைச் சேர்த்து வைத்தவர்களுக்கும், வகுத்தான் வகுத்த வகையல்லால் துய்த்தல் அரிது-அப்பொருள்களை உண்டாக்கியவர்களது வகைப்படி யல்லாமல் வேறு வகையினுல் நுகர்தல் முடியாது.

நுகர் பொருள் பலவாகலின், ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வகையினர் ஒவ்வொரு வகையாகச் செய்தனர் என்பது தோன்ற 'வகுத்தான்' என ஒருமையாற் கூறினுர். குளிருக்குரிய கம்பளி வெயிலுக்காகாது. பனிநீரும்

தேம்பாகும் சளிப் பிடித்தவனுக்காகா என, நுகர்பொருளின் தகுதியும், நுகர்வோன் தகுதியும் ஒவ்வாமை கூறினர். பொருள்களின் தகுதிக்கு மாருக நுகரப்படா தென்பது கருத்து.

பரி : 'வகுத்தான் வகுத்த வகையல்லால் துய்த்தல் அரிது- தெய்வம் வகுத்த வகையா னல்லது நுகர்தலுண்டா காது.'

தெய்வம்-ஊழ். 'ஒருயிர் செய்த வினையின் பயன் பிறிதோர் உயிரின்கட் செல்லாமல் அவ்வுயிர்க்கே வகுத்தலின், வகுத்தானென்ருர்' என்பதால், ஒருவன் செய்த வினை அவன் உயிரையே தொடருமென்பதும், வினைப் படியே எல்லாம் நடக்கும் என்பதும் சமயக் கருத்துக்களே யாகும்.

5. இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான். (1062)

உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் -இவ்வுலகத்தை உண்டாக்கியவன் மக்கள் முயற்சியால் உயிர் வாழ்தலை விரும்பாது பிறரிடம் சென்று இரந்தும் உயிர் வாழ்தலை விரும்புவானுனல், பரந்து கெடுக-அக் கொடியோன் இரப்போரைப் போன்று எங்குந் திரிந்து கெடக்கடவன்.

தொழில் செய்தற்கேற்ற கை கால் முதலிய உறுப்புக் களும், பகுத்தறிவும் இருந்தும் ஒரு சிலர் பிறரிடம் சென்று இரத்தல் தகாது என்பதை இவ்வாறு கூறினர். இது உகலம் ஒருவனுல் உண்டாக்கப்பட்டது என்னும் கொள் கையைக் கொண்டு கூறியது.

பரி . 'மக்களுயிர்க் கெல்லாம் வாழ்நாளும், அதற்கு வேண் டுவதாய உண்டியும், அதற்கேதுவாய செய்தொழி

ஓம் பழவினை வயத்தால் கருவொடு கலந்தவன்றே அவன் கற்பிக்குமன்றே'

பழவினையால் ஒருவற்குக் கருவொடு இவை அமையுமெனில், முயற்சியும், பிறர்க்குக் கொடுக்கவேண்டுமென்பதும், இரத்தல் இழிவென்பதும், வினைப்படி படைத்தவனுக்கு எதிரிடையாகச் செய்வதாகுமன்றோ? இது பச்சைச் சமயக் கருத்தாகும்.

## 2. பிறப்பு

உயிர், தான் செய்யும் வினைக்கீடாகப் பல பிறப்புக்கள் எடுக்கிறது. யோக ஞானங்களால் உயிர் பிறப்பற்று வீடு பெறும். நாம் பிறவா நிலையை அடைய முயலவேண்டும் என்பனவெல்லாம் சமயக் கருத்துக்களாகும். இத்தகைய கருத்துக்கள் எதுவும் திருக்குறளில் கூறப்படவில்லை. வேண்டுமென்றே பரிமேலழகர் புகுத்துவதே யாகும்.

1. யாண்டும் இடும்பை இல (4)-எப்போதும் துன்பம் இல்லை.

பரி : 'யாண்டும் இடும்பை இல-எக்காலத்தும் பிறவித் துன்பங்கள் உளவாகா. பிறவித் துன்பங்களாவன-தன்னைப்பற்றி வருவனவும், பிறவுயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தைப்பற்றி வருவனவும் என மூவகையான் வருந்துன்பங்கள்.'

பிறவித்துன்பம்-பிறவிக்குக் காரணமாகிய துன்பம். இடும்பை என்பது-இடுக்கண், வருத்தம் என்பனபோலவே, துன்பம் எனப் பொருள்பட, இவர் 'பிறவித்துன்பம்' என வலிந்து பொருள்கொண்டு, அதை மூவகையாக்கிச் சமயக் கருத்தை வலிந்து புகுத்துகிறார்.

**2 தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லான்**
**மனக்கவலை மாற்ற லரிது. (7)**

ஒப்பில்லாதவனது தாளைச் சேர்ந்தவர்க்கு அல்லாமல் மற்றோர்க்கு மனக்கவலையை நீக்கமுடியாது. தனக்கு மேல் ஒருவன் இருந்தால்தானே தான் அவனிலும் தாழ்ந்தவன் என்னும் கவலை யுண்டாகும்? வண்டியில் செல்வோர்க்குத் தானே வானூர்தி யில்லையே என்ற கவலை? வானூர்தியில் செல்வோர்க்கு அதற்குமேல் செல்லும் ஓர் ஊர்தியின்மை யால் கவலையுண்டாக இடமில்லை என்பதையறிக. ஒப்பில் லாத உயர்குண முடையோர்க்கு மனக் கவலையில்லை.

பரி : 'தாள் சேராதார் பிறவிக் கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்றமாட்டாமையின். பிறந்து அவற் றான் வருந் துன்பங்களுள் அழுந்துவ ரென்பதாம்.'

காம வெகுளி மயக்கங்கள் பிறவிக்குக் காரணம் என் பது சமயக் கருத்தாகும். காம வெகுளி மயக்கங்கள் பிறவிக் கேது; அவற்றால் பிறந்து, பின்பும் காம வெகுளி மயக்கங் களால் வருந் துன்பங்களுள் அழுந்துவர் என்பது மறுபடியும் மறுபடியும் அவற்றால் பிறந்துகொண்டே துன்புற்றுக் கொண்டே இருப்பதென்னும் சமயக் கற்பனையே யாகும்.

**3. எழுபிறப்புந் தீயவை தீண்டாப் பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின். (62)**

பழிபிறங்காப் பண்புடை மக்கட் பெறின்–குற்றமற்ற நன் மக்களைப் பெற்றால், எழுபிறப்பும் தீயவை தீண்டா–எழு தலை முறைகளிலும் தீமைகள் சேரா.

ஏழ் என்னும் எண்ணுப் பெயர் பல என்னும் பொருளது. ஒருவன் தன்மை ஏழு தலைமுறை வரையிலும் இருக்கும்

என்னும் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி முடிவு இங்கு நோக்கத் தக்கது. நல்லோர் பிறந்தகுடி பல தலைமுறை மதிக்கப்படு தலை யறிக. நன்மக்கள் பிறந்த குடும்பம் பல தலைமுறை மதிப் புப்பெறும்.

பரி : 'எழுபிறப்பும் தீயவை தீண்டா-வினைவயத்தாற் பிறக் கும் பிறப்பேழின் கண்ணும் ஒருவனைத் துன்பங்கள் சென்றடையா பிறரால் பழிக்கப்படாத நற்குணங்களை யுடைய புதல்வரைப் பெறுவானாயின்.

அவன் தீவினை வளராது தேய்தற்குக்காரணமாகிய நல்வினைகளைச் செய்யும் புதல்வரைப் பெறுவானாயின் என்றவாறாயிற்று. தந்தை தாயர் தீவினை தேய்தற் பொருட்டு, அவரை நோக்கிப் புதல்வர் செய்யும் தான தருமங்கட்கு அவர் (புதல்வர்) நற்குணங் காரண மாகலின்.'

மக்கள் செய்யுந் தானதருமங்களால் பெற்றோர் பிறவித்துன்பங்கள் நீங்குமென்பது சமயக் கருத்தே யாகும். இது சிரார்த்தஞ் செய்தலாகும். புதல்வர் செய் யும் நல்வினையால் (திதி) தந்தை தீவினை தேயுமென்பது கற்பனையே.

4 எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. (107)

தங்கண் விழுமம் துடைத்தவர் நட்பு-தமக்குற்ற துன் பத்தை நீக்கினவரது நட்பை, எழுமை எழுபிறப்பும் உள்ளு வர்-அறிவாளிகள் எப்போதும் நினைப்பர்.

எழுபிறப்பு-பல தலைமுறை. கோவலன், பல தலை முறைக்கு முற்பட்ட தன் முன்னோ னொருவனைக் கடலி னின்று கரையேற்றிக் காத்த மணிபல்லவத்து அரசியான

மணிமேகலையின் நன்றியை மறவாது, தன் மகளுக்கு 'மணி மேகலை' என அவள் பெயரை இட்டமை அறிக.

பரி: 'தங்கண் எய்திய துன்பத்தை நீக்கினவருடைய நட்பினை, எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்-எழுமை யினையுடைய தம் எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் நல்லோர்.

எழுமை என்றது-வினைப்பயன் தொடரும் எழு பிறப்பினை. நினைத்தலாவது - துன்பந் துடைத்தலான் அவர் மாட்டுளதாகிய அன்பு பிறப்புத்தோறும் தொடர்ந்து அன்புடையராதல்,'

ஓருயிர் எழுபிறப்பில் செய்த வினையின் பயன் அவ்வுயிர் எழு பிறப்பினும் தொடரும் என்பதும், ஒரு பிறப்பில் கொண்ட அன்பு பல பிறப்புக்களிலும் தொடர்ந்து அன் புடையராக்கும் என்பதும் சமயக் கருத்துக்களே யாகும்.

5 ஒருமையு ளாமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. (126)

ஒருமையுள் ஆமைபோல் ஐந்து அடக்கல் ஆற்றின்-ஒருகூட்டிற்குள் ஐந்துறுப்பினையும் அடக்கும் ஆமையைப் போல, ஐம்பொறிகளும் ஐம்புலன்கள் மேலும் விரும்பிய வாறு செல்லாமல் அடக்கவல்லனாகில், எழுமையும் ஏமாப்பு உடைத்து-அச்செயல் பல தீமைகளும் அணுகாத பாது காப்பாக உடையது.

ஏழு—பல. ஐம்பொறி யடக்கமே துன்பம் அணுகா மைக்குக் காரணமாகும். காணவேண்டும், கேட்கவேண் டும், சுவைக்கவேண்டும், துய்க்கவேண்டும் என்னும் விருப் பமே துன்பத்திற்குக் காரணமாதலை யறிக.

பரி : ஆமைபோல் ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின்- ஆமைபோல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறி களையும் அடக்க வல்லனாயின், எழுமையும் ஏமாப்பு உடைத்து - அவ்வன்மை அவனுக்கு எழுபிறப்பின் கண்ணும் அரணாதலையுடைத்து. ஒருமைக்கட் செய்த வினையின் பயன் எழுமையும் தொடரு மென்பது இதனானறிக.'

ஒருமை என்பதை ஒன்றெனக் கொள்ளாது ஒரு பிறப் பெனக் கொண்டதே தவறு. 'ஒருமை மகளிர்' (973) என் பதற்கு இவர் ஒன்று என்றே பொருளெழுதி யுள்ளார். ஒரு பிறப்பில் செய்த வினையின் பயன் எழுபிறப்பிலும் தொடரு மென்பது சமயக் கருத்தாகும். ஒரு பிறப்பில் ஐந்தடக்கினால் அவனுக்குத்தான் பிறப்பில்லையே; அவ்வளவு வருந்திப் பொறிகளை யடக்கியும் பிறப்பறுமல் பின்னும் எழுபிறப் புண் டெனில், ஒருவன் எதற்காக ஐம்பொறி யடக்கவேண்டும் ? அவ்வடக்கம் எழுபிறப்பின் கண்ணும் அவனுக்கு எதற்கு அரணாதலை யுடைத்து? எழுபிறப்பின்கண் என்பதும் பொருந்தா உரையே யாகும்.

மேலும், வள்ளுவர் மக்களுக்குக் கூறுவதையெல்லாம் இவர் மக்களுக்குக் கொள்ளாமல் மக்களுயிர்க்குக் கொண் டதே முதல் தவறாகும். வள்ளுவர் உயிரைப்பற்றி எங்கும். யாதும் கூறவில்லை. உடலினின்று உயிரென்பதைத் தனி யாகப் பிரித்து, அது வினை செய்வதாகவும், அவ்வினைப்பய னைப் பல உடலெடுத்து (பிறவி) அது அநுபவிப்பதாக வும் கூறுவதெல்லாம் சமயக் கருத்துக்களே யாகும்.

**6 தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும்.** (202)

தீச்செயல்கள் தீமை தருவதனுல் அத் தீச்செயல்களைத் தீயைவிட மிகுதியாக அஞ்ச வேண்டும்.

பரி: 'தீயவை-தீவினைகள். பிறிதொரு காலத்தும், பிறிதொரு தேயத்தும், பிறிதொருடம்பினும் சென்று சுடுதல் தீக்கின்மையின், தீயினு மஞ்சப்படுவதாயிற்று.,

இதனுல், ஒருவன் செய்த வினை அடுத்த பிறப்பில் அவ்வுயிர் வேறு எந்த நாட்டில் பிறந்தாலும், எந்த உடம் பெடுத்தாலும் சென்று பயன் நுகரும்படி செய்யும் என்பதாயிற்று. தீயவை-தீய செயல்கள் அல்லாமல், உயிரொடு தொடரும் தீவினைகள் அல்ல.

7. இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனுகும் மற்றும் பெயர்த்து. (205)

ஒருவன் யான் எளியவன் என்று எண்ணி அவ் வெளிமை தீர்தற் பொருட்டுப் பிறர்க்குத் தீமைகளைச் செய்யாதிருக்கக் கடவன்; செய்தால் மீட்டும் எளியவனுவான். மீட்டும் எளியனுதல்-பொருளாலன்றி நற்குண நற்செய்கையாலும் எளியனுதல். வறுமையைப் போக்கி கொள்ளவும் பிறர்க்குத் தீமை செய்யக் கூடாது.

பரி :'தீயவை - தீவினைகள். அத் தீவினையாற்பிறவிதோறும் இலனும் என்பதாம். தீவினை பிறவிதோறும் தொடரு மென்பது கருத்து.'

8. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்ட லரிது. (227)

பாத்து ஊண் மரீ இயவனை - பங்கிட்டு உண்ணுதலைப் பழகினவனை, பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது - பசி என்னும் தீய நோய் தீண்டுதல் இல்லை. பகுத்துண்பவனுக்குப் பலரும் உதவுவராகையால் பசிநோய் வருத்துவதில்லை.

பரி : 'இவ்வுடம்பினின்று ஞான வொழுக்கங்களை அழித்து, அதனால் வருமுடம்புகட்கும் துன்பஞ் செய்தலின், தீப்பிணி எனப்பட்டது.'

பசி அறிவொழுக்கங்களைப் போக்கும். அறிவொழுக்க மின்மையால் பிறப்புண்டாகும். அப்பிறவியால் உயிர் துன்புறுதலின், அப்பிறப்பினும் பசியென்னும் கொடிய நோய் துன்பம் செய்யும் என்பதாம். இவர் பிறவியை விட்டபாடில்லை பாவம்! இஃது வலிந்து புகுத்துதலே. பங்கிட் டுண்பவனைப் பசி வருத்தாது என்பதே நேர் பொருள்.

9. பொருள்நீங்கிப் பொச்சாந்தா ரென்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். (246)

அருள் நீங்கி அல்லவை செய்தொழுகுவார் - தம் மனத்திருந்த அருள் நீங்கித் தகுதியில்லாதவற்றைச் செய் தொழுகுவாரை, பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர்- அறத்தையும் இழந்து தம் கடமையையும் மறந்தவர் என்பர் உலகோர்.

அல்லவை - கொடுமைகள். பொச்சாத்தல் - மறத்தல். அருளின்றிக் கொடுமை செய்வோர், துறவறத்தையும் கடமையையும் இழந்தவராவர்.

பரி : 'அருள் நீங்கி அல்லவைசெய்து ஒழுகுவார் - உயிர்கள் மாட்டுச் செய்யப்படும் அருளைத் தவிர்ந்து தவிரப் படும் கொடுமைகளைச் செய்தொழுகுவாரை, பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் - முன்னும் உறுதிப் பொருளைச் செய்யாது தாந் துன்புறுகின்றமையை மறந்தவரென்று சொல்லுவர் நல்லோர். உறுதிப் பொருள் - அறம். துன்புறுதல் - பிறவித்துன்பம் மூன் றனையும் அனுபவித்தல்.'

முன்னும் – முற்பிறப்பில். தாந் துன்புறுகின்றமையை மறந்தவர் - மறுபிறப்பில் துன்புறுகின்றமையை முற்பிறப்பில் மறந்தவர். அறஞ் செய்யாவிட்டால் மறுபிறப்பில் துன்புறுவோ மென்பதை முற்பிறப்பில் மறந்து அறஞ் செய்யாதவரே இப்பிறப்பில் அருளில்லாது கொடுமை செய்கிறுர் என்பதாம். இப்போது கொடுமை செய்வாரை, அடுத்த பிறப்பில் துன்புறுவோமென்பதை மறந்து முற்பிறப்பில் அறஞ்செய்யாதவர் என்பர் நல்லோர் என்பது கருத்து. இதனுற் பயனின்மையால் இது போலியுரையாகும். கொடுமை செய்வோர் பயனடையார் என்பதே நேர் கருத்தாகும்.

**10. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. (266)**

தவம் செய்வார் தம் கருமஞ் செய்வார் - தவம் செய்பவரே தம் தொழிலைச் செய்பவராவர், மற்று அல்லார் ஆசையுள் பட்டு அவம் செய்வார் - அவரை யொழிந்தார் ஆசையில் சிக்குண்டு பயனில்லாதவற்றைச் செய்பவராவர்.

ஆசையுள் பட்டு அவம் செய்வார் -துறந்தும் மனத்தை யடக்கி நோன்பு நோற்காமல், பழைய ஆசையால் துறவு நிலைக்கு ஏலாதவற்றைச் செய்து காலத்தை வீணுகக் கழிப்பவர்.

பரி: 'மற்று அல்லார் ஆசையுள் பட்டு அவஞ்செய்வார்- அவரை யொழிந்த பொருளின்பங்களைச் செய்வார் அவற்றின்கண் ஆசையாகிய வலையுட்பட்டுத் தமக்குக் கேடு செய்வார்.'

இது முப்பாலில் இருபாலையே பழிப்பதாக வுள்ளது. இன்பம் அறத்தின் ஒரு கூருன இல்லறத்தைச் சேர்ந்த தாகையால், முப்பாலையுமே பழிக்கின்றது. தவம் - மன

வடக்கத்தோடு, ஊணுறக்கங் குறைத்து, உயிர்க்கு வருந் துன்பத்தைப் பொறுத்து நோன்பு நோற்றல். அதைச் செய்யாது பழைய ஆசையுட்பட்டுத் துறவுக்கு ஏலாதவற்றைச் செய்தலேயாகும்.

> 'அநித்தியமாய் மூவகைத் துன்பத்ததாய் உயிரின் வேருய உடற்கு வருத்தம் வருமென் ருெழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப் பிணிமூப் பிறப்புக்களான் அநாதியாகத் துன்பமெய்தி வருகின்ற உயிர் ஞானம் பிறந்து வீடு பெறுமாகலின், தவஞ் செய்வாரைத் தங்கருமஞ் செய்வார் என்றும், கணத்து ளழிவதாய சிற்றின்பத்தின் பொருட்டுப் பலபிறவியுந் துன்புறத் தக்க பாவஞ் செய்து கோடலின், அல்லாதாரை அவஞ் செய்வா ரென்றுங்கூ றினர்.'

அநித்தியம் - நிலையற்றது. அநாதி - பழமை, முன். மூவகைத்துன்பம் - தன்னைப்பற்றியும், பிறவுயிர்களைப் பற்றியும், தெய்வத்தைப்பற்றியும் வருவன. ஊணுறக்கங் குறைத்தலால் தவத்தால் உயிர் வருந்துகிறது, உடல் வருந்துகிறது என்பதே தப்பு. உயிரொடு கூடிய உடல் தான் வருந்துகிறது. உயிர் தனித்துத் துன்பமெய்துகிற தென்பது பொருந்தாக் கூற்றேயாகும். பாவம் பல பிறவியைத் தருகிற தென்பதும், அல்லாதார் - இல்லறத்தார் என்று கூறி, அவர் பல பிறவியும் துன்புறத்தக்க பாவஞ் செய்து கொள்கிறுர் என்பதும் இல்லறத்தை இழித்துக் கூறுதலேயாகும்.

11. **அளவின்கண் நின்ருெழுக லாற்ருர் களவின்கண்**
**கன் றிய காத லவர்.** (286)

அளவு - வரையறை செய்யப்பட்ட ஒழுக்கம், நேர்மை. பிறர் பொருள்மேல் ஆசையுள்ளவர் நேர்மையாய் நடந்து கொள்ளமாட்டார் .

**பரி:** '**அளவின்கண் நின்றெழுக லாற்ருர்**-உயிர் முதலிய வற்றை அளத்தலாகிய நெறியின்கண் நின்று அதற் கேற்ப ஒழுகமாட்டார்.

**உயிர் முதலியவற்றை அளத்தலாவது** - காட்சி முதலாகச் சொல்லப்பட்ட அளவைகளான் உயிர்ப் பொருளையும், அதற்கு அநாதியாய் வருகின்ற நல்வினை தீவினைக் குற்ற விளைவுகளையும், அவற்ருன் அது (உயிர்) நாற்கதியுட் பிறந்திறந்து வருதலையும், அது செய்யாமல் அவற்றைக் கெடுத்தற் குபாயமாகிய யோக ஞானங்களையும், அவற்ருன் எய்தும் வீட்டினை யும் அளந்து உள்ளவாறறிதல்.'

அளவு என்பதற்குக் காட்சியளவு, ஆகமவளவு கருத் தளவு எனப் பொருள் கொண்டதே இவ்விடர்ப்பாட் டுக்குக் காரணம். அநாதியாய்-தொன்றுதொட்டு. நாற்கதி- தேவகதி, மக்கள்கதி, நரகர்கதி, விலங்குகதி. கதி-பிறப்பு. காட்சி-கண்ணுல் காண்பது. ஆகமம்-நூல். கருத்தளவு- எண்ணியறிதல். நல்வினை தீவினைகளால் உயிர் பல பிறப் பெடுக்கிறது. யோக ஞானங்களால் உயிர் வீடெய்தும் என்பது. இது பிறப்பினை வலிந்து புகுத்தியதாகும்.

12. **கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா வுயிருந் தொழும்.** (260)

ஒருயிரையும் கொல்லாதவனுகிப் புலாலையும் உண்ணு தவனை எல்லா உயிர்களும் கை குவித்துத் தொழும்.

அருட் பெருக்கினுல் உயிர்களிடத்து அன்புடன் நடந்து கொள்ளும் அறவோனிடம் உயிர்கள் அச்சமின்றி அரு கணைந்து அன்புடன் அளவளாவி வாழும். இதையே நயம்படக் கை கூப்பித் தொழும் என்ருர்.

பரி: 'இப் பேரருளுடையான் மறுமைக்கண் தேவரின் மிக்கானும் என அப்பயனது பெருமை கூறியவாறு.'

இது, 'மற்றொன்று விரித்தல்' என்னும் குற்றத்தின் பாற்படும். இப்போது கொள்ளவேண்டிய அருட் சிறப்பைக் கூறினரேயன்றி மறுமையைப்பற்றி யன்று. இங்கு உயிரென்றது மக்களல்லாத மற்ற உயிர்களை.

13. **பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்**
**செம்பொருள் காண்ப தறிவு.** (358)

பிறப்பு என்னும் பேதைமை நீங்க - பிறவி என்னும் அறியாமை நீங்க, சிறப்பு என்னும் செம்பொருள் காண்பது அறிவு-சிறப்பு என்னும் உண்மைப் பொருளைக் காண்பதே அறிவாகும்.

பிறப்பு என்னும் பேதைமை-ஒருவன் பிறக்கும் போதே உடன்பிறந்த அறியாமை. பிறக்கும்போதே உடன்பிறந்த அறியாமை நீங்கச் சிறந்த உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு.

பரி: 'பிறப்பு என்னும் பேதைமை நீங்க-பிறப்பிற்கு முதற் காரணமாய் அவிச்சை கெட, சிறப்பு என்னும் செம் பொருள் காண்பது அறிவு-வீட்டிற்கு நிமித்தகாரண மாய செவ்விய பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது.'

நிமித்தகாரணம் - துணைக்காரணம். அவிச்சை - அறியாமை. அறியாமையால் பிறப்பு உண்டாகுமென்பது சமயக்கருத்தாகும். உண்மை யுணர்வினுல் வீடெய்து மென்பதுமஃதே.

'உயிர் உடம்பி னீங்குங் காலத்து அதனுல்(உயிர்) யாதொன்று பாவிக்கப்பட்டது (எண்ணப்பட்டது)

அஃது அதுவாய்த் தோன்றுமென்பது எல்லா ஆகமங் கட்குந் துணிபாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத் துப் பிறப்பிற்கேதுவாய பாவனை கெடுதற் பொருட்டுக் கேவலப் பொருளையே பாவித்தல் வேண்டுதலான்.'

உயிர் அப் பாவிக்கப்பட்ட பொருளாகப் பிறக்கும். ஆகையால், உயிர் போகும்போது, உயிர் ஒன்றுமற்ற தனிமையையே நினைக்கவேண்டும். உயிர் அவ்வாறு பிறத்தல் என்பது ஒருவர் கொள்கையே. அறியாமை சிறிது மின்றி உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு என்பதே கருத்தாகும்.

14. ஒருமைக்கட் டாங்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து. (398)

ஒருவற்கு ஒருமைக்கண் தான் கற்ற கல்வி - ஒருவ னுக்கு ஓரிடத்தில் தான் கற்ற கல்வியானது, எழுமையும் ஏமாப்பு உடைத்து-பல இடங்களிலும் சென்று உதவுதலை யுடைத்து.

ஒருமை-ஒன்று. எழுமை-பல. ஒருவன் ஓரிடத்தில் இருந்து கற்கிறான். அவன் கல்வியறிவு பல இடங்களிலும் பரவி அவனைச் சிறப்பிக்கிறது. அவனது கல்வியறிவுக் காக அவனை நாடெங்கும் போற்றுகிறது. 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' என்பது காண்க.

பரி: 'ஒருவற்கு-ஒருவனுக்கு, தான் ஒருமைக்கண் கற்ற கல்வி- தான் ஒரு பிறப்பின்கண் கற்ற கல்வி, எழுமை யும் ஏமாப்பு உடைத்து-எழுபிறப்பினும் சென்று உதவுதலை யடைத்து.'

அப்போது ஒரு பிறப்பில் கல்லாதவரெல்லாம் எப்படிக் கற்கமுடியும்? கற்றவர் தான் கற்பது, கல்லாதவர் கல்லா மலேயே இருப்பதா? நம் நாட்டுச் சக்கிலியரும், நாடோடி

களும் முற்பிறப்பில் அத்தனைபேரும் கல்லாதவரா? கல்விக்காகச் செய்யும் முயற்சிகளெல்லாம் பயனின் முயற்சிகள் தானே? ஞானப்பாலுண்டும், கலைமகள், காளி முதலியோர் அருள் பெற்றுந்தானே கல்வியறிவு பெற்றதாகக் கூறப் பட்டுள்ளதே யன்றி, யாராவதொருவர் கல்லாமல் கல்வி யறிவு பெற்றதாக உண்டா? இத்தகைய புராணக்கதை கூட உள்ளதாகத் தெரியவில்லை. எனவே, இது போலி யுரையே யாகும்.

ஒருமை, எழுமை என்பன பிறப்பினைக் குறியா. மேலும், 'வினைகள் போல உயிரின்கட் கிடந்து அது புக்குழிப் புகுமாகலின் எழுமையும் ஏமாப்புடைத் தென்ருர்' என்கிருர். வினை உயிரைத் தொடர்ந்து செல் வதுபோல் கல்வியும் உயிருடன் தொடருமென்பது 'கல்வி' என்னும் அதிகாரத்திற்கே முரண்பட்டதாகும். அவ்வாறு ஒருமைக்கண் கற்ற கல்வி எழுபிறப்பிற்குப் பயன்படு மாயின், எல்லோரும் படிக்கவேண்டியதில்லையே. எல் லாப் பிள்ளைகளும் படித்தே தெரிந்துகொள்ளுதலும், படியாமல் யாரும் எழுத்தறிவுகூடப் பெருமையும் முரணுக வன்ருே உள்ளன? வினை உயிரைத் தொடருமென்பதே கற்பனை. இது கற்பனையில் கற்பனை !

15. ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்து மளறு. (835)

பேதை - அறிவில்லாதவன், எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு-ஏழிடங்களில் தான் புகுந்து அழுந்திக் கிடக்கும் பெருந்துன்பத்தை, ஒருமைச் செயல் ஆற்றும் - ஓரிடத்திலேயே செய்து கொள்ள வல்லவனுவான்.

ஒருமை - ஒன்று. எழுமை - பல. அளறு - பெருந் துன்பம். அறிவிலான் பல இடங்களில் படுந்துன்பத்தை

ஓரிடத்திலேயே படுவான் என்பதாம். தகாதன செய்து பெருந்துன்பத்தைத் தேடிக் கொள்வான்.

பரி. 'பேதை, எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு-வரும் பிறவிகளிளெல்லாம் தான் புக்கழுந்தும் நிரயத் திணை, ஒருமைச் செயல் ஆற்றும்-இவ் வொரு பிறப் புள்ளே செய்துகொள்ள வல்லனும்.'

நிரயம்-நரகம். நரகம் என்பது பாச்சி பாச்சி என அழும் சேய்க்குப் பூச்சி பூச்சி என்பதுபோன்ற அச்சுறுத் தும் செயலாகும். நரகவுலகம் என்று தனியாக ஒன்றில்லை. பெருந்துன்பத்தின் கற்பனையே நரகம் என்பது. சொற் பொருள் விளக்கத்தில் காண்க.

துறவறவியல் : துறவறம் என்பது இல்லறம் இனிது நடத்தி ஒழுக்கத்து நீத்தார் ஒழுகும் ஒழுக்கம். இல்லற இன்பத்தைத் துறந்து தம் இல்லிருந்தே பொதுநலம் புரிவதும் துறவறமே யாகும்.

•

பரி : 'துறவறமாவது-மேற்கூறிய இல்லறத்தின் வழுவா தொழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை யஞ்சி வீடு பேற்றின் பொருட்டுத் துறந்தார்க்குரிய அறம்'

பிறப்பினை யஞ்சி வீடு பேற்றின் பொருட்டென்பது குறட் கொள்கையன்று. மேலும், 'விரதங்களாவன - இன்ன அறஞ் செய்வலெனவும், இன்ன பாவம் ஒழிவ லெனவும் தம் ஆற்றலுக்கேற்ப வரைந்து கொள்வன' என்கிறார். வேண்டுமென்றே பாவம் செய்வதும், அதற் குக் கழுவாய் (பிராயச்சித்தம்) செய்வதும் ஆரியக் கொள்கையேயாகும். விரதம் என்பது-மனவடக்கத்தின் பொருட்டு உண்டி சுருங்கல், துன்பம் பொறுத்தல் முதலி யனவே யாகும்.

## 3. வீடு

ஒருவன் இறந்த பின்னர் அவன் உயிர் அடையும் பல இடங்களில் வீடும் ஒன்ருகும். மற்ற இடங்களை அடைந்த உயிர், தான் செய்த நல்வினை தீர்ந்ததும் மறுபடியும் பழையபடி இவ்வுலகில் பிறக்கும். வீடு என்பது பிறவா நிலையாகும். வீடடைந்த உயிர் மீண்டும் பிறப்பதில்லை என்னும் சமய நூற்கள்.

உரைப்பாயிரத்தில், 'அந்தமில் இன்பத்து அழிவில் வீடும்' என வலிந்து புகுத்துகிருர். இது பற்றி அங்கே விளக்கியுள்ளாம்.

1. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு. (791)

நட்டபின் வீடு இல்லை-ஒருவனோடு நட்புச் செய்தபின் அவனை விடமுடியாது.

வீடு-விடுதல். முதனிலை திரிந்த தொழிற்பெயர். திருக்குறளில் வீடு என்னும் சொல் இந்த ஒரே இடத்தில் தான் வந்துள்ளது. உயிர் பிறப்பற்று வாழும் பொருளுடைய வீடு என்னும் சொல் எங்கும் வரவில்லை. இதற்குப் பரிமேலழகரும் 'நட்டபின் வீடு இல்லை-ஒருவனோடு நட்புச் செய்தபின் அவனை விடுதல் உண்டாகாது' என்றே பொருளெழுதியுள்ளார். இனி இவர் வலிந்து புகுத்தும் இடங்கள் வருமாறு.

2. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. (23)

இருமை வகை தெரிந்து-நன்மை தீமைகளின் பாகுபாடுகளை நன்கு அறிந்து, ஈண்டு அறம் பூண்டார் பெருமை-மிக்க அறத்தைக் கைக்கொண்டவர் பெரு

மையே, உலகு பிறங்கிற்று-உலகின்கண் உயர்ந்தது. ஈண்டுதல்-மிகுதல். ஈண்டறம்-வினைத்தொகை.

பரி: 'இருமை வகை தெரிந்து-பிறப்பு வீடு என்னும் இரண்டனது இன்பதுன்பக் கூறுபாடுகளை ஆராய்ந் தறிந்து, ஈண்டு அறம் பூண்டார் பெருமை-அப்பிறப் பறுத்தற்கு இப்பிறப்பின்கண் துறவறத்தைப் பூண்டா ரது பெருமையே, உலகு பிறங்கிற்று-உலகின்கண் உயர்ந்தது.'

ஒருவன் தனது பிறப்பை யறுத்து வீடு பெறச் செய் யும் முயற்சி 'உலகின்கண் உயர்ந்தது' என்பது பொருந் தாக் கூற்ருகும். அது தமிழர் துறவற நிலையன்று. நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து, பிற வுயிர்கட்கு நன்மையே செய்யும் பெரியோரை உலகத்தார் பெருமைப் படுத்துவர் என்பதே நேர் பொருளாகும்.

3. உரனென்னும் தோட்டியால் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. (24)

உரன் என்னும் தோட்டியால்-அறிவு என்னும் குத் துக்கோலால், ஓர் ஐந்தும் காப்பான் - பொறிகளாகிய யானைகள் ஐந்தனையும் புலன்கள்மேல் செல்லாமல் காப்ப வன், வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து-துறவறம் என்னும் சிறந்த நிலத்திற்கு ஒப்பற்ற விதையாவான்.

வரம்-சிறந்தது. ஐம்பொறி யடக்கத்தின் வளர்ச் சியே துறவறமாகும். பொறியடக்கமுள்ளவன் துறவறத் தில் நிலைத்து நிற்பதால் வித்தென்ருர்.

பரி: 'வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து-எல்லா நிலத் தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத் திற்கு ஓர் வித்தாம். அந்நிலத்தில் சென்று முளைத்த

லின் வித்தென்றார். ஈண்டுப் பிறந்திறந்துவரும் மக னல்லன் என்பதாம்.'

புலனடக்கம் உடையோர் உறுதியாக வீடு பெறுவர் என்பது கருத்து. புலனடக்க முடையவரே துறவறத்திற்கு ஏற்றவராவர்; புலனடக்கமே துறவறத்திற்குச் சிறந்த உறுப்பாகும் எனப் புலனடக்கத்தின் சிறப்புக் கூறினாரே யன்றி, வீட்டைப் பற்றிய பேச்சிங்கில்லை. புலனடக்க முடையோரே துறவறத்தில் நிலைத்து நிற்க முடியுமென்பது கருத்து.

4. **நல்லா றெனினும் கொளல்தீது மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று.** (222)

கொளல் நல் ஆறு எனினும் தீது-ஒருவனிட மிருந்து ஒரு பொருளைக் கொள்ளுதல் நல்லவழி என்றாலும் அது தீதாகும், மேலுலகம் இல் எனினும் ஈதல் நன்று-கொடுத்தால் மேலுலகில் மதிப்பு இல்லை என்றாலும் கொடுத்தல் நல்லது.

மேலுலகம்-அயல்நாடு. வடபுலத்தாரில் காண்க. கொடுத்தால் அயல்நாடர் மதியார் எனினும் கொடுத்தல் நன்று என ஈகையின் சிறப்புக் கூறினார்.

பரி: கொளல் நல்லாறு எனினும் தீது-ஏற்றல் வீட்டுல கிற்கு நல்ல நெறி யென்பார் உளராயினும் அது தீது, மேலுலகம் இல் எனினும் ஈதலே நன்று-ஈந்தார்க்கு அவ்வுல கெய்துதல் இல்லையென்பார் உளராயினும் ஈதலே நன்று.

கொடையாளர்க்கு வீடு உண்டென்பது, யோக ஞானங்களால் வீடெய்துதல் என்பதற்கு முரணானதாகும். மேலுகம் என்பதை வீட்டுலகம் என்பது பொருத்த

மன்று. நல்லவழி, கெட்டவழி என்பது போல 'நல்லாறு' என்பது நல்லவழி என்னும் பொருளதே.

5. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு. (247)

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு - பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்பம் இல்லையானாற் போல, அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை-உயிர்களிடத்தில் அருள் இல்லாதவர்க்கு மறுமை இன்பம் இல்லை.

பொருள்-இடம் பொருள் ஏவல் முதலிய செல்வப் பொருள். இவ்வுலகம்-உயிர் வாழும் இன்றைய உலகத்தையும், அவ்வுலகம் - இறந்தபின்னுள்ள மறுமையான அன்றைய உலகத்தையும் குறிக்கும். மறுமை - நாம் இறந்தபின் நம்மைப்பற்றி இங்கு பேசப்படுவது. வள்ளுவர் மறுமையில் உள்ளார். இவ்வுலகம் இல்லறத்தையும், அவ்வுலகம் துவறத்தையும் எனினுமாம்.

பரி : 'அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை-உயிர்கள் மேல் அருள் இல்லாதார்க்கு வீட்டுலகத் தின்பமில்லை.'

இன்ப துன்ப மற்றதன்றோ வீடு ? வீட்டுலகத் தின்பமென்பது பொருந்தாது.

6. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். (364)

தூய்மை என்பது அவாஇன்மை - தூய்மை என்று சொல்வது அவாவில்லாமை, மற்றது வாய்மை வேண்ட வரும்-அவ் வவாவின்மையானது உண்மையை விரும்ப வரும்.

தூய்மை-மனத்தூய்மை. உண்மையை விரும்பினால் அவாவறும். அவாவற்றால் மனத்தூய்மை உண்டாகும்.

பரி : தூய்மை என்பது அவாவின்மை - ஒருவர்க்கு வீடென்று சொல்லப்படுவது அவாவில்லாமை, அது வாய்மை வேண்ட வரும் - அவ் வவாவில்லாமைதான் மெய்ம்மையை வேண்டத்தானே யுண்டாம்.

வீடாவது-உயிர், அவிச்சை முதலிய மாசு நீங்குத லாகலின், அதனைத் தூய்மை யென்னும்.

அவிச்சை முதலிய மாசு நீங்கினர் வீடடைவர் என் பதேயன்றி, மாசு நீங்குதலால் வீடென்பது பொருந்தாது. அவாவறுதல் மனத்தூய்மை என்பதே நேர் பொருளாகும்.

**7. ஆரா வியற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா வியற்கை தரும்.** (370)

ஆரா இயற்கை அவா நீப்பின் - நிரம்பாத இயல் புடைய அவாவை ஒருவன் நீக்குவானாயின், அந்நிலையே பேரா இயற்கை தரும் - அப்போதே அவனுக்கு அது அசையாத தன்மைக்யைக் கொடுக்கும்.

நிரம்பாமை - போதுமென்னும் முடிவில்லாமை. பேரா-பேராத - உறுதியான. அசையாததன்மை - மீண் டும் பொருளின்மேல் பற்றுண்டாகாத தன்மை. ஆசை முழுவதும் நீங்குவதே உண்மைத் துறவாகும்.

பரி : 'களிப்புக் கவற்சிகளும் பிறப்புப் பிணி மூப் பிறப்புக்க ளும் முதலாயின வின்றி, உயிர் நிரதிசய வின்பத்தாய் நிற்றலின், வீட்டினைப் பேராவியற்கை என்றும்.'

மீண்டும் பொருள்களின்மேல் பற்றுண்டாகாத தன் மையே அவா நீக்கத்தால் உண்டாவதால் இது பொருந்தா உரையே.

## 4. ஆராய்ச்சி

வினை, பிறப்பு, வீடு என்னும் இவை மூன்றும் சமயச் சார்புடைச் சொற்கள். இவை ஒன்றையொன்று தொடர்புடையவை. ஒன்றுக்கொன்று காரணமானவை. ஒன்றை விட்டொன்று தனித்து நில்லாத் தன்மையவை.

1. **வினை :** அவற்றுள், வினையென்பது பிறப்புக்குக் காரணமானது. ஒருவன் செய்த வினை அவன் உயிரோடு தொடர்ந்து சென்று, அவ்வுயிர் எடுக்கும் பல பிறப்புக்களிலும் தன் பயனை நுகர்விக்கும். இது **தொடர்வினை** எனப் படும். ஒருவன் ஒரு பிறப்பில் செய்த வினைப்பயனைப் பல பிறப்புக்களில் நுகர்ந்து மிஞ்சிய வினை **மிச்சவினை** எனப் படும். ஒரு பிறப்பில் அறிவு வந்தபிறகு ஒருவன் புதிதாகத் தேடிக்கொள்ளும் வினை **நிகழ்வினை** எனப்படும். இம் மூவினையையும் வடநூலார் முறையே **பிராரத்தம், சஞ்சிதம், ஆகாமியம்** என்பர். தொடர்வினை உயிர் வீடு பெற்றால்தான் தீரும்.

இம்மூவினையும் நல்வினை, தீவினை என இருவகைப் படும். நல்வினையால் நல்ல பிறப்பும், தீவினையால் தீய பிறப்பும் உண்டாகும், நல்வினை செய்த உயிர் துறக்க முதலிய உயர் பதவிகளை அடைந்து இன்புறும். தீவினை செய்த உயிர் நரகத்தை யடைந்து துன்புறும். நல்வினை-புண்ணியம் எனவும், தீவினை-பாவம் எனவும் வழங்கும். இப் புண்ணிய பாவப் பயனுகர்வோரே செல்வரும் வறியரும் என்னும் சமய நூல்கள். திருக்குறளில் இத்தகைய வினை யொன்றும் கூறப்படவில்லை. பரிமேலழகர் வேண்டுமென்றே வலிந்து புகுத்துவதேயாகும்.

உயிர் தான்செய்த வினைக்கீடாகப் பல பிறப்பெடுக்கிறது. வினைப்படி உயிர்கள் பிறக்கின்றன. மரஞ் செடி கொடிகள், ஊர்வன, நீர்வாழ்வன, பறவைகள், விலங்கு

கள், மக்கள், தேவர் எனப் பிறப்பு எழுவகைப்படும். இன்னின்ன செய்தால் உயிர் பிறப்பற்று வீடுபெறும். நாம் பிறவா நிலையை யடைய முயலவேண்டும். அதுவே மக்கட் பிறப்பின் பயன் என்பனவெல்லாம் சமயக் கற்பனையே.

**உயிர் :** உயிர் என்பது ஓர் அழிவற்ற பொருள் என்பதே, காணுததைக் கண்டதாகக் கூறும் சமயக் கற்பனையாகும். உடலுக்குள் உயிர் உண்டு, உடலும் உயிரும் கூடி வாழ்கிறது, உயிர் பிரிந்தால் உடல் அழிந்துவிடும், உடல் கெட்டால் உயிர் பிரிந்துவிடும் என்பனவே ஒருவாறு நாம் அறிவதாகும். உடல் அழிந்தபின் உயிர் என்னுகிறது? உயிர் எத்தகையது ? அது ஒரு தனிப்பட்ட பொருளா ? என்பன வெல்லாம் நமக்கொன்றும் தெரியாது. இத்தகைய குறிப் பொன்றும் திருக்குறளில் இல்லை. இவை யெல்லாம் பிற்காலத்தில், ஆரியக் கொள்கையாலும், சமய மயக்கத்தாலும் ஏற்பட்டனவே யாகும். சமயப் படலம் படர்ந்த தற்காலத் தமிழர் கண்களுக்கு, பரிமேலழகர் உரை யென்னும் திரையிடப்பட்ட குறள் அவ்வாறுதான் தெரியும். அப்படலமும் திரையும் நீங்கினுல்தான் குறளின் உண்மைக் கருத்துத் தெற்றெனத் தெரியும்.

2. **பிறப்பு :** இனி ஒருவன் செய்த நல்லதும் கெட்டதும் செய்த உடலை விட்டு உயிரைத் தொடர்ந்து சென்று, அவ்வுயிர் எடுத்த உடல்தோறும் அதற்கு இன்பதுன்பங்களை யூட்டுகின்றன என்பதும், நல்வினையால் நல்ல பிறப்பும், தீவினையால் தீய பிறப்பும் உண்டாகின்றன என்பதும் அப்படியாகலாம் என்னும் எண்ணத்தால் கொண்டதே யாகும்.

நல்வினையால் நல்ல பிறப்பு உண்டாகுமெனின், மரங்கள் என்ன நல்வினை செய்கின்றன? மரஞ் செடி கொடிகள் நல்ல கனிகளும் காய்களும் பூக்களும் தவசங்களும்

தருகின்ற நல்வினை செய்கின்றன எனின், அவையெல்லாம் படைப்புக் காலத்திலிருந்து அத்தகைய நல்வினை செய்து அதனால் உயர்பிறப்படைந்து, அத்தகைய மரஞ்செடி கொடிகளெல்லாம் இப்போது இல்லாமலன்றோ இருக்க வேண்டும்? நனிமிகு பழங்காலத்திலிருந்த மாவும் பலாவும் வாழையும் கரும்பும் தென்னையும் பனையும் மல்லிகையும் முல்லையும் தாமரையும் குவளையும் நெல்லும் கம்பும் இன்றும் அப்படியேதானே இருக்கின்றன? அதிலும், எட்டி எருக்கிலை, ஆடுதின்னுப்பாளை முதலியவை என்ன புண்ணியம் செய்து அடுத்த பிறப்பான புழுவாய்ப் பிறக்கின்றன? அல்லது நன்மரங்களாய்ப் பிறக்கத்தான் அவை செய்யும் நல்வினைகள் என்ன?

இனி, புழுக்கள், கொசுக்கள், எறும்புகள் முதலியன என்ன நல்வினை செய்து நீர்வாழ்வனவாகிய மீன், நண்டு, தவளை, முதலைகளாகப் பிறக்கின்றன? முதலை செய்யும் நல்வினைதான் என்ன? பறவைகளில் எப்போதும் கோழிக் குஞ்சைப் பிடித்துக் கொன்றுதின்னும் பருந்து, புறுக் களைத் துடிக்கத் துடிக்க அடித்துக் கொன்று தின்னும் வல்லூறு, முயலடிக்கி, மீன்கொத்தி முதலியன என்ன புண்ணியம் செய்து விலங்குப் பிறப்பை யடைகின்றன? 'புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது' எனப் புலாலை யன்றி வேறொன்றையும் தின்னாத புலி, சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் என்ன புண்ணியம் செய்து மக்கட் பிறப்பை அடைகின்றன? அல்லது மாடாகவாவது பிறக்கின் றனவா? பூனை செய்யும் புண்ணியம் யாது? எலிதான் என்ன புண்ணியம் செய்கின்றது? பாம்பு, தேள், பரவு செய்யான் முதலிய நச்சுயிர்கள் செய்யும் நல்வினை என்ன? அவை எப்படி அடுத்த பிறப்பை அடைகின்றன? நல்வினை செய்யவேண்டும்; உயர் பிறப்பினை யடையவேண்டும் என்ற எண்ணம் அவற்றிற்கு உண்டாவதுண்டா? அல்லது

இயல்பாகவே செய்யும் வினைக்கீடாக உயர்பிறப்பினை யடைகின்றனவோ?

இனி, அம்மை, கக்கல்கழிச்சல், பெருவரிநோய், ஈளை யிருமல் முதலிய கொடிய நோய்களை யுண்டாக்கும் நச்சுப் புழுக்களும், மலப்புழுக்களும், காய்கனிச் செடிகள், நெற் பயிர் முதலியவற்றைத் தின்றழிக்கும் புழுப்பூச்சிகளும் தாம் செய்யும் தீவினைக் கீடாக எட்டி, எருக்கிலை, ஆடு தின்னாப்பாளை முதலியனவாகப் பிறக்கின்றன வெனில் அவை என்னவாகப் பிறக்கின்றன?

அன்றியும், மக்கட் பிறப்பிலிருந்து தேவப்பிறப்பெடுத் தால் அப்புறம் என்ன பிறப்பெடுப்பது? அதுதானே கடைப்பிறப்பு? தேவர்கள்தாம் நோய் நொடி இல் லாதவர், கவலையே இன்னதென்று அறியாதவர், வறுமை இல்லாதவர், எப்போதும் இன்புற்றிருப்பவர், அவ்வுலகமே இன்பவுலகம். ஆகையால், அத்தேவப் பிறப்பை யடைய மக்கள் பலவாறு, பலவகையில் முயலு கின்றனர். அது இயற்கையுங்கூட். ஆனால், தேவர்கள் எதற்காக வேறு பிறப்பெடுக்க முயலுகின்றனர்? அது தான் இன்பவுலக மாயிற்றே. தேவர்களுக்கும் இறப்புண் டெனில், அவர் எப்பிறப்பை அடைவர்? முறையாக அன்னார் மரஞ் செடி கொடிகளாகப் பிறப்பதுதானே இயல்பு? இல்லை, தேவர்களெல்லாம் அப்படியே வீட்டை யடைவர் எனின், எல்லா மக்களும் வீட்டையவே முய லாது ஒரு சிலர்மட்டும் எதற்காகத் தேவப்பிறப்படைய முயல வேண்டும்?

மரஞ்செடி கொடி புற் பூண்டுகள், புழுப்பூச்சிகள், நீர்வாழ்வன, பறவை, விலங்கு, மக்கள் என்பனவெல்லாம் வெவ்வெறு வகையான உயிர்வகைகளே யல்லாமல், ஒருயிர்

தான் செய்த வினைக்கேற்றவாறு இப்பிறவிகளை எடுக்கிறது என்பது அறியாக் கூற்றேயாகும்.

இதற்கு முன் இன்ன பிறப்பாக இருந்தோமென்று இதுவரை எந்த உயிர்க்கும் தெரியாதபோது, உயிர்கள் தம் வினைக்கீடாகப் பல பிறப்பெடுக்கின்றன என்பதைக் கண்டவர் யார்? அன்று அறிந்திருந்தனர் எனில், இன்று ஏன் அறிவதில்லை? அன்று கடவுள் நேரில் சொன்னார் எனில், இன்று ஏன் சொல்லாமல் மவுனியாய் இருக்கின்றார்? அவருக்கு நமது முன்னோர் செய்த நன்மை என்ன? நாம் செய்த தீமை என்ன?

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

(திருவாசகம்)

என்றது, சொன்னதைச் சொன்னதே யாகும்.

இதோடு விட்டார்களா? இன்று அரசியலார் எவ்வளவோ ஏற்பாடுகளுடன் மக்கட் கணக்கெடுக்கின்றனர். அப்படியிருந்தும் சரியான கணக்குக் கிடைப்பதில்லை. புழுப்பூச்சிகள், மரஞ்செடி கொடிகள், நீர்வாழ்வன இன்னின்ன வென்பது அறியமுடியாத தொன்றாக இருந்து வருகிறது. ஆனால்,

"ஊர்வ பதினொன்று மொன்பது மானுடம்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்துச்—சீரிய
பந்தமாம் தேவர் பதினான் கயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவர நாலைந்து"

(குறள் 62. பரி)

| | | நூருயிரம் |
|---|---|---|
| ஊர்வன | — | 11 |
| மக்கள் | — | 9 |
| நீர்வாழ்வன | — | 10 |
| பறப்பன | — | 10 |
| நடப்பன | — | 10 |
| தேவர் | — | 14 |
| தாவரம் | — | 20 |
| | | 84 |

என எழுவகைப் பிறப்பும் எண்பத்து நான்கு நூருயிரம் (லட்சம்) வடிவ வேற்றுமை யுள்ளன வென வரையறுத்துக் கூறியுள்ளார்.

3. **வீடு:** வீடு என்பது ஒருவன் இறந்தபின் அவன் உயிர் அடையும் இடங்களில் ஒன்றென்று கூறப்படுகிறது. ஒரு பிறப்பில் ஓர் உயிர் நல்வினை செய்தால் இந்திரன் முதலிய இறையவர் பதங்களில் ஒன்றை யடைந்து, அந் நல்வினைக் கேற்ப இன்புற்று அந் நல்வினை தீர்ந்ததும் மற்ருெரு பிறப்பை எடுக்கும். தீவினை செய்தால் நரகம் என்னும் இடத்தை அடைந்து, அத் தீவினைக் கேற்பத் துன்புற்று அத் தீவினை தீர்ந்ததும் மற்ருெரு பிறப்பை எடுக்கும். எழுவகைப் பிறப்பில் மக்கட்பிறப்பே சிறந்தது. மக்கட் பிறப்பெடுத்த ஒருவன், இல்லறத்தைத் துறந்து துறவறத்தையடைந்து யோகஞானங்க ளெய்தினுல் அவன் உயிர் பிறவா நிலையாகிய வீட்டுலகை அடையும் என்று சமய நூல்கள் கூறுகின்றன. இதை மக்கள் நம்புவதற்காக, இது கடவுளாற் சொல்லப்பட்டது. கடவுளை யறிந்து,

அவரோடு நேரில் பேசிக்கொண்டிருந்த பெரியோர்களால் நூல்களாகச் செய்யப்பட்டன என்றெல்லாம் எழுதி வைத்துள்ளனர்: வீடு என்பது உயிர் விடுதலை பெற்ற இடம், பிறவாது இருக்கும் இடம்.

உயிர்கள் தாம் செய்த தொடர்வினைப்படி பிறக்கின்றன வெனின், மாந்தரும் தொடர்வினைப்படி பிறக்கின்றனர், இறக்கின்றனர்; பிறவாநிலைக்குப் பாடுபடுவானேன்? மக்களல்லாத மற்றை யுயிர்கள் பிறவாநிலையடைய என்ன முயற்சி செய்கின்றன? மக்கட் பிறப்பிற்றான் அது கூடுமெனின், உலகில் பிறந்து இன்ப துன்ப நுகர்ந்து, வாழ்வதல்லாமல், பிறப்பிறப்பின்றிக் கூட்டுப் புழுப்போல எப்போதும் சோம்பேறியாய்ச் சும்மா இருப்பதால் அவ்வுயிர்க்கு என்ன நன்மை? கடவுளுக்குத்தான் தான் படைத்த உயிர் அப்படிச்சோம்பேறித்தனமாக ஒருபயனுமின்றிச் சும்மா இருப்பதால் நன்மை என்ன? அவ்வாறு சும்மா இருப்பதைத்தான் அவர் விரும்புவாரா? நட்ட செடி பூக்காமல் காய்க்காமல் இருந்தால்கூட நட்டவன் விரும்புவதில்லை. ஊன்றிய விதை அப்படியே எப்போதும் முளைக்காமல் இருக்க விரும்புவானா? ஒருபோதும் விரும்பான். தன்னால் படைக்கப்பட்ட உயிர் ஒருபயனும் இல்லாமல் சும்மா இருப்பதால் கடவுளுக்கும் அப்படித்தானே இருக்கும்?

உடலெடுக்காமல் பிறக்காமல் சும்மா இருக்கும் நிலையை உயிர் விரும்புமானால் அத்தகைய உயிரை அவர் ஏன் உடம்பெடுக்கும்படி செய்தார்? பலவாறு முயன்று, பல துன்பங்கள் பட்டு உயிர் பிறவா நிலையை அடையும்படிசெய்வதால் கடவுளுக் குண்டாகும் நன்மை என்ன? எல்லா உயிர்களையும் தானாகவே—அவை முயலாமலே பிறவா நிலையில் வைத்துவிட்டால் கடவுளுக் குண்டாகும்

கேடென்ன? அது கடவுட்டன்மைக்கு அடுக்காத—தகாத செயலா? உயிர்களைப் படைத்து பிறப்பறுப்பதற்காக அவற்றை அவ்வாறு படாதபாடு படும்படி அலையவைப் பதைவிட, அருள்வடிவமான கடவுள் அவ் வுயிர்களைப் படைக்காமலே இருந்திருப்பது மேலல்லவா? ஏதோ ஒரு காலத்தில் படைத்தார். அப்போது உயிர்கள் வீடு பெற முயலவில்லை. பின்னர்த்தான் அவை அம் முயற்சியிலே ஈடு பட்டன; அதற்காகப் பல இடர்ப்பாடுகள் எய்துகின்றன; அம் முயற்சிக்குத் துணைசெய்யும் உடம்பை வாட்டி வதைக் கின்றன எனின், கள்ளியை ஒழித்ததுபோல இப்போது அவற்றை அடியோடு ஒழித்து விடுவதோ, எல்லா உயிர்களையும் ஒரேயடியாய்ப் பிறவாநிலையில் வைத்துவிடு வதோ கடவுளுக்குப் பெருந்தன்மையாகு மல்லவா?

இனி, நல்ல செயல்கள் செய்துதான் உயிர் பிறப் பறுக்கவேண்டும் எனின், கடவுள் எல்லா உயிர்களையும் நல்லனவே செய்யும்படி படைத்தால் என்ன? திருட்டு புரட்டு, பொய் பித்தலாட்டம், வஞ்சகம் சூது, கொள்ளை கொலை, பொறாமை பொச்சாப்பு முதலிய கொடிய குணங் கள் அமையும்படி படைத்துவிட்டு, அக் குணங்களால் பிறப்பை யுண்டாக்கி உயிர்களைப் படாதபாடு படுத்துவ தால் கடவுளுக் குண்டாகும் நன்மை என்ன?

மனைவி மக்களை விட்டு, இல்லறத்தினீங்கி, துறவறத்தை அடைந்து, விரதங்களால் உடலை வருத்தி, யோக ஞானங்க ளெய்தி வீடு பெறுதல் என ஆண்களுக்குச் சொல்லப்படு கின்றதே யன்றிப் பெண்களுக்கு வீடு பேறு சொல்லப்பட வில்லை. 'மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை மூன்றை யும் வாக்குமன நோக்கவில்லை' என்றார் ஒரு பெரியார். 'பொன்னில மாதராசை' என்பது கைவல்யம். மூவாசை களில் பெண்ணாசை ஒன்று. அவ்வாசையை விட்டால்தான்

வீடு பேறு கிடைக்கும் என்று கூறப்படுகிறதே யன்றி, ஆண்களைத் துறந்து பெண்கள் வீடு பெறவேண்டுமென்று எந்த ஒரு சமய நூலிலும் கூறப்படவில்லை. பட்டினத்தார், அருணகிரியார் போன்ற பெரியார்கள் தங்கள் வீடு பேற்றிற்குத் தடையெனப் பெண்களை வாய்க்கு வந்தபடி திட்டு திட்டென்று திட்டியிருக்கிறார்களே யொழிய தங்கள் வீடு பேற்றுக்கு ஆண்கள் தடையென எந்த ஒரு பெண் மணியுங் கூறவில்லை. எந்த ஒரு சமயநூலுங் கூறவில்லை. உயிர்களிலும் ஆணுயிர் பெண்ணுயிர் என இருவகை யுண்டோ? அல்லது ஆணுடம் பெடுத்தால்தான் மனைவி மக்களைத் துறந்து யோக ஞானங்க ளெய்தி வீடு பெறமுடியுமோ? பெண்களுக்கு வீடு பேறே கிடையாதோ? யானை முகனால் கயிலாயத்தில் விடப்பட்டார் என்னும் ஔவையார் காட்டில் சென்று தவஞ் செய்ததாகவோ, வேறு நோன்புகள் நோற்றதாகவோ இல்லை. காரைக்காலம்மையார் யோக ஞானங்களாற் பேயுருக் கொண்டு கைலையை அடைந்ததாகவில்லை. ஆண்டாள்கூடச் சூடிக்கொடுத்தும் திருவரங்கத்தைத்தான் அடைய முடிந்தது.

•

இனி, மக்களை யன்றி மற்ற உயிர்கள் பிறந்தது முதல் இறக்கும்வரை ஒரே தன்மையாகத்தான் வாழ்ந்து வருகின்றன. காக்கை, புரு, சிட்டு, சிங்கம், புலி முதலிய உயிர்கள் இறக்கும்வரை ஆணும் பெண்ணும் ஒன்றாகவேதான் இருந்து வருகின்றன. சாகும்வரை புணர்ச்சியும் இனப்பேறும் நடந்து கொண்டேதான் இருக்கின்றன. அவ்வுயிர்கள் இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் பெறுவதில்லையா? இல்லையெனில், மக்களுயிர்க்கு மட்டும் அது என்ன அவ்வளவு இன்றியமையாதது? உயிர்கள் எல்லாம் ஒரே தன்மையுடையனவா, ஏற்றத்தாழ்வான வெவ்வேறு தன்மையுடையனவா?

இனி, உயிர்கள் எல்லாம் வீடு பெற்றே வருகின்றன என்று வைத்துக் கொள்வோம். உயிர்கள் மொத்தம் எத்தனை? உலகந் தோன்றியதிலிருந்து, அதாவது முதன் முதல் கடவுளால் படைக்கப்பட்டதிலிருந்து இதுவரை எத்தனை உயிர்கள் வீடு பெற்றுள்ளன? அவ்வாறு வீடு பெற்ற உயிர்க்கீடாக, உயிர்கள் குறையாமலிருக்க அவ்வப்போது கடவுள் புதுப்புது உயிர்களைப் படைத்துக் கொண்டே வருகிறாரா இல்லையா? இல்லையெனில், உயிர்கள் குறைந்திருப்பதற்கு மாறாக, அதிகமாகிக்கொண்டால்லவோ வருகின்றன? வீடு பெறுவதற் குரிமையுடைய மக்களை மட்டும் எடுத்துக்கொண்டால் ஆண்டுதோறும் கோடிக்கணக்காகப் பெருகிக் கொண்டல்லவோ வருகின்றன. படைத்துக்கொண்டே வருகிறார் எனில், புதிதாக உயிர்களைப் படைத்து அவற்றைப் பலவாறு துன்புற்று வீடடையச் செய்தல் வீண் வேலையன்றோ? புதிய உயிர்களைப் படையாமல் இருந்தால் கொஞ்ச காலத்தில் எல்லா உயிர்களும் வீடு பெற்றுவிட்டால், படைத்தல், காத்தல், அழித்தல் செய்யும் மும்மூர்த்திகளின் வேலையும், அதற்காக அவர்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சியும் இல்லாகுமல்லவா? முதற்கடவுளும் ஒரு தொல்லையும் இல்லாமல் சும்மா இருப்பதோடு, வீட்டுலகைப் பாதுகாக்கும் பொறுப்பும் இல்லாமலிருப்பாரல்லவா? உயிர்களைப் படைப்பதும், அவை பலபிறப் பெடுத்துழன்று முடிவில் யோக ஞானங்களெய்தி வீடு பெறும்படி செய்வதும் கடவுளுக்கு ஒருபொழுது போக்கு எனின், உயிர்களை அவ்வாறு அல்லலுறும்படி செய்தல் கடவுள் என்னும் பெயருக்கு ஏலாத இரக்க மற்ற தன்மையோடு, சிறுபிள்ளைத்தனமாகவுமன்றோ உள்ளது?

இவ்வளவு காலமாய் எத்தனை உயிர்கள் வீடு பெற்றுள்ளன? முதன்முதல் படைத்த உயிர்களில் இன்னும்

எத்தனை வீடு பெறுமல் உள்ளன? அவை யெல்லாம் வீடு பெற இன்னும் எத்தனை காலம் பிடிக்கும்? இப்போது மண்ணுலகம், வானுலகம், நரகவுலகம் ஒவ்வொன்றிலும் உள்ள உயிர்கள் எவ்வெத்தனை?

> ''நூறு கோடி பிர்மர்கள் நொங்கினர்
> ஆறு கோடிநா ராயணர் அங்ஙனே'' (சுந்தரர்)

என மும்மூர்த்திகளில் இருமூர்த்திகள் பிறப்புக் கணக்கை அறிந்து கூறினவர்க்கு இது தெரியாதா என்ன? இன்றியமையாத இக் கணக்கையேன் கூறவில்லை? இத்தகைய ஐயவினாக்கள் எழுமன்றோ?

வீடு பேறு என்பதும், வீடு என்பதும், அது 'சிந்தையு மொழியும் செல்லா நிலைமைத்து' என்பதும் கற்பனைப் பேச்சேயாகும். திருக்குறளுக்கும் வீட்டுக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை. வினை, பிறப்பு, வீடு, இந்திரன் முதலிய இறையவர் பதங்களை யடைதல், நரகத்தை யடைதல், பிறப்பறுத்தல், வீடு பெறுதல் என்பன வெல்லாம் ஒன்றுக் கொன்று முரணான விளங்காப் பேச்சுக்களே யன்றிப் பயனுடைய பேச்சல்ல. குறளுக்கும் இப்பேச்சுக்கும் எத்தகைய தொடர்புமில்லை. பரிமேலழகரின் வலிந்து புகுத்தலேயாகும்.

## 5. கடவுள்

திருக்குறள் மக்கள் வாழ்க்கைமுறை கூறும் நூலே யன்றிச் சமயக் கருத்துக்கள் எதுவும் குறளில் இல்லை. அவ்வாறே கடவுளைப் பற்றிய பேச்சும் திருக்குறளில் இல்லை. கடவுள் என்ற சொல்லே திருக்குறளில் வரவில்லை. திருக்குறளின் முதலதிகாரத்திற்குக் 'கடவுள் வாழ்த்து' எனப் பெயரிட்டதே உரையாசிரியர்களாவர். வள்ளுவர் ஓரதிகாரத்தில் வரும் சொல்லையோ, சொற்றொடரையோ

கொண்டே அவ் வதிகாரத்திற்குப் பெயரிட்டுள்ளனர். முதலதிகாரத்தில் கடவுள் என்னும் சொல் வரவில்லை. அம் முதலதிகாரம் கடவுள் வாழ்த்தொன்றுங் கூறவில்லை. மக்களின் உயர்ந்த குணங்களையே ஆண்பாலாகக் கொண்டு கூறியுள்ளார் வள்ளுவர். திருக்குறள் குழந்தையுரை நோக்கி யுணர்க.

பரிமேலழகர் முதலதிகாரத்திற்குக் கடவுள் வாழ்த்து எனப் பெயரிட்டதோடு நில்லாது, அம் முதலதிகாரம் ஆரியக் கடவுள்களான மும்மூர்த்திகளின் வாழ்த்தென வும் துணிந்து கூறுகிறார்.

'கடவுள் வாழ்த்து—கவி தான் வழிபடு கடவுளையா தல், எடுத்துக்கொண்ட பொருட்கு ஏற்புடைக் கடவுளை யாதல் வாழ்த்துதல். அவற்றுள் இவ் வாழ்த்து ஏற்புடைக் கடவுளை யென வறிக. என்னை? சத்துவ முதலிய குணங்க ளான் மூன்றாகிய உறுதிப் பொருட்கு, அவற்றான் மூவரா கிய முதற்கடவுளோடு இயையுண்டாகலான். அம் மூன்று பொருளையுங் கூறலுற்றார்க்கு அம் மூவரையும் வாழ்த்து தல் முறைமையாகலின், இவ் வாழ்த்து அம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரென வுணர்க.

வழிபடுகடவுள்-ஒருவன் நாடோறும் வழிபடுங் கடவுள். அதாவது அவனது சமயக் கடவுள். ஏற்புடைக் கடவுள்-நூலில் கூறும் பொருளுக் கேற்ற கடவுள். முக் குணம்-சத்துவம், இராசதம், தாமதம் என்பன. அக் குணங்களால் மூன்றாகிய உறுதிப் பொருள் - அறம் பொருள் இன்பம் என்பன. அவற்றான் மூவராகிய முதற் கடவுள்-அயன், அரி, அரன் என்பார். வள்ளுவர் இம் மூவர்க்கும் பொதுப்படக் கூறினாரெனக் கொண்டு அதற் கேற்பவே அவ் வதிகாரக் குறள்களுக்குப் பொருள் எழுதி யுள்ளார். வள்ளுவர் காலத் தமிழர்கள் இம் மும்மூர்த்தி

களைக் கடவுளாகக் கொள்ளவுமில்லை; வாழ்த்தி வழிபடவு மில்லை. இவர் ஆரியப் புராணக் கடவுள்களேயாவர். இவர்களைப் பற்றிய குறிப்பொன்றும் அப் பத்துக் குறளி லும் இல்லை. ஏன்? ஆயிரத்து முந்நூற்று முப்பது குறளி னுமே வராதிருக்க, அம் மூவரையும் வாழ்த்துவதாகக் கூறுதல் பொருந்தாவுரையே யாகும். சமயச் சார்பான, அம் முக்குணங்கட்கும் அறம் பொரு ளின்பங்கட்கும் என்ன தொடர்பு? இன்பத்தைத் தாமத குணத்தா லாகிய தென்பது சிறிதும் பொருந்தாது.

## 6. ஊழ்

பரி: 'ஊழாவது-இருவினைப் பயன் செய்தவனையே சென் றடைதற் கேதுவாகிய நியதி. ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம். நியதி, விதி என்பன ஒரு பொருட் கிளவி. இனிப் பொருளும் இன்பமும் கூறுவார் அவற்றின் முதற்காரண மாகிய ஊழின் வலி கூறு கின்றார்.'

நல்வினை தீவினையாகிய இருவினைப்பயனும் அவற்றைச் செய்தவனையே சென்றடைதற்குக் காரணமானது ஊழ் எனப்படும். பொருளின்பங்களுக்கு ஊழே முதற்காரணம் என்பதால், ஊழின்படியே பொருளின்பங்களை அடைய முடியும் என்பதாம். ஒருயிரைப் படைக்கும்போதே படைத்தவன் இன்னின்ன காலத்தே இன்னின்ன இன்ப துன்பம் அநுபவிக்கவேண்டும் என விதிக்கும் விதியே ஊழ். ஊழின்படியே எல்லாம் நடக்கின்றன. நம்மால் ஒன்றும் செய்யமுடியாது. அன்றெழுதினவன் அழித் தெழுதவா போகிறன் எனப் பொதுமக்களும் நம்பிக் கொண்டிருக்கின்றனர். இது ஊழ்வினை, தலைவிதி, தலை யெழுத்து எனவும் படும். ஊழ்-கடவுள் கட்டளை என்பதாம்.

இது தப்பான கருத்தேயாகும். ஊழின்படியே எல்லாம் நடக்குமானல் செய்வன செய்து தவிர்வன தவிர வேண்டியதில்லை யன்றே? எல்லாம் ஊழின்படியே நடைபெறுகின்றதெனில், ஒன்றையடையச் செய்யும் முயற்சிகளும், இரத்தல் இழிவென்பதும், குற்றங்கள் செய்யக்கூடாவென்பதும், நல்லவராக நடந்துகொள்ள வேண்டுமென்பதும் பயனில் கூற்ருக வன்றே முடியும்? ஊழின்படியே ஒருவன் திருடுகிருன், கொலை செய்கிருன், அவன் எப்படிக் குற்றவாளியாவான்? குற்றஞ் செய்தோரைத் தண்டிப்பது, கொலையாற் கொடியாரை வேந்தொறுப்பது (550) ஊழை மீறிய செயலன்றே? அவனைக் கொல்லவேண்டு மென்பது அவன் ஊழ். அப்படி யிருக்க எப்படிக் கொலை செய்தவன் குற்றவாளியாவான்? எனவே, இது சமயச் சார்பான கருத்தேயாகும். வள்ளுவர் கூறும் ஊழ் என்பது இத்தகையதன்று.

ஊழ்-முறைமை, உலகியல் நிகழும் முறைமை; உலகியலின் இயற்கை நிகழ்ச்சி. அதாவது பொருளும் காலமும் செயற்படும் தகுதியும், சுற்றுச் சார்பின் தகுதியும், நமது எண்ணத்தின், முயற்சியின், செயலின் தகுதிக்கு ஒத்து வருதலும் ஒவ்வாது வருதலுமாம். ஒத்துவருதல்-**ஆகூழ்** எனவும், ஒவ்வாது வருதல்-**போகூழ்** எனவும்படும். செயற்படுதல் - நிகழுதல். ஊழ் - மக்களின் எண்ணம் முதலியவற்றினுள் அடங்காமல் அப்பாற்பட்ட இயற்கையாக நிகழும் நிகழ்ச்சி; நமது எண்ணத்திற்கும் முயற்சிக்கும் செயலுக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமல் அதன் போக்கில் நிகழும் நிகழ்ச்சி. அந் நிகழ்ச்சியின் போக்கில் நாம் செய்வன ஆகும். இது ஆகூழ். அதற்கு எதிரிடையாகச் செய்வன ஆகா, இது போகூழ்.

ஒருவன் பனந்தோப்பிற்குப் பனம்பழத்திற்குச் செல்கிருன். பழம் விழுந்துகிடந்தால் எடுத்து வருவான்.

விழாமலிருந்தாலோ, அல்லது முன்னமே ஒருவன் வந்து எடுத்துச் சென்றிருந்தாலோ வெறுங்கையோடு திரும்புவான். திரும்பி வரும் வழியில் தொப்பென்று ஒரு பழம் விழுந்தால் ஆவலோடு எடுத்துச் செல்வான். பழமெடுத்து வரும்போது பனைக்குடையவன் கண்டு பிடுங்கிக்கொண்டாலும் கொள்வான். 'வந்துவிட்டுச் சும்மா போகிறாய் பாவம்! இந்தா' என அவன் தான் எடுத்துவந்த பழத்தில் ஒன்று கொடுத்தாலும் கொடுப்பான். பனம்பழம் கிடைக்காமல் வரும் வழியில் மாம்பழம் கிடைத்தாலும் கிடைக்கும். திருடனென்று பிடிபட்டாலும் படுவான். நாயோ, பாம்போ கடித்தாலும் கடிக்கும். வழியிலே இறந்தாலும் இறக்கலாம்.

ஒருவன் மாடு வாங்கச் சந்தைக்குப் போகிறான். அவன் குறித்துச் சென்ற தகுதியுள்ள மாடு சந்தைக்கு வந்திருக்காது. வந்திருந்தாலும் விலை இசையாது. விலை முடியும்போது மற்றொருவன் வாங்கிக்கொள்ளலாம். குறித்துச் சென்ற மாடு குறித்த விலையில் கிடைத்தாலும் கிடைக்கலாம். மாடு வாங்கப்போய் ஆடோ, எருமையோ வாங்கிவந்தாலும் வரலாம். மாடு கிடைக்காமல் மாடு வாங்கக் கொண்டுபோன பணத்தையும் இழந்து வெறுங்கையோடு வீட்டுக்கு வந்தாலும் வரலாம். திருட்டு மாட்டை வாங்கித் திருடனென்று பிடிபட்டாலும் பிடிபடலாம். மாடு முட்டி இறந்தாலும் இறக்கலாம்.

இவையெல்லாம் பொருளும் காலமும் செயற்படுத் தகுதியும், ஒருவன் எண்ணம், முயற்சி, செயல் இவற்றின் தகுதியும் ஒத்து வருதலும், ஒத்துவாராமையும் ஆகிய ஆகூழும். போகூழுமாகும்.

ஒருவனிடம் ஏதாவதொன்றை வேண்டி ஒருவன் செல்கிறான். அவன் அமைதியாக இருந்தால் அன்போடு

இவனை வரவேற்பான். அன்பிருந்தால் வேண்டுவன செய்வான். அவன் ஏதோ மனக்கவலையுடன் இருந்தால் இவனைப் பார்க்க உடன்படான். உடன்படினும் கடுகடுத்துப் பேசுவான். வேண்டுவனவும் செய்யான். அல்லது உதவிசெய்ய முன்வரும்போது வேருெருவன் குறுக்கே வந்துதடுத்தாலும் தடுக்கலாம். அவனை உதவும்படி தூண்டிஞலும் தூண்டலாம். இவன் விரும்பிச் சென்ற பொருள் அவனிடம் இல்லாதிருந்தாலும் இருக்கலாம். இவன் எண்ணிச் சென்ற காரியம் ஆகாமல் வேருெரு காரியம் ஆஞலும் ஆகலாம்.

இன்ன பலவெல்லாம் சுற்றுச் சார்பின் தகுதி, தமது எண்ணம் முயற்சி செயலின் தகுதிக்கு ஒத்துவருதலும் வாராமையும் ஆகும். உலகியலின் இயற்கை நிகழ்ச்சியாகிய இவ் வுண்மையை அறியாது, எண்ணியது முடிந்தால் மகிழ்வதும், முடியாவிட்டால் வருந்துவதும் ஆகாது என அவ் வூழின் தன்மை கூறுகிருர் இவ் வதிகாரத்தில். இதையே,

> ''ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்ருகும்
> அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
> நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
> எனையாளும் ஈசன் செயல்''

எனக் கடவுள் செயலெனக் கொண்டு கூறினர் பிற்காலத்தார். ஈசன் செயல் என்றது தலைவிதி, தலையெழுத்து என்பதையாகும். பொருளும் காலமும் தன் எண்ணம் முயற்சி செயலுக்கு ஒவ்வாதபோது, எண்ணிய வெண்ணங் கைகூடவில்லையே, முயன்றும் பயனில்லாமல் போய்விட்டதே என்று வருந்துவதில் பயனில்லை. பொருளும் காலமும் தன் எண்ணம் முதலியவற்றிற்கு ஒத்த தகுதியறிந்து ஒன்றைத் தொடங்கிப் பயன்பெற வேண்டும்.

இனி, ஒருவன் நல்லனவே செய்கிறான். ஒருவன் தீயனவே செய்கிறான். ஒருவன் எப்போதும் சோம்பலுடைய வனாகவே இருக்கிறான். ஒருவன் எப்போதும் சுறுசுறுப் பாகவே இருக்கிறான். விடாப்பிடி, விட்டுக்கொடுத்தல், முரட்டுத்தனம், எளிமைத்தனம், விருப்பு, வெறுப்பு, ஒழுக் கம், இழுக்கம், வாய்மை, பொய்மை, தன்னலம், பொது நலம், பொறாமை, பொறுமை, ஆசை, அடக்கம், அன்பு, அமைதி, ஈகை, இவறல், நட்பு, பகை ஆகிய இன்ன பல வெல்லாம் மக்களின் உடலமைப்புக் கேற்றவாறு அமையும் தனிப்பட்ட குணங்களாகும். இது **பிறவிக்குணம், இயற்கைக் குணம்** எனப்படும். இக் குணமும் உலகியலின் இயற்கை நிகழ்ச்சியாகிய ஊழுக்குத் துணை செய்யும் இவ் வூழ் மக்களின் இயற்கைக்கு அப்பாற்பட்டதாகும். இவ் வதிகா ரத்தின் 5-ஆம் குறளில் பொருளும் காலமும் செயலும் சுற்றுச்சார்பும், 3-ல் சுற்றுச்சார்பும் இயற்கைக்குணமும் அமைதல் காண்க.

# 7. மாறுபட்ட உரை

பரிமேலழகர் பெரும்பாலும் தமது கொள்கையை வலிந்து புகுத்துதலே யன்றிப் பல குறட்பாக்களுக்கு ஆசிரியர் கருத்துக்கு மாருகவும் உரை யெழுதியுள்ளார். உள்ளபடியே ஆசிரியர் கருத்துக்கும், தமிழர் பண்பாட்டுக்கும் மாறுபட்ட உரையைத் தெரிந்துகொள்ளுதல் இன்றி யமையாததாகும்.

1. சிறப்பீனும் செல்வமு மீனும் அறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு. (31)

சிறப்பு ஈனும் - சிறப்பையும் கொடுக்கும், செல்வமும் ஈனும் - செல்வத்தையும் கொடுக்கும், அறத்தின் ஊங்கு - ஆதலால் அறத்தை விட, உயிர்க்கு ஆக்கம் எவன்-மக்களுக்கு வேறு சிறப்பு என்ன? ஒன்றுமில்லை. சிறப்பு - மதிப்பு.

பரி: 'சிறப்பு ஈனும்-வீடு பேற்றையும் தரும், செல்வமும் ஈனும்-துறக்க முதலிய செல்வத்தையும் தரும், உயிர்க்கு அறத்தின் ஊங்கு ஆக்கம் எவன்-ஆதலான் உயிர்கட்கு அறத்தின் மிக்க ஆக்கம் யாது?

எல்லாப் பேற்றினும் சிறந்தமையின் வீடு சிறப்பெனப்பட்டது.

துறக்கம்-சுவர்க்கம், வானுலகம். 'அறன்வலி யுறுத்தல்' என்னும் அதிகாரத்தில் வீட்டுக்கும் துறக்கத்திற்கும் இடமேது? அறம் செய்வன தவிர்வன என்பதை மறந்தார் போலும்!

2. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (212)

தாள் ஆற்றித் தந்த பொருளெல்லாம் -ஒருவன் முயன்று ஈட்டிய பொருளெல்லாம், தக்கார்க்கு வேளாண்மை செய் தற் பொருட்டு-தகுதியுடையார்க்கு உதவுவதற்காகவே.

தாள் - முயற்சி. தக்கார் - ஓயாது உடல் தேய உழைத்தும் உண்ண உணவும், உடுக்க உடையும்,உறையக் குடிசையும் இல்லாத ஏழைப் பாட்டாளி மக்கள். உலக வாழ்க்கையின் அச்சாணி போன்ற ஏழைப் பாட்டாளி மக்களே ஏற்கத் தக்கவராவர். அன்னார் ஓயா உழைப்பால் வந்ததே செல்வரின் செல்வமாதலான் அப் பாட்டாளி மக்களுக்குக் கொடுத்தலே செல்வர் கடமையாகும். வேளாண்மை - உதவி.

பரி: 'தக்கார்க்கு - தகுதியுடையார்க்காயின், தாள் ஆற் றித் தந்த பொருளெல்லாம் - முயறலைச்செய் தீட்டிய பொருள் முழுவதும், வேளாண்மை செய்தற் பொருட்டு - ஒப்புரவு செய்தற் பயத்தவாம்.'

தகுதியுடைய செல்வர்களேதான் ஒப்புரவு செய்வா ராகலின், தக்கார் - தகுதியுடைய செல்வர் எனக் கொள்வ தில் பயன் இல்லை. தக்கார்க்குக் கொடுத்தற் பொருட்டு என்பதே நேர் பொருள்கோள்.

3. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு. (234)

நிலவரை நீள்புகழ் ஆற்றின் - நிலமுழுவதும் ஒருவன் நெடிய புகழைச் செய்வானாயின், புத்தேளுலகு புலவரைப் போற்றாது - வானுலகம் தேவர்களைப் போற்றாது.

புலவர் - தேவர். தேவருலகம் அங்கு வாழும் தேவ ரைப் போற்றாது மிகுபுகழுடைய இவனையே போற்றும் என்பதாம். புகழுடையோரை வெளியுலகும் புகழும்.

பரி : 'புத்தேள் உலகு புலவரைப் போற்ருது - புத்தேளுல கம் அவனை யல்லது தன்னை எய்தி நின்ற ஞானிகளைப் பேணுது. புகழுடம்பான் இவ் வுலகும் புத்தேளுடம் பான் அவ் வுலகும் ஒருங்கெய்தாமையின். அவன் (புகழுடையவன்) இரண்டுலகும் ஒருங்கெய்துவன்.'

புலவர் - ஞானிகள் எனவும், அவர் வானுலகை அடை வர் எனவும் கூறுதல், ஞானிகள் வீடடைவர் என்பதற்கு மாறுகொளக் கூறலாம். இங்கே ஞானிகளுக்கு யாதொரு தொடர்பும் இல்லை. ஒருரில் புதிதாகக் குடியேறினவன், அவ்வூர்த் தலைவனின் செல்வாக்குப் பெற்ருல், அவ்வூர் மக்கள் ஊர்த்தலைவனைப் போற்ருது அப் புதியவனையே போற்றுதல் இன்றுங் காணலாம். மாவலியின் புகழால் தேவர்கள் அவனைப் புகழத் தலைப்பட்டதனுலேயே இந்திரன் பொருமைகொண்டு அவனைக் கொல்வித்தான் என்பது புராணம்.

4. தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
அஃதிலார் மேற்கொள் வது (262)

தவமும் தவமுடையார்க்கு ஆகும் - துறவுபூண்டு நோன்பு நோற்றலும் இல்லற வொழுக்கங்களை நன்கு கடைப்பிடித்து ஒழுகியவர்க்கே முடியும், அஃதிலார் அதனை மேற்கொள்வது அவம்-அம் முற்றவம் இல்லாதவர் அதை மேற்கொள்வது வீணுகும்.

இல்லற வொழுக்கங்களை நன்கு கடைப்பிடித்து ஒழுகாதவர் மேற்கொண்டு செய்யும் தவங்கள் தப்பு மாகையால், 'தவமும் தவமுடையார்க்காகும்' என்ருர். இல்லறம் நன்கியற்றித் துறவறம் பயிலவேண்டும். இல்லை யேல், இல்லறத்தாசை யுண்டாகும்.

பரி : 'தவமும் தவமுடையார்க்கு ஆகும்-பயனே யன்றித் தவந்தானும் உண்டாவது முற்றவ முடையார்க்கே,

அதனை அஃதிலார் மேற்கொள்வது அவம்-ஆகலான், அத் தவத்தை அம் முற்றவ மில்லாதார் முயல்வதும் பயனின் முயற்சியாம்.'

'பயனே யன்றி' என்பதால் முற்றவம் என்பது முற் பிறப்பில் செய்த தவத்தைக் குறிக்கும். முற்பிறப்பில் தவம் செய்தவர்க்கே இப் பிறப்பில் தவம் ஆகும் என்பது, முற்றவ மில்லார் முயலுதல் வீண் என்று, அதிகாரத்தோடு மாறு படுதல் காண்க.

5. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
மீண்டு முயலப் படும். (265)

வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் - விரும்பிய வற்றை விரும்பியபடியே அடைதலால், செய்தவம் மீண் டும் முயலபடும் - செய்கின்ற தவம் மேன்மேலும் முயற் சிக்கப்படும். வேண்டிய வேண்டியாங் கெய்தல் 42, 264-ஆம் குறள் - குழந்தையுரை பார்க்க. (துறவிகளுக்கு இல்லறத்தார் வேண்டிய உதவி செய்யப் பெறுவதால் அவர் எண்ணியதைச் •செய்ய வல்லவ ராகின்றனர். 264 குழந்)

பரி: 'வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் - முயன்றால் மறுமைக்கண் தாம் வேண்டிய பயன்கள் வேண்டிய வாறே பெறலாம் ஆதலால், செய்தவம் ஈண்டு முயலப் படும் - செய்யப்படுவதாகிய தவம் இம்மைக்கண் அறிவுடையோரான் முயலப்படும். மேற்கதி, வீடு பேறுகள் தவத்தானன்றி எய்தப்படா வென்பதாம்.

மேற்கதி - உயர்பிறப்பு. இது தவத்தின்கண் சோர் வில்லாமல் முயலவேண்டும் என்பதே யன்றி மறுமைப் பயன் குறித்ததன்று. 264-ஆம் குறளுக்கு இது மாறுபட்ட கருத்தாகும். தவம் செய்வது இம்மையிலேயே யாகலான் 'ஈண்டு' என்ற பாடம் பயனில்லதாகும்.

**6. எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றும்**
**கள்ளாமை காக்கதன் நெஞ்சு. (281)**

எள்ளாமை வேண்டுவான் என்பான் - பிறரால் இகழாமையை விரும்புவோ னென்பான், எனைத் தொன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க - யாதொரு பொருளையும் திருட நினையாதபடி தன் நெஞ்சைக் காக்கக் கடவன். திருடுவோனை உலகத்தார் இகழ்வர்.

பரி: எள்ளாமை வேண்டுவான் என்பான் - வீட்டினை இகழாது விரும்புவான் இவனென்று தவத்தோரான் நன்கு மதிக்கப்படுவான், எனைத்தொன்றும் கள்ளாமை தன் நெஞ்சு காக்க - யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை தன் நெஞ்சினைக் காக்க.

'வீட்டினை இகழ்தலாவது - காட்சியே அளவையாவ தென்றும், நிலம் நீர் தீ வளி யெனப் பூதம் நான்கே யென்றும், அவற்றது புணர்ச்சி விசேடத்தால் தோன்றிப் பிரிவான் மாய்வதாய உடம்பின் கண்ணே அறிவு மதுவின்கட் களிப்புப்போல வெளிப்பட்டு அழியு மென்றும், இறந்த வுயிர் பின் பிறவா தென்றும், இன்பமும் பொருளும் ஒருவனாற் செய்யப்படுவன வென்றும் சொல்லும் உலோகாயத முதலிய மயக்க நூல்களைத் தெளிந்து, அதற்கேற்ப வொழுகுதல்.'

இங்கு வீடு என்னும் சொல்லுக்கு இடமே இல்லை. மேலும், இது பிற சமய மறுப்புரையேயன்றி இக் குறளின் விரிவுரையன்று. கள்ளத்தனத்தை இகழுதல் உலகோரேயன்றித் தவத்தோரன்று.

**7. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாம் கொலையஞ்சிக்**
**கொல்லாமை சூழ்வான் தலை. (325)**

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம்-தீமை நிலைக்கு அஞ்சி அத் தீமையை விட்டவர்கள் எல்லோரினும், கொலையஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை - கொலைப் பழிக்கு அஞ்சிக் கொல்லாமையாகிய அறத்தைக் கருதுபவன் முதன்மை யானவன்.

தீமைநிலை - தீமை புரிந்து வாழுநிலை. தீமைகளுக்கு அஞ்சி அவற்றை விட்டவர் பலரினும், கொலைக் கஞ்சிக் கொலையை விட்டவரே சிறந்தவராவர். 'ஒழுக்கத்து நீத்தார்' (21) என்னும் குறளுரை பார்க்க.

பரி: 'நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம்-பிறப்பு நின்ற நிலையை அஞ்சிப் பிறவாமைப் பொருட்டு மனை வாழ்க்கையைத் துறந்தா ரெல்லாருள்ளும், பிறப்பு நின்ற நிலையாவது - இயங்குவ, நிற்ப என்னும் இருவகைப் பிறப்பினும் இன்ப மென்ப தொன்றின்றி உள்ளன வெல்லாம் துன்பமே யாய நிலைமை.'

நிற்ப - மரவகை. மரஞ்செடி கொடிகளுக்குத் துன்ப நிலை தெரியுமெனின், அஃவயேன் யோக ஞானங்களெய் திப் பிறப்பறுக்க முயலுவதில்லை! இது, உலக வாழ்வே துன்ப நிலை யென்னும் சமயக் கருத்தேயாகும்.

8. நன்றாகு மாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கம் கடை. (328)

நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - வேள்விக் கண் கொன்றால், நன்மையைத் தரும் செல்வம் பெரிது ஆகும் என்று பிறர் கூறினும், கொன்று ஆகும் ஆக்கம் சான்றோர்க்குக் கடை - ஓர் உயிரைக் கொல்வதால் வரும் செல்வம் பேரறிஞர்க்கு இழிந்ததாகும்.

நன்று ஆகும் ஆக்கம் - நன்மையைத் தரும் வேள்விப் பயன். இது வேள்வி மறுப்பு.

பரி: 'நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் - தேவர் பொருட்டு வேள்விக்கண் கொன்றால் இன்பமிகும் செல்வம் பெரிதாமென்று இல்வாழ்வார்க்குக் கூறப் பட்டதாயினும், சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை - துறவா னமைந்தார்க்கு ஒருயிரைக் கொல்ல வரும் செல்வம் கடை. இன்ப மிகுஞ் செல்வமாவது - தாமும் தேவராய்த் துறக்கத்துச் சென்றெய்தும் செல்வம்.'

இல்லறத்தோர் வேள்வி செய்தல் உண்டெனக்கூறுதல் ஆரியக் கொள்கையே யாகும். தமிழர்க்கு வேள்வி யுடன் பாடன்று. வேள்விப்பயன் தேவனாகித் துறக்கமடைத லென்பதும் அக் கொள்கையே.

9. பரி: 'கொலை வினையர் (329) என்றதனால், வேள்விக் கண் கொலையன்மை யறிக.'

'வேள்விக்காகவே பசுக்கள் பிரமனால் படைக்கப்பட் டிருக்கின்றன. அந்த வேள்வி செய்தால் உலகமெல் லாம் நன்மை யடைகின்றது. ஆகையால், வேள்வி யில் செய்யும் உயிர்க்கொலை கொலையாகமாட்டாது. (மனு, அ-5. சு-39)

என்பதற்கு மாறுபட்டதாகும்.

10. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (350)

பற்றற்றான் பற்றினைப் பற்றுக - பற்றற்றவனது அன்பை மனத்துட் கொள்க, பற்றுவிடற்கு அப்பற்றைப் பற்றுக - ஆசையை ஒழித்தற்கு அவ்வன்பையே உறுதி யாகக் கொள்க.

முற்றத் துறந்தவரது அன்பே பற்றறுதற்குக் ஏது வாகும். பழக்கம் பற்றறற்குக் காரணமாம்.

பரி: பற்று அற்ருன் பற்றினைப் பற்றுக - எல்லாப் பொரு ளையும் பற்றி நின்றே பற்றற்ற இறைவன் ஓதிய வீட்டு நெறியை இதுவே நன்னெறி யென்று மனத்துட் கொள்க, அப்பற்றைப் பற்றுக பற்றுவிடற்கு - கொண்டு, அதன்கண் உபாயத்தை மனத்தாற் செய்க, விடாது வந்த பற்று விடுதற்கு.

அதன்கண் உபாயமென்றது - தியான சமாதிகளை. விடாதுவந்த பற்றென்பது-அநாதியாய் வரும் உடம் பின் பற்றினை.'

அநாதி-தொன்று தொட்டு. இறைவன் ஏன் பற்றற வேண்டும்? வீடடைவதற்கா? பற்று அற்ருன் பற்று என் பதற்கு-இறைவன் ஓதிய வீட்டு நெறி என்பது பொருந்தா வுரையேயாகும். உடம்பிற்பற்று - உடம்பின் மீதுள்ள பற்று. இங்குப் பொருட்பற்றே யன்றி உடம்பிற் பற் றன்று. உண்மைத் துறவிகளிடம் அன்பு கொள்ளுதல் பற்றறுதற்குக் காரணம் ஆகும் என்பதே கருத்தாகும்.

11. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானு மாணுப் பிறப்பு. (351)

பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான்-மெய்ப்பொரு ளல்லாதவற்றை மெய்ப்பொருள் என்று எண்ணும் மயக்க அறிவினை யுடையவன், மாணுப் பிறப்பு ஆகும்-மாண்பில்லாத பிறப்பினன் ஆவான்.

மருள்-மயக்க வுணர்வு. பொய்ப் பொருளை மெய்ப் பொருளென்று உணர்பவன் இழிந்தவனுவான்.

பரி: 'பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான் ஆம்-மெய்ப்பொரு ளல்லாதவற்றை மெய்ப் பொருள் என்று உணரும் விபரீத உணர்வானே உள தாம், மாணுப் பிறப்பு-இன்பமல்லாத பிறப்பு.

அவ் விபரீத வுணர்வாவது-மறுபிறப்பும், இரு வினைப்பயனும், கடவுளும் இல்லையெனவும், மற்றுமித் தன்மையவும் சொல்லும் மயக்க நூல் வழக்குகளை மெய்ந் நூல் வழக்கெனத் துணிதல். நரகர், விலங்கு, மக்கள், தேவர் என்னும் நால்வகைப் பிறப்பினு முள்ளது துன்பமே யாகலின், 'மாணாப் பிறப்பு' என்றார்,'

இது பிற மத நூற் கொள்கை மறுப்பே யாகும். மயக்க வுணர்வான் துன்பப் பிறப்பு உண்டாகு மென் பது சமயக் கருத்து. நால்வகைப் பிறப்பினும் துன் பம் எனின், உலகத்தைக் கடவுள் எதற்காகப் படைத் தனர்? அல்லது இன்பப் படைப்பாகவே படைத் திருக்கலாமே? இங்கு ஒன்றை மற்றொன்றாக உணரும் மயக்க வுணர்வு பற்றியதே யன்றி பிறப்புக்கு இங்கு இடமில்லை. மயக்கவுணர்வினன் துறவுக்குத் தகுதி யுடையவ னல்லன் என்பதே நேர்பொருளாகும்.

12. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும். (388)

முறை செய்து காப்பாற்றும் மன்னவன்-குற்றஞ் செய்தாரைத் தண்டித்து முறை செய்து, நாட்டு மக்களைக் காக்கும் அரசன், மக்கட்கு இறை என்று கருதப்படுவான் - தலைவன் என்று மக்களால் மதிக்கப்படுவோனே நல்ல அரசனாவான்.

பரி: 'முறை செய்து காப்பாற்று மன்னவன்-தான் முறை செய்து பிறர் நலியாமல் காத்தலையும் செய்யும் அரசன், மக்கட்கு இறையென்று வைக்கப்படும்-பிறப்பான் மகனே யாயினும், செயலான் மக்கட்குக் கடவு ளென்று வேறு வைக்கப்படும்.'

தான் முறை செய்து பிறர் நலியாமல் என்பது இரு வகைப்பட்ட பொருளே இறை-கடவுளெனில், இறை மாட்சி-கடவுளின் மாட்சியா? முறை செய்து காப்பாற்று வோனை மக்கள் தம் தலைவனாகக் கொள்வர் என்பதே நேர் பொருள்.

13. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து. (413)

செவியுணவின் கேள்வி உடையார்-செவியுணவாகிய கேள்வியினை யுடையார், நிலத்து அவியுணவின் ஆன்று ரோடு ஒப்பர்-நிலத்தில் குறைந்த உணவினை யுடைய நிறைந்த அறிவினை யுடையாரை யொப்பர்.

அவிதல்-குறைதல். ஆன்றோர்கள் நிறையுணவினை விரும்பாது குறையுணவுண்டு, புலனடக்கிப் புத்தொளி பெறுவாராகையால், 'அவியுணவின் ஆன்றோர்' என்றார். கேள்விச் செல்வமுடையோர் ஆன்றோர் போல மதிக்கப் படுவர்.

பரி: நிலத்து அவியுணவின் ஆன்றாரோடு ஒப்பர்-நிலத்தின் கண்ணா ராயினும் அவியுணவினையுடைய தேவரோ டொப்பர். துன்ப மறியாமையால் தேவரோடொப் பர் என்றுங் கூறினார்.'

'அவிசொரிந்து' (259) என்னும் குறளில் வள்ளுவர் வேள்வியை மறுப்பதால், அவியுணவினையுடைய தேவர் சிறந்தவரெனக் கூறார். தேவர்கள் பொறாமையே உரு வானவ ராகையால் துன்பமறியாதவர் என்பது எங்ஙனம் பொருந்தும்?

14. உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல். (442)

உற்ற நோய் நீக்கி-தனக்கு உற்ற துன்பத்தை நீக்கி, உறாமை முன் காக்கும் பெற்றியார்-அது பின்னும் உறாமல் முன்னறிந்து காக்கும் தன்மையரை, பேணிக்கொளல் - விரும்பித் துணையாகக் கொள்க.

வந்த துன்பத்தை நீக்கி, அது பின்னர் வராமல் காக்கும் பெரியாரைத் துணைக்கொள்ள வேண்டும்.

பரி: 'உற்ற நோய் நீக்கி-தெய்வத்தானாக, மக்களானாகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறறிந்து நீக்கி, உறாமை முற்காக்கும் பெற்றியார் - பின் அப் பெற்றியன வாரா வண்ணம் முன்னறிந்து காக்கவல்ல தன்மையினை யுடையாரை, பேணிக்கொளல்-அரசன் அவர் உவப்பன செய்து துணைக்கொள்க.

தெய்வத்தான் வருந் துன்பங்களாவன - மழையினதின்மை மிகுதிகளானும், காற்றுத் தீப் பிணியென் றிவற்றானும் வருவன. அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யுஞ் சாந்திகளான் நீக்கப்படும்.'

இது ஆரியக் கொள்கை. வருணசெபம் செய்தல் போன்ற பித்தலாட்டங்களை அறிக. நோய் என்பதற்குத் துன்பம் என்னும் பொருளிருக்க, இவ்வாறு கூறுதல் மாறுகொளக் கூறலேயாகும். 'ஆகவே, புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறாயிற்று' வள்ளுவர் புரோகிதரென்னும் பெயரையோ, கருத்தையோ கூறாமலிருக்க, இங்கு புரோகிதரைப் பெரியோரெனல் பொருந்தாது.

15. அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல். (543)

அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது-அறவோர் செய்த நூலுக்கும், அந்நூலில் கூறப்படும்

அறத்திற்கும் அடிப்படையாய் நின்றது, மன்னவன் கோல்- அரசனது செங்கோல்.

அரசன் முறை செய்யாவிட்டால் அறவோரின் நூல்களைப் போற்றுவாரும், அறத்தைக் கடைப்பிடித்து நடப்பாரும் நாட்டில் குறைவாராதலால், அவ் விரண்டிற்கும் அடிப்படையாய் நிற்பது மன்னவன் கோல் என்றார். அறவோர் நூல் செய்யவும் முடியாதென்பதாம்.

பரி : ' அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது- அந்தணர்க் குறித்தாய வேதத்திற்கும், அதனுற் சொல்லப்பட்ட அறத்திற்கும் காரணமாய் நிலைபெற்றது, மன்னவன் கோல் - அரசனுற் செலுத்தப்படுகின்ற செங்கோல்.'

வேதமும் அதனுற் கூறப்படும் அறமும் தமிழர்க் கேலாமையின் இவ் வுரை பொருந்தாது. வேதங்கள் கூறும் அறங்கள் என்ன ? வேள்விகள் செய்யும் முறையும், பகைவரைக் கொல்லவேண்டும் என்னும் வேண்டுகோளுந் தானே ? இவற்றைத் தமிழரசர் எதற்காகக் காக்க வேண்டும் ? வேதமும் அறமும் அநாதி என்பதும் பொருந்தாக் கூற்றே.

16. ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின். (560)

காவலன் காவான் எனின் - அரசன் முறை செய்யானயின், ஆபயன் குன்றும் - அவன் நாட்டின்கண் வாழும் மக்களது முயற்சியால் ஆகும் பலன் குறையப் பெறும், அறுதொழிலோர் நூல் மறப்பர் - முதன்மையான தொழிலுடையோர் தம் தொழிலுக்குரிய அறிவை மறந்து விடுவர்.

ஆபயன்-வினைத்தொகை. ஆகின்ற பயன். ஆ-ஆதல். அறுதொழில் - அறுத்த தொழில். அறுத்தல் - அறுதி

செய்தல், வரையறை செய்தல், இன்றியமையாத சிறந்த தொழிலென அறுதி செய்யப்பட்ட தொழில்கள். அவை உழவு, வாணிகம், நெசவு, தச்சு, கொல் முதலிய முதன்மை யான தொழில்கள். கொடுங்கோலரசன் நாட்டில் அமைதி யிராதாகையால் இத் தொழில்கள் ஒழுங்காக நடைபெறு வென்பதாம். மறத்தல் - முயன்று செய்யாமை. நூல் - அத் தொழில்களின் நுட்ப அறிவை யுணர்த்திற்து. அறு தொழில் - வினைத்தொகை.

பரி: 'காவலன் காவான் எனின் - காத்தற்குரிய அரசன் உயிர்களைக் காவானாயின், ஆபயன் குன்றும் - அற னில்லாத அவனாட்டுப் பசுக்களும் பால் குன்றும், அறுதொழிலோர் நூல் மறப்பர் - அந்தணரும் நூல்களை மறந்துவிடுவர்.

பசுக்கள் பால் குன்றியவழி அவி இன்மை யானும், அது கொடுத்தற்குரியார் மந்திரம் கற்பம் என்ப ஓதாமையானும் வேள்வி நடவாதாம். வானம் பெயலொல்லா என்பதாயிற்று?

அறனில்லாதவன் நாட்டுப் பசுக்கள் பால் குறையு மென்பது புராணக் கூற்று. அவி - வேள்வித்தீயில் ஊற் றும் நெய் முதலியன. அவி - தேவருணவு. வேள்வியால் மழை பெய்யும் என்பது ஆரியக் கொள்கை. பிராமணர் வேதமோதல் தமிழ் மரபன்று.

17. ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்
ஏற்றுணர்வார் முன்ன ரிழுக்கு. (716)

வியன் புலம் ஏற்று உணர்வார் முன்னர் இழுக்கு - விரிந்த நூற்பொருளைக் கேட்டு அறியவல்லவர் முன்னிலை யில் குற்றமுண்டாகும்படி சொல்லுதல், ஆற்றின் நிலை தளர்ந்து அற்று - நல்வழியில் நின்றவன் அதினின்றும் தவறிய து போலும்.

நல்லவழியில் நடந்தவன் தவறியதுபோலும் நல்லோரவையில் பொல்லாத சொல்லுதல்.

பரி: 'ஆற்றின் நிலை தளர்ந்தற்று - வீடெய்தற்பொருட்டு நன்னெறிக்கண் நின்றானொருவன் அந்நெறியினின்றும் நிலைதளர்ந்து வீழ்ந்தா லொக்கும், வியன் புலம் ஏற்று உணர்வார் முன்னர் இழுக்கு - அகன்ற நூற்பொருளை யுட்கொண்டு அவற்றின் மெய்ம்மை யுணரவல்லாரவைக்கண் வல்லானொருவன் சொல்லிழுக்குப் படுதல்.'

ஆறு என்பதற்குத் துறவற நெறி என்பதும், வீடு என்பதும் வலிந்து கொண்ட பொருளே.

18. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டின் நிலை (786)

கேடு அறியா - பயிர்நோய் முதலியவற்றால் கெடுதலை அறியாததாய், கெட்ட விடத்தும் வளங்குன்றா நாடு-ஓரிரு போகம் கெட்டதாயினும் வளங்குன்றாத நாட்டினை, நாட்டின் தலை என்ப - எல்லா நாடுகளிலும் முதன்மையான நாடென்று சொல்லுவர் அறிவுடையோர்.

ஒரு கெடுதலும் இன்றி விளையும் நாடே நன்னாடாகும். மழையின்மை, மிகுமழை, பயிர்நோய் முதலியவற்றால் ஒன்றல்லது இரண்டு போகம் விளைவு கெட நேரினும், அதனால் உணவுத்தட்டுதல் உண்டாகாதபடி மிகுதியாக விளையும் நாடே சிறந்த நாடென்பார், 'கெட்டவிடத்தும் வளங்குன்றா நாடு நாட்டின் தலை' என்றார்.

பரி: 'கேடு அறியா - பகைவரால் கெடுதலறியாததாய், கெட்டவிடத்தும் வளங்குன்றா நாடு - அரிதிற் கெட்டதாயினும் அப்பொழுதும் தன் வளங்குன்றாத நாட்

டினை, நாட்டின் தலை என்ப - எல்லா நாட்டினும் தலை யென்று சொல்லுவர் நூலோர்.

கேடறியாமை - அரசனாற்றலானும், கடவுட் பூசை யறங்களென் றிவற்றது செயலானும் வரும்.'

பகைவரான் அழிக்கப்படின் வளங் குன்றுமை கூடாமையின் இது பொருளன்று. கடவுட் பூசை அறங்க ளால் நாட்டிற் பகைவர் புகாரென்பது ஆரியக் கொள் கையே.

19. பொருளானா மெல்லாமென் றியா திவறும்
மருளானா மாணாப் பிறப்பு. (1002)

பொருளான் எல்லாம் ஆம் என்று - பொருளினால் எல் லாம் உண்டாகும் என்று அறிந்து அதனை ஈட்டி, ஈயாது இவறும் மருளான்-பிறர்க்குக் கொடுக்காமல் கையழுத்தம் செய்யும் மயக்கத்தினால், மாணாப் பிறப்பு ஆம்-அமைதியில் லாத வாழ்க்கை யுண்டாகும்.

பிறப்பு - பிறப்பின் பயனாக வாழ்க்கையை யுணர்த் திற்று. பொருளால் எல்லாம் உண்டாகு மென்று ஈட்டிப் பிறர்க்குக் கொடாதவர் வாழ்க்கையில் அமைதி யிருக்காது.

பரி : 'மாணாப் பிறப்பு ஆம் - நிறைதலில்லாத பேய்ப்பிறப்பு உண்டாகும். பேய்ப் பிறப்பு - உணவுகள் உளவா யிருக்கப் பசித்து வருந்தும் பிறப்பு.'

இது, மறுபிறப்பென்னும் கொள்கை புகுத்தல். உலோபிகட்கு இத்தகைய பிறப்பு உண்டாகுமென்பது கற்பனையே. பிசினர்கள் வாழ்க்கையில் அமைதி இருக்காது என்பதே நேர் பொருள்.

20. கருவியுங் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையு மாண்ட தமைச்சு. (631)

செய்யும் அருவினையும் - செய்யப்படும் அரிய செயலும், கருவியும் - அதற்கு வேண்டுங் கருவியும், காலமும்-காலமும், செய்கையும் மாண்டது அமைச்சு - அச் செயலைச் செய்யும் வழியையும் பொருந்த எண்ணியறிய வல்லானே அமைச்சனாவான்.

வினை, கருவி, காலம், அவ்வினை செய்யும் வழி ஆகிய நான்கினையும் பொருந்த எண்ணி யறிய வல்லவனே அமைச்சனாவான். கருவி - பொருளும் படையும்.

பரி : 'கருவியும் - வினை செய்யுங்கால் அதற்கு வேண்டும் கருவிகளும், காலமும் - அதற்கேற்ற காலமும், செய்கையும் - அது செய்யுமாறும், செய்யும் அருவினையும் - அவ்வாற்றிற் செய்யப்படும் அரிய வினைதானும், மாண்டது அமைச்சு - வாய்ப்ப எண்ணவல்லவனே அமைச்சனாவான்.

1. கருவிகள் - தானையும், பொருளும். 2. காலம் - அது தொடங்கும் காலம். செய்கை யெனவே, 3. அது தொடங்கு முபாயமும், 4. இடையூறு நீக்கி முடிவு போக்குமாறும் அடங்கின. சிறிய முயற்சியால் பெரிய பயன் தருவதென்பார் 5. அருவினை என்றார். இவை ஐந்தனையும் வடநூலார் மந்திரத்திற் கங்கமென்ப.'

மந்திரம் - அமைச்சர் குழு. குடிகாத்தல், கற்றறிதல் (632) என்பவற்றைப் பிறர் இரு பகுதியாகப் பிரிப்பதை மறுக்கும் இவர். செய்கையை இரண்டாகப் பிரிக்கிறார். உபாயத்தோடு தொடங்கி இடையூறு நீக்கி முடிப்பது தானே செய்கை?

**21. வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ**
**டைந்துடன் மாண்ட தமைச்சு. (632)**

வன்கண் - அஞ்சாமையும், குடிகாத்தல் - குடிகளைக் காத்தலும், கற்றறிதல் - அறநூல்களைக் கற்றறிதலும், ஆள் வினையோடு-முயற்சியும் ஆகிய நான்கும், ஐந்துடன் மாண் டது அமைச்சு - ஐம்பொறித்தூய்மையுடன் திருந்த உடை யவனே அமைச்சனாவான்.

வன்கண் முதலிய நான்கும் ஐம்பொறித் தூய்மை யுடன் திருந்த உடையவனே அமைச்சனாவான். வன்கண் முதலிய நான்கனோடு ஐம்பொறித் தூய்மையும் உடையவ னென்க. 'ஆள்வினையோடு' என்னும் ஓடு- பிரிந்து கூடும் எண்ணோடு.

பரி : 'வன்கண் - வினை செய்தற்கண் அசைவின்மையும், குடிகாத்தல்-குடிகளைக் காத்தலும், கற்று அறிதல்- நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும்' ஆள்வினை - முயற்சியும், ஐந்துடன் மாண்டது அமைச்சு - மேற்சொல்லிய (631 குறளில்) அவ் வங் கங்கள் ஐந்துடனே திருந்த உடையவனே அமைச்ச னாவான்.

இந்நான்கனையும் மேற்கூறியவற்றோடு(631) தொகுத் துக் கூறியது, அவையும் இவற்றோடு கூடியே மாட்சி மைப்பட வேண்டுதலானும், அவற்றிற்கு ஐந்தென் னும் தொகை பெறுதற்கும். இனி, இதனை ஈண்டெண் ணிய வற்றிற்கே தொகையாக்கி, குடிகாத்தல் என்பத னைக் குடிப்பிறப்பும், அதனை யொழுக்கத்தால் காத்தலு மெனப் பிரிப்பாரும், கற்றறித லென்பதனைக் கற்றலும் அறிதலும் எனப் பிரிப்பாருமுளர்.'

ஐந்துடன் என்பதற்கு 631-ல் வரும் ஐந்துடன் எனப் பொருள் கொண்டதே தப்பு. ஒரு குறளின் பொருள், அடுத்த குறளில் தொகை பெறுதலென்பது புதுமையே யாகும். மேலும் 631-ல் நான்கு பொருள்தான் கூறப்பட்

டுள்ளன. இவர் வடநூற் கொள்கையை எண்ணி ஐந்தாக வலிந்து தொகை கொண்டதே யாகும்.

22. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. (18)

வானம் வறக்குமேல்-மழை பெய்யாதாயின், ஈண்டு வானோர்க்கும் சிறப்பொடு பூசனை செல்லாது-இங்கு வரும் தேவர்களுக்கும் சிறப்பாக வழிபாடு நடவாது.

வழிபாடு - முகமன் - அன்போடு வரவேற்றுப் போற்றுதல். வானோர்-அயல் நாடர். வடபுலத்தாரிற் காண்க. மழை பெய்யாதாயின் அன்போடு அயலாரைப் போற்றும் தமிழர் பண்பாடாகிய அச் செயலும் நடைபெறுதென்பதாம்.

பரி : 'வானோர்க்கும் ஈண்டு சிறப்பொடு பூசனை செல்லாது- தேவர்கட்கும் இவ்வுலகின் மக்களாற் செய்யப்படுந் விழாவும் பூசையும் நடவாது, வானம் வறக்குமேல்- மழை பெய்யாதாயின்.'

'சிறப்பொடு' என்னும் ஒடு உடனிகழ்ச்சிப் பொருண்மையதன்று. அன்பொடு விருந்து செய்தான் - அன்பாக விருந்து செய்தான் என்பதுபோல, சிறப்பாகப் 'பூசனை நடவாது என 'ஆக' என்னும் பொருட்டு. சிறப்பு-திருவிழா எனவும், பூசனை-தினசரி நடக்கும் பூசை எனவும் கொண்டது உருவ வழிபாடு புகுத்தலேயாகும். கோயில்களில் நடக்கும் திருவிழாவையும், தினப் பூசையையும் வள்ளுவர் கூறியிருப்பாரானல், தமிழ் நாட்டில் உள்ள கோயில் கடவுளரை 'வானோர்' என வேறு இடத்தில் உள்ளவராகக் கூறியிருக்க மாட்டார். மேலும், 'ஈண்டு' என்னும் சொல் இங்குள்ள கோயிற் கடவுளரைக் குறிக்கும்போது வேண்டாச் சொல்லே யாகும். மழையின்றேல் அயல் நாடர்க்கு

ஈண்டு சிறப்பாகப் பூசனை செல்லாது என்பதே நேர் பொருள். வள்ளுவர் காலத்தில் தமிழ்நாட்டில் உருவ வழிபாடு இருந்திருந்தால் கோயில் முதலியவற்றைக் கூறி யிருப்பாரன்றோ? மழையின் இன்றியமையாமையை விளக்க, அயலாரை அன்போடு வரவேற்றுப் போற்றும் தமிழரது இன்றியமையாத பண்பாட்டின்மேல் வைத்துக் கூறியதேயாகும்.

**முடிவுரை :** பரிமேலழகர் உரையிலுள்ள அயற்கருத்துக் கள் முழுவதையும் ஆராயப் புகின், மணற் சோற்றில் கல்லாய்வதனோடொக்கும். ஆனால், தமிழர் தனிச்சொத் தாகிய இன்பத்துப் பாலில் அவர் கையை வைக்கவில்லை. பொருட்பாலினும் அறத்துப்பாலிலேயே ஆரிய நஞ்சு அத்தனையுங் கலந்துவிட்டார். அதுதானே பிற்காலத் தமிழர்களை ஏமாற்ற வழி? திருக்குறள் அறத்துப்பாலில் கூறும் அறங்கள் தமிழர் அறங்கள் அல்ல. அவை ஆரியர் அறங்கள். ஆரியர் அறங்களையே வள்ளுவர் நூலாக்கி வைத்துள்ளார். ஆரியர் அறங்கள் தமிழர் அறங்களிலும் மேலானவை. அதனாலேயே பழந்தமிழர் அவற்றை மேற் கொண்டனர் எனப் பிற்காலத் தமிழர் நம்பினாற்றானே தமிழ்ப் பற்றின்றி ஆரியத்துக் கடிமையாகமுடியும்? அப் போதுதானே ஆரிய மக்கள் நல்வாழ்வு வாழலாம். பரிமே லழகரின் இனப்பற்றே பற்று! அதுதானே தமிழர்க்கில்லை! இச்சிறு ஆராய்ச்சி நூல் தமிழர்க்கு அதை உண்டாக்கு மாக. பரிமேலழகரின் மயக்க மருந்துண்டு மயங்காமல், தனித்தமிழ் முப்பாலுண்டு தமிழ் வாழ்வு வாழ்வார்களாக.

—

OFFICE OF THE DIRECTOR OF
5 JUN 1975